



# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –404

# தேசியத்தலைவர் பிரபாகரன் இறந்துவிட்டார்!

## விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாண அரசியல் துறை பொறுப்பாளர் தயாமோகன் கருத்தால் சர்ச்சை




# துாள் கடத்தும் உறுப்பினர்கள் இனி தமிழரசுக்கட்சியில் இல்லை!



# உள்ளூராட்சிமன்ற தேர்தல் விவகாரத்தில் ரணிலின் ராஜதந்திர நகர்வு!

பா.அரியநேத்திரன்



# ஆயுதகட்சிகள் துரோகிகள் என்றால்? தமிழரசுக்கட்சி துரோகிகள் இல்லையா?

என்.கே.சிவாஜிலிங்கம்

## 'தமிழ் மக்களுக்கான விடுதலையை பெற்றுக்கொடுப்பேன் அல்லது அந்த மக்களுக்காக எனது உயிரை விடுவேன்'

பழ. நெடுமாறன் ஐயாவினது அறிக்கையானது மிகப்பெரிய ஒரு சர்ச்சையையும் மிகப்பெரிய செய்தி ஒன்றையும் கிளப்பியிருக்கின்றது. அதாவது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் அவர்கள் உயிருடன் இருக்கின்றார். மிகப்பெரிய திட்டத்துடன் திரும்பி வந்திருக்கின்றார் என்று சொல்லியிருக்கின்றார். இந்த செய்தியினால் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றாரா இல்லை என்ற விடயத்தில் கேள்வி எழும்புகின்றன. இது தொடர்பாக மக்களுக்கு இருக்கக்கூடிய சந்தேகம். மக்கள் குழம்பியுள்ள சூழல். தலைவர் செய்த தியாகத்தை கொச்சைப்படுத்துகின்ற சூழல் இவை எல்லாமே பலரிடம் இருக்கின்ற கேள்விகள் தான். அந்த கேள்விகளுக்கான பதிலை சொல்ல வேண்டிய கடமையும் பொறுப்பும் எங்களுக்கு இருக்கின்றது. அந்த அடிப்படையில் ஐயா பழ. நெடுமாறன் அவர்களின் உணர்வை, அவர்கள் கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் போராட்டங்களுக்கு ஆற்றிய பங்கை நாங்கள் குறைத்து மதிப்பிடவில்லை. அவர் மீது எப்பொழுதும் அளப்பெரிய அன்பும் மரியாதையும் இருந்து கொண்டே இருக்கும் ஆனால் அவரை சிலர் தவறான முறையில் பயன்படுத்துகின்றார்கள்.

எல்லா மாவீரர்களுக்கும் எப்படி தலைவர் கௌரவத்தை கொடுத்தாரோ அதே கௌரவத்தை தலைவருக்கும் அதைவிட மேலாக கொடுத்து அதையொரு எழுச்சி நிகழ்வாக நாங்கள் செய்து தலைவருக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி இது தொடர்பான அறிக்கையையும் பி.பி.சி தமிலோசைக்கு ஒரு செவ்வியையும் வழங்கியிருந்தேன்.

எனவே அன்று நாங்கள் தலைவரது வீரச்சாவை வெளிப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் தான் அந்த செவ்வியை வழங்கினேன். ஆனால் ஒருசிலரின் குழப்பங்களினால் குறிப்பாக பழ. நெடுமாறன் ஐயாவை குழப்பிக்கொண்டிருக்கின்ற நபர்கள் அந்த காலகட்டங்களில் தலைவரது வீரச்சாவை அறிவிக்க வேண்டாம் தலைவரது வீரச்சாவை அறிவித்தால் புலம்பெயர் மக்களினால் பெறப்படுகின்ற உதவிகளை பெறமுடியாது போகும் என்ற கருத்தை கூறி என்னைத் தடுப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டார்கள். நான் அவர்களுக்கு சரியான பதிலை அந்த இடத்தில் கொடுத்துவிட்டு தான் அந்த அறிவித்தலை நான்




விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாண அரசியல் துறை பொறுப்பாளர் தயாமோகன்

# தேசியத்தலைவர் பிரபாகரன் இறந்துவிட்டார்

## தமிழீழ விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாண அரசியல் துறை பொறுப்பாளர் தயாமோகன் வெளியிட்ட கருத்தில் சர்ச்சை

"தான் கொண்ட கொள்கைக்காக எந்த மக்களுடன் நின்று போராடினாரோ, எந்த மக்களுக்காக போராடினாரோ அந்த மக்களுடனே இருந்தார் அந்த மக்களுக்காக போராடி இறந்த மாவீரர்களுடனே அவர் மாவீரராகிவிட்டார்"

அவரிடம் தலைவர் மீது இருக்கின்ற பற்றையும் தலைவர் மீது அவர் வைத்திருக்கும் உவவையும் சிலர் பயன்படுத்திக்கொள்கின்றார்கள் தங்களது சுயநலத்திற்காக. குறிப்பாக தலைவர் இருக்கின்றாரா? இல்லையா? என்ற கேள்விக்கு 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 திகதி அந்த சம்பவங்கள் எல்லாம் நடந்து முடிந்ததன் பின்னர் அதை உறுதிப்படுத்தி தலைவரின் வீரச்சாவை உலகவெளியில் எல்லா மக்களும் அந்த நிகழ்வை சரியாக கடைப்பிடிக்க வேண்டும் அவருக்கான மரியாதையையும் கௌரவத்தையும்

அப்பொழுதே கூறினேன். இதில் ஒரு விடயம் என்னவென்றால் ஒரு செய்தி கடந்து விட்டால் அந்த செய்தி கடந்ததாகவே இருப்பது தான் பிரச்சனை இதில் முக்கியமான விடயம் தலைவர் வீரச்சாவை தழுவிக்கொண்ட செய்தியை உடனடியாக ஊடகங்கள் அறிவித்தன. ஊடகங்கள் தான் மக்களது காப்பாளன் ஊடகங்கள் தான் மக்களுக்கு சரியான செய்திகளை கொண்டுபோய் சேர்க்க வேண்டியவை. அந்த அடிப்படையில் இந்த செய்தியை முதலில் ஆராய்ந்து எடுத்து அதை ஆய்வு செய்து ஊடகவியலாளர்கள் அதை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது ஊடகவியலாளர்களுக்கு சொல்லக்கூடிய எனது கருத்தாக இருக்கும். சமநலத்தில் தலைவர் வீரச்சாவை தழுவிக்கொண்டார் என்ற விடயத்தை நான் இந்த இடத்திலே கூறிக்கொண்டு பழ. நெடுமாறன் ஐயாவையும் காசியானந்தன் ஐயாவையும் அல்லது இந்த போராட்டம் மீதும் தலைவர் மீதும் பற்றும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தவர்களையும் வைத்துக்கொண்டு பிழையான போக்கை செய்யும் சில நபர்கள் தொடர்ந்தும் இருந்து கொண்டு இருக்கின்றார்கள். அதன் ஒரு வடிவமாகத் தான் கடந்த 2022 ஆம் ஆண்டு பிற்பகுதியில் பழையபடி 2009 ஆம் ஆண்டு தலைவரது வீரச்சாவை அறிவிக்கக்கூடாது தலைவரது இறுதி நிகழ்வை செய்யக்கூடாது என்று எவர்கள் எல்லாம் தடுத்தார்களோ அந்த நபர்கள் மீண்டும் புதிய வடிவத்தில் தலைவர் செய்த தியாகத்தை எல்லாம் கொச்சைப்படுத்தும் நிலைப்பாட்டுடன் தலைவர் உயிருடன் இருக்கின்றார் தலைவரது மக்கள் மற்றும் மனைவி உயிரோடு இருக்கின்றார்கள் என்று சொல்லிக்கொண்டு புலம்பெயர் மக்களிடம் பணம் அறவிடுதலை செய்திருந்தார்கள். அதில் குறிப்பாக சில மக்கள் ஏமாந்து தலைவர் மீது கொண்டிருந்த பற்றின் காரணமாக தலைவர் மீது கொண்டிருந்த மிகப்பெரிய நம்பிக்கையின் காரணமாக அந்த நம்பிக்கையை இப்படிப்பட்டவர்கள் பயன்படுத்தி அவர்களிடம் இருந்து பெருந்தொகை பணத்தை அறவிட்டிருக்கின்றார்கள். அதிலும் குறிப்பாக சுவிஸ் நாட்டில் முன்னாள் செயற்பாட்டாளராக இருந்த அப்துல்லா என்னும் நபர் தான் சுவிஸ் நாட்டில் அந்த பணத்தை ஒழுங்குபடுத்தி கொடுத்திருக்கின்றார். தற்பொழுது செய்திகளில் அவர்களது உரையாடல்கள் அனைத்தும் வந்துகொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட நபர்களை வைத்துக்கொண்டு இந்த விடயங்களை செய்துகொண்டிருக்கின்றார்கள் அதிலும் குறிப்பாக தலைவரைப் போன்று தற்பொழுது ஒரு நபரை உருவாக்கி மற்றும் தலைவரது மனைவி அன்னி மதிவதணி, மகள் துவாரகா என்போரைப் போன்றும் நபர்களை உருவாக்கி அவர்களின் முகத்தை மறைத்துக்காட்டி மதிவதணி அன்னி பேசுவதைப்போலவே காட்டியிருக்கின்றார்கள். இன்னுமொரு கட்டமாக தலைவரைப்போலவே உரையாடுவதற்கு அதாவது தற்பொழுது மிமிக்கிரி கலைகள் இருக்கின்றது அவற்றைப் பயன்படுத்துகின்றார்கள். அதில் ஒருசில நபர்கள் தாங்களது சுயநல தேவைக்காக நிதி அறவிடலை செய்து அதன் ஒருதொகை பணத்தை எடுத்து வைத்துக்கொண்டு தற்பொழுது மீண்டுமொரு சூழலை உருவாக்குகின்றார்கள்.

குறிப்பாக 2009 ஆம் ஆண்டு குறித்த ஏற்பாட்டை செய்த நபர்கள் அதனை 2009 ஆம் ஆண்டே செய்ய இருந்தார்கள். 2011, 2012 காலப்பகுதிகளில் எங்களது மூத்த பொறுப்பாளர்களாக புலனாய்வுத்துறையிலிருந்து வெளிநாடுகளுக்கு வந்தவர்கள். அவர்களை கட்டுப்படுத்தி இனி இந்த வேலைகளை செய்ய வேண்டாம் என அவர்களை கட்டுப்படுத்தினார்கள். அந்த கட்டுப்படுத்தலின் பின்னர் தற்பொழுது 10 ஆண்டுகளின் பின் மீண்டும் அவர்கள் அதை கையில் எடுத்துக்கொண்டு வந்து தான் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு தற்பொழுது பழ. நெடுமாறன் ஐயாவைப் பற்றி ஒரு அறிக்கையை விட்டிருக்கின்றார்கள். இந்த அறிக்கையில் எந்தவிதமான உண்மையும் இல்லை. தலைவர் அவர்கள் வீரச்சாவு என்பதை நாங்கள் 2009 ஆம் ஆண்டே அறிவித்துவிட்டோம். தலைவருக்குரிய உயரிய கௌரவத்தையும் அவர் செய்த தியாகத்தையும் எந்தவொரு நாட்டினுடைய விடுதலைப்போராட்ட தலைவர்களோ அல்லது நாட்டு தலைவர்களோ தான் கொண்ட கொள்கைக்காக தன்னுடைய குடும்பத்தையே இழந்த தலைவர்கள் இந்த வரலாற்றில் எவரும் இல்லை. ஆனால் எமது தலைவர் தான் செய்திருக்கின்றார் எனவே தலைவருக்கு அந்த பெருமை இருக்கின்றது. அந்த கௌரவத்தை குறைக்கும் வகையிலே வெளிநாடுகளில் இருக்கின்ற இராஜதந்திரிகள் அல்லது வெளிநாட்டு அரச தலைவர்கள் வெளிப்படையாக ஒவ்வொரு விதமாக பேசினாலும் தலைவர் மீது மிகப்பெரும் அன்பும் மரியாதையும் அவர்களுக்கு இருக்கின்றது. ஏனென்றால் தான் கொண்ட கொள்கைக்காக எந்த மக்களுடன் நின்று போராடினாரோ. எந்த மக்களுக்காக போராடினாரோ அந்த மக்களுடனே இருந்தார் அந்த மக்களுக்காக போராடி இறந்த மாவீரர்களுடனே அவர் மாவீரராகிவிட்டார் என்ற உயரிய கௌரவத்தை தமிழர்களை விட பிறமொழியாளர்கள். வெள்ளைக்காரர்கள். ஆங்கிலேயர்கள். பிரின்ஸ் காரர்கள் இப்படி எல்லா நாட்டவர்களும் அதாவது ஆபிரிக்க நாட்டில் தலைவரது தியாகங்களை அறிகின்றபொழுது அவர்கள் மெய் சிலிர்க்க பேசுகின்ற சம்பவங்கள் எல்லாம் இருக்கின்றன. இப்படியான விடயத்தை கொச்சைப்படுத்துகின்ற நிலை தான் ஐயா பழ. நெடுமாறன் அவர்களது செயற்பாடாக நாங்கள் பார்க்கின்றோம். தற்பொழுது மட்டுமல்ல 2009 இலும் இதே நபர்கள் தான் பழ. நெடுமாறன் ஐயா அவர்களை வைத்து தாம் நினைத்தனை செய்ய எண்ணினார்கள்.

தலைவரது வீரச்சாவை செய்ய வேண்டும் என கூறிய நேரத்தில் ஒருசில நாட்களுக்கு அவர் ஓம் என்று தான் கூறியிருந்தவர் பின்னர் இப்படியான நபர்கள் வந்துநின்றதனால் அவரை அப்படி சொல்லவேண்டாம் என கூறி தலைவர் இருக்கின்றார் என்று அவருக்கு பொய்யை சொல்லி அவரை சொல்லும்படி கூறினார்கள். அதே வேலையை அதே நபர்கள் தற்பொழுது வேறு வடிவத்தில் வந்து அவரை இப்படி சொல்ல வைக்கின்றார்கள். இதில் ஒரு வேடிக்கை விடயம் என்னவென்றால் இதுவொரு ஆபத்தான விடயம் ஊடகவியலாளர்கள் நீங்கள் கவனம் எடுக்க வேண்டும் இந்த வேலையை செய்துகொண்டே இருக்க போகின்றார்கள் என்றால் தலைவரைப் போன்ற உருவத்தை அமைத்து தலைவரைப் போன்றே கதைக்க வைத்து தலைவர் உடல்நலம் குறைந்து இருக்கின்றார் அவர் இன்னும் சில காலங்களில் இறந்துவிடுவார் எனக்கூறி இறக்க வைக்கும் முறையை மீண்டும் ஒருமுறை செய்வார்கள். அதற்கு காரணம் என்னவென்றால் நெடுமாறன் ஐயாவிற்கு அந்த நோக்கம் இல்லையென்றாலும் இந்த ஒருசில நபர்களுக்கு தலைவரது உலகத்தில் உள்ள மக்கள் தலைவருக்கு கொடுக்கின்ற உயரிய கௌரவத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்கு இருக்கின்றது. அந்த அடிப்படையில் தான் இந்த வேலைகளை செய்கின்றார்கள் இவ்வளவு மக்களையும் விட்டு போராளிகளையும் விட்டு அவர்கள் வீரச்சாவடைய மக்கள் கொல்லப்பட பிள்ளைகள் கொல்லப்பட அவரது மனைவியையும் மகனையும் காப்பாற்றிக்கொண்டு வெளிநாடுகளுக்கு வந்துவிட்டார் என்று சொல்லுமளவிற்கு அவர்கள் கொண்டு வந்து விடப்பார்க்கின்றார்கள்.



11ஆம் பக்கம் பார்க்க...

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## தேசியத்தலைவர் பிரபாகரனை வைத்து அரசியல் பிளைப்பு நடத்தும் போக்கிலி கும்பல்கள்

இன்றைய சமகால அரசியல் சூழ்நிலையில் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் சர்வதேச நாடுகள் தமது பூகோள அரசியல் நாடகத்தை அரங்கேற்றி வருகின்றனர். அதன் ஒரு விளைவு தான் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்பதாகும். இந்திய அரசாங்கத்தின் திட்டமிட்ட செயற்பாட்டின் வெளிப்பாடே இது என்று வெளிப்படையாக புலப்படுகின்றது. பிரபாகரன் கொலை செய்யப்பட்டு விட்டார் என்ற அரசாங்கத்தின் அறிவிப்பு உத்தியோக பூர்வமாக இலங்கை அரசால் 18 ஆம் திகதி மே மாதம் 2009 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டதை அடுத்து அரசாங்கம் கூறுவது போன்று பிரபாகரன் கொலை செய்யப்படவில்லை உயிருடன் இருக்கின்றார் மீண்டு வருவார் என்கின்ற செய்தி கடந்த 13 ஆண்டுகளை கடந்து பேசுபொருளாக பேசப்பட்டுக்கொண்டே இருக்கின்றது.

குறிப்பாக இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் தமது சுயலாப அரசியல் தேவைகளுக்காக பிரபாகரன் இருக்கின்றார் என்கின்ற தோற்றப்பாட்டை கொண்டு இலங்கை அரசாங்கத்துடன் பேரம்பேசும் அரசியலில் ஈடுபட்டு வருகின்றார்கள். சீமான் கூறியது போன்று **இருந்தால் தலைவன் இல்லை என்றால் இறைவன்** அவ்வளவு தான் தமிழ் மக்களை பொருத்தமட்டிலும் நிலைமை அவ்வாறே காணப்படுகின்றது. டீ.என்.ஏ பரிசோதனை என்பதனை இனியும் அரசாங்கம் செய்யப்போவதில்லை என்பது உறுதியாகிவிட்ட நிலையில் அரசியல் போராட்டம் தொடர்ந்த நிலைமையே காணப்படுகின்றது. ஆகவே தங்கள் கட்சிகள் தமது தலைவர்களை வைத்து அரசியல் செய்ய முடியாதவர்கள் தேசியத்தலைவர் பிரபாகரன் பெயரை பயன்படுத்துவது தமது சுயலாப அரசியலையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

போராட்ட வடிவங்கள் மாறலாம் ஆனால் இலட்சியம் மாறாது என்பது தான் விடுதலை போராட்ட வரலாறுகளின் உண்மை. தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் தொடர்பில் வலுவாக கூறப்படுகின்ற வடகிழக்கு தமிழர் தாயகம் ஆக உருவாக்கப்பட வேண்டும் என்பது இதுவரை எமது இலட்சியத்திற்காக போராடிய போராட்ட வரலாற்று உண்மை.

ஆகவே சிங்கள மக்கள் பெற்றுக்கொண்டுள்ள அதே சுதந்திரத்தை தமிழ் மக்களும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இன்றை யதார்த்தம். அதனை விடுத்து இப்படிப்பட்டவர்களின் கருத்தால் இந்த நாடே குழம்பிப்போயுள்ள சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. இன்றும் கொஞ்ச நாட்களில் பொட்டு அம்மான் உயிருடன் இருக்கின்றார் என்கின்ற செய்தி வந்தாலும் ஆச்சர்யப்பட வேண்டியதில்லை. போராட்டக்களத்தில் அல்லாதவர்கள் கூறுகின்ற கருத்து என்பது ஏற்புடைய விடயமும் அல்ல.

விடுதலைப்புலிகளின் மீள் உருவாக்கம் இதனால் உருவாகும் என்கின்ற பயத்தில் அரச புலனாய்வாளர்கள் தேடுதல் பணியில் களமிறக்கப்பட்டுள்ளனர். இதனால் மக்களின் அன்றாட இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ள நிலைமையே உருவாக்கப்பட்டுள்ளது. ஆகவே பிரபாகரன் இருக்கின்றாரோ இல்லையோ என்ற பயம் அரசாங்கத்திற்கு இருந்துகொண்டே இருக்கின்றது எனலாம்.



பல்துறை எழுத்தாளர்
புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்




## கல்லறைப் பூக்கள்

'கும்' இருளில் ஒருவரை ஒருவருக்குத் தெரியாது. கண்ணைக் கட்டி நடுக் காட்டில் விட்டதைப் போல மக்கள் கூட்டம் அலை மோதியது. கணப் பொழுது வானத்தில் ஒளி மின்னி மறைகின்றது பாரிய சப்தம் மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர் இரத்த வெள்ளம்.

"சாத், கமலி, பாக்கியம்மா! எங்க போயிற்றிங்க? தம்பி சாத் தங்கச்சியும் அம்மாவும் எங்கடா?. எனக்கு காலில 'பீஸ்' பட்டிட்டுது. நீங்கள் பத்திரம். அடுத்தத் தடவையும் விமானம் வந்து குண்டு போட போகுது. கூட்டமா நிற்காம எல்லாம் ஓடிப்போங்கோ. தம்பி சாத் தங்கச்சியையும் அம்மாவையும் கவனமாக கூட்டிக்கிட்டு எங்கவாவது ஓடிப்போ? நா சாகப்போறன் போல எனக்கு இந்த இருட்டுக்குள்ள கண்களெல்லாம் இருட்டுது.' இப்படியாக கனகரைப் போல பல ஜீவன்கள் உடலில் காயங்களுடன் உயிருக்குப் போராடிக் கொண்டு தனது உறவுகளுக்காக ஏங்கி தவித்தன.

பிணக்குவியல் மத்தியில் கனகரைப் போல கடுமையாக காயப்பட்டவர்களும் விழுப்புண் அடைந்தவர்களும் மயங்கியவர்களும் மரண விளிம்பில் தத்தளித்தனர். பிணங்களாகியவர்கள் எதிர் கால கனவுகளுடன் உறங்குவது போல எதுவும் அறியாமல் உறங்கினர். உயிருடன் இயங்கிக் கொண்டவர்கள் தங்களின் உறவுகளை அந்த காரிருளில் தேடி அலைய எத்தனித்தனர். அந்த கருமையான இருளிலும் சனக் கூட்டத்தின் மத்தியில் சிலருக்குச் சாத்தியப்பட்டது சிலருக்குச் சாத்தியப்படவில்லை
சிலருக்கு சோகத்தையும் மரணத்தையும் மயக்கத்தையும் கொடுத்தன. கனரக வாகனங்களும் பேருந்துகளும் அந்த இடத்திற்கு விரைந்து, கருமையான இருளிலும் மக்களுடன், காயப்பட்டவர்களும் விழுப்புண் அடைந்தவர்களும் சேர்த்து, சில உடைமைகள் பிணங்கள் ஏற்றப்பட்டன. அந்த இடத்தில் மீண்டும் கணப் பொழுது வானத்தில் ஒளி மின்னி மறைகின்றது பாரிய சப்தம் புகை மண்டலம் கிளப்பியது. ஆனால், அங்கு மக்கள் கூட்டமில்லை. நிலத்தில் நிரைகளும் கடலில் மீன்களும் உயிருக்குப் போராடின. சிறிது நேரம் அமைதி, வைகறைப் பொழுது தாண்டி காலைப் பொழுது மலர்ந்தது. பறவைகள் அடைக்கலம் கொடுத்த இடத்தை விட்டு வெளியில் வர மறுக்கின்றன சேவல்கள் கூவவில்லை மயில்கள் ஆடவில்லை மான் கூட்டங்ளைக் காணவில்லை கடல் பொங்கவில்லை சந்திரன் முகில் கூட்டத்திற்குள் ஒளிந்து ஓடுகின்றான் வண்ணத்துப் பூச்சிகளைக் காணவில்லை இடையிடையே ஒரு சில காகங்கள் மட்டும் விட்டு விட்டு கரைந்தன எங்கோவொரு இடத்தில் நரி ஒன்று ஊளைவிடுகின்றது மூலை முடுக்கும் காடும் மேடும் மனித இரத்த வாடை வீசியது. நண்டுகள் கடற்கரை மணலில் கீறிய படங்களை அலை வந்து கொண்டு போகவில்லை. கடலில் இயந்திர படகுகள் கவிழ்ந்ததால், மாண்டு போன உயிர்கள், மீன்களுக்கு இரையாகிப் போகின. கடலில் மக்களின் உடைமைகள் கணக்கிலடங்காதவை அமிழ்ந்து போயின. கடல் அன்னையும் பூமித்தாயும் மௌனத்தின் மீது காதல் கொண்டன போல மௌனித்து விட்டன.

-03-

'ஐயோ அம்மா! நான் எங்க இருக்கன். எண்ட மனிசி புள்ளங்கயெல்லாம் எங்க. ஐயோ அம்மா! தலையெல்லாம் சுத்து' - மயக்க நிலையில் பிதற்றினார், கனகர். 'தம்பி சாத் தம்பி சாத் எங்கட போயிற்றிங்க' - வாயில் உச்சரித்த, கனகர் அறை மயக்கத்தில் கண்களை விழித்து அங்கும் இங்கும் பார்த்த போது, கட்டிலிலும் நிலத்திலும் காயப்பட்டவர்கள் பலர் மயக்கத்திலும் பிதற்றியவாறும் கிடந்தனர். அதற்குள் தனது உறவுகளைத் தேட முற்பட்ட போது,
முல்லைத்தீவு மாங்குளத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலையில் கட்டில்கள் காயப்பட்டவர்களினால், நிரம்பி வழிந்தன.
"ஐயா எழும்ப வேண்டாம். உங்களுக்கு காலில பெரிய 'பீஸ்' பட்டு பெரிய காயம் ஏற்பட்டு கணக்க இரத்தம் போயிருக்கு. படுங்க, என்ன வேண்டும்" - ஒரு தாதி கைகளில் மருந்து மாத்திரைகளுடன் கனகரை நோக்கி வந்தாள்.

"இல்ல தங்கச்சி என்ன பற்றி கவலையில்லை என்ர மனைவி பிள்ளைகள் எல்லாம் எங்க, எப்படியோ? என்ன பாடோ?" - கட்டிலில் படுத்தவாறு இரண்டு கண்களிலும் கண்ணீர் மல்க கூறினார்.
"ஐயா அவுங் எல்லாம் ஏதாவது ஒரு பள்ளிக் கூடத்தில் அல்லது கோயில்ல அல்லது யாரும் உங்கட உறவினர்களோடு நல்ல இருப்பாங்க. அவுங்கட பெயர்களைச் சொல்லுங்க தேடிப் பார்க்கச் சொல்றன்."
"அவுங்களுக்கு யாரும் உறவினார் கிடையாது. எல்லாம் இந்தியன் ஆமி பிரச்சினை காலத்தில் மண்ணோட மண்ணாகிட்டாங்க. மனிசிண்ட சொந்தக்காரங்களெல்லாம் கொழும்பில இருக்காங்க. மனிஸ்சிக்குப் பாக்கியம், மூத்த மகனுக்கு சாத். இளைய மகளுக்கு கமலி"
"ஐயா முதலில இந்த குளிசையைக் குடியுங்க"
"வேண்டாம் தங்கச்சி என்னை 'டிக்கட்' வெட்டி விடுங்க என்ர புள்ளக் குட்டி மனிசியைத் தேடப் போறன்"
"நீங்க தெம்பாயிருந்தால்தான் அவுங்கள பார்க்கலாம். மருந்த குடியுங்கள், ஒரு கிழமையால உங்கள விடுகிறம்"
"நீ சொல்லுறதும் சரிதான் புள்ள சுவர் இருந்தால் தான் சித்திரம் தீட்டலாம். மருந்த கொடுபுள்ள குடிப்பம்" என்றவாறு தாதியின் துணையுடன் மெதுவாக எழுந்து, தாதியர் போத்தில் மூலம் அவரின் வாயில் தண்ணீரைப் பருக்கவும் கனகர் வலக்கையில் வாங்கிய குளிசைகளை வாய்க்குள் மெதுவாக - அமைதியாக - போட்டார்.
"சத்தம் போடாம படுத்திருங்க ஐயா, எல்லாம் சுகம் வரும். கவலைப்பட வேண்டாம். எல்லாம் மனிதனுக்கே வருது என்ன செய்றது?"
"எப்படி தங்கச்சி கவலைப்படாம இருக்கிறது?. ஒரு நாள் கூட என்ர மனிசி பிள்ளைகள் என்னை விட்டுட்டு இருக்காதுகள்"

"இந்த கொஸ்பிட்டல்ல இருக்கிற அரைவாசி பேர் இப்படிதான் ஏங்குறார்கள். 'வோட்'டில் இருக்கிற நீங்க பறவாயில்லை. ஆயிரக்கணக்கான எங்கள் உறவுகள் பிணவறையில் கட்டிலும் இல்லாமல் ஒருவர் மேல் ஒருவர் ஆண், பெண், சிறுவர், முதியோர் வேறுபாடுகள் இல்லாமல் உறங்குவது போல, எதிர் கால கனவுகளுடன் கிடந்தார்கள். அதைப் பார்க்கும் போது இந்த உலகத்தில மனித பிறப்பே வேண்டாம் என்பது போல, இருக்குது"

"ஐயோ! அதில என்ர மனிஸி, பிள்ளைகள் இருக்கோ தெரியாது...!!!?"
"உங்கட நல்ல மனசுக்கு அப்படி ஒன்றும் இருக்காது"
"இப்ப நல்லவனுக்குக் காலம் இல்ல"
"நான் உங்களுக்கிட்ட கதைக்கிற மாதிரி இஞ்ச இருக்கிற இருநூறு காயக்காரங்களிடம் கதைத்தனான். அவுங்களுக்கும் உங்கள மாதிரிதான் பலருக்குப் பல பிரச்சினைகள் இருக்கு. அது சரி பரவாயில்லை. எத்தனையோ காயப்பட்டவங்கள் இன்னும் மயக்கம் தெளியாம இருக்காங்க"

"இந்த உலகத்தில மனிதன் பிறப்பது ஒரு தடவைதான், நாங்கள் எவ்வளவோ காசு பணம் சொத்து சுகம் எல்லாம் இந்த உயிர் போனா பிறகு அதால ஒரு பயனும் இல்ல. இதை நான் நாலு பேருக்குச் சென்னா இந்த உலகம் என்னை முட்டாள் என்று அழைக்கும். எங்கட சனத்துக்கு இன்னும் அறிவு வரவில்லை. கிளாலிக் கடலிலையும் அக்கரையிலும் இக்கரையிலும் எத்தனை ஆயிரம் உயிரும் உடைமைகளும் அழிஞ்சிப் போச்சி."
"ஐயா, ஏன் இப்படி வெறுப்பா எங்கட சனத்தைப்பற்றி கதைக்கிறீங்க?"
"அங்க பின்னுக்குப் பாருங்க. ஒரு கட்டிலுக்கு மூன்று பேரு சண்டைப் பிடிக்கிறாங்க"
"அது எங்கட மக்களுக்கு இரத்தத்தில ஊறிப்போச்சி"
"ஓம் தங்கச்சி பகிர்ந்துண்ணல் தமிழர் பண்பாடுனு இலக்கியம் எல்லாம் சொல்லுது. இவ்வளவு மக்களும் கிளாலி கடலால வரேக்க எத்தனை சின்ன சிறுசுகள் பசியில பரிதவித்தன. சாப்படு, 'பிஸ்கட்' வைச்சிருந்த சில பெரிய ஆக்கள் தங்களுடைய பிள்ளைகருக்கு மட்டும் ஒளிச்சு ஒளிச்சு கொடுத்தாங்க. இதுகள் தங்களுக்கு ஏதும் சாப்பிட தரமாட்டாங்களா என்று பாத்துப் பாத்து தூங்கிப் போச்சிகள்.?"
"என்னத்த செய்றது இந்த மக்களுக்கு அறிவே வரமாட்டங்கிது. பசுமரத்தாணிபோல சின்னஞ்சிறுசுகளின் உள்ளத்திலையும் சுயநலத்தையும் பகிந்துண்ணாத பண்பையும் ஏற்றுறாங்க"
"நெருப்பில் விழுந்த நண்டு தணலைக் கவ்வுவது போல எங்கட மக்கள் சுயநலமா சிந்திப்பதால், பரம்பரையாக துன்பப்பட்டுக்கொண்டே இருக்கினம்.

எங்கட சமூகத்தில வேலியே பயிரை மேய்ந்தாற்போல சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் பாதுகாப்பு இல்லை. இவற்றை நினைக்கேக்கத்தான் என்ர பிள்ளைகளையும் மனிசியையும் நினைத்தா பயமா இருக்கு. எத்தனை சிறுவர்களும் பெண்களும் துன்பப்படுகிறார்களோ!"
"ஐயா, நீங்க கணக்க யோசிக்கிறீங்க போல"
"மகனுக்கு இப்பதான் பதினாலு வயசாகின்றது. இல்ல தங்கச்சி என்ர மகனோட உனக்கு ஆறு வயசுதான் கூடயிருக்கும் இல்லையா?"
"எப்படி ஐயா, கணக்குத் தப்பாம சொல்லுறீங்க?"
"இதெல்லாம் அனுபவம்தான், நான் என்ன சொல்ல வாறன் என்றால்? நீயும் எனக்கு மகள் மாதிரிதான்.

தொடரும்...

# தூள் கடத்தும் உறுப்பினர்கள் இனி தமிழரசுக்கட்சியில் இல்லை!

## என்ற தோரணையில் வைத்திய கலாநிதி சிவமோகன்




**புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற தமிழரசுக்கட்சியின் உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பான பிரச்சாரத்தின் போது சிவமோகன்,மாவை சேனாதி ராஜா,சுமந்திரன்,சாணக்கியன்,சிறிதரன் போன்றது கருத்துக்கள் தொடர்பான பார்வை.**

**சிவமோகன்**

அபிவிருத்தி இனக்க அரசியலுக்கு மாறாக இனத்தின் உரிமை அரசியலை இன்றுவரை தடம்புறலாது செயற்படுத்திவருவது எமது இலங்கை தமிழரசுக் கட்சியே. மரங்கள் அமைதியாக இருக்கத்தான் விரும்பும் ஆனால் சுழல் காற்றுக்கள் அதனை அமைதியாக இருக்கவிடுவதில்லை. அதைப்போல் தான் இலங்கை தமிழரசுக் கட்சியும் அகிம்சை ரீதியில் அமைதியான நடைமுறைகளை கடைப்பிடிக்கத்தான் விரும்பியது. ஆனால் உள்ளே வந்த சுழல் காற்றுக்கள் எமது வீட்டிலேயும் ஆட்டம் கொடுத்து சுழன்று ஆடியதால் எமது தமிழரசுக் கட்சியும் பாதிக்கப்பட்டு சுழல் காற்றுக்குள் சின்னாபின்னமாக சுழன்றுகொண்டிருந்தது. இப்படியான இடத்தில் தான் இன்று தமிழரசுக் கட்சி கொள்கை ரீதியில் அரசியலுக்கு வந்து இங்கு தடம்புறலாது செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. தமிழரசுக் கட்சியின் சின்னத்தின் கீழ் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட பலர் வீட்டுக்குள் வதிவிடம் கோரி வந்தார்கள். வீட்டிற்குள் இருந்துகொண்டே எமது வீட்டை விமர்சித்தார்கள்.

இன்று தான் பெற்றோல் 400 ரூபாய் அனைவரும் கொதித்துக்கொண்டிருக்கின்றார்கள் தென் தேசத்தில் அன்று பெற்றோல் 1996 இல் பெற்றோல் 1000 ரூபாய். மண்ணெண்ணெயில் எங்களது மோட்டார் சைக்கிள் எல்லாம் ஓடிக்கொண்டிருந்தது. சீமெந்து 5000 ரூபாய். இன்று 3000 ரூபாய் இதற்கு கொதித்துக்கொண்டிருக்கின்றோம். ஆனால் அன்று 5000 ரூபாய்க்கு கூட எமது மக்கள் கலங்கவில்லை. ஆனால் அது ஒரு வசந்த காலம் தான் கரண்ட் இல்லை அமைதியான நித்திரை. களவு பொய் மோசடிக் காரர்கள் இல்லை சிறப்பு அமைப்புகள் எல்லாம் எங்களிடம் இருந்தது. தமிழீழ காவல் துறை இருந்தது. தமிழீழ நீதித்துறை இருந்தது. தமிழீழ சுகாதார துறை இருந்தது அப்படி எல்லாவற்றையும் சொல்லலாம் ஒரு அரசை 27 வருடங்கள் இங்கு ஆட்சி செய்யக்கூடியளவு இந்த மண் இருந்தது. அன்று தூள் வியாபாரிகள் இல்லை. கஞ்சா இல்லை. கசிப்பு இல்லை. சாராயம் இல்லை. இன்று சில அரசியல்வாதிகளே தூள் வியாபாரம் செய்வதாக பத்திரிகைகளிலே வருகின்றன. சில அரசியல்வாதிகள் தூள் கடத்தி பாராளுமன்ற வாகனத்துடன் பிடிபட்டதாக கூட வரலாறுகளும் வழக்குகளும் இருக்கின்றன. எல்லாம் எமது கடவுளுக்கு தான் அதைப்பற்றி தெரியும்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தீர்க்கமான சில முடிவுகளை நாங்கள் எடுத்திருந்தோம் தமிழ் தேசிய கூட்டமைப்பாக தேசிய அரசியலில் நாங்கள் ஈடுபட்டாலும் அதாவது மாகாணசபை பாராளுமன்ற தேர்தல்கள் தேசிய அரசியல் நோக்கிய பயணம் தமிழ் தேசிய கூட்டமைப்பாக ஈடுபடுவோம் இந்த உள்ளூராட்சி தேர்தலில் சில கடந்த கால அனுபவங்கள் எங்களுக்கு கிடைத்தது ஒட்டுமொத்தமாக 12 ஆசனங்களில் 11 ஐ தமிழரசுக் கட்சி வென்றிருந்தும் மேலும் 11 ஆசனங்களை சுற்றிவர இருந்த ஒவ்வொரு சில்லறை கட்சிகளும். தேசிய கட்சிகளும். சுயேட்சை கட்சிகளும் எடுத்துக்கொண்டன. இதனால்கூட புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளிலும் பல ஆட்சிகளை எங்களால் நிலைநிறுத்தமுடியாமல் இருந்தது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் இருந்தது. எனவே தான் சிலசில தீர்மானங்களை எடுத்தோம். தனித்தனியாக அந்தந்த கட்சியில் நாம் தேர்தலில் நிற்பது என்றும் வென்றபின் ஒற்றுமையாக அனைவரும் சேர்ந்து ஆட்சிகளை அமைத்துக்கொள்ளலாம் என்றும் ஒரு கருத்து முன்வைக்கப்பட்டது. தேசியத் தேர்தலிலே ஒற்றுமையாக இருப்போம் என்று தான் நாம் கூறினோம். இவை அனைத்திற்கும் காரணம் கடந்த உள்ளூராட்சி தேர்தலில் நாங்கள் பெற்றுக்கொண்ட படிப்பினைகள்.

**சிறீதரன்**

என்னைவிட இங்கு பல மூத்தவர்கள் தமிழரசுக் கட்சியினர் இருக்கின்றார்கள் என்னைவிட கட்சியினுடைய விசுவாசிகள் இருக்கின்றீர்கள். நாங்கள் இந்த மண்ணிலே இவ்வளவு காலமும் கடந்து வந்த பாதைகள் வித்தியாசமானது எங்களது பயணங்கள் வித்தியாசமானது. ஆனால் தந்தை செல்வாவின் காலத்தில் இருந்து தலைவர் பிரபாகரன் காலத்தில் இருந்து இன்றுவரை தமிழ் மக்களது உரிமை என்பது அவர்களது உரித்து என்பது இருப்பு என்பது மிக முக்கியமானது. நாங்கள் ஒரு தேசிய இனம் தமிழர்கள் என்ற தேசிய இனத்தினுடைய தனித்துவமான மொழி அடையாளமும். தனித்துவமான நில அடையாளமும். தனித்துவமான கலை பண்பாட்டு அடையாளங்களையும் இல்லாமல் செய்து சிதைத்து எங்களை பல்வேறு துண்டுகளாக உருவாக்கிக்கொண்டால் இருக்கின்ற இலங்கை அரசை பொறுத்தவரை அவர்களுக்கு பிறகு பேச வேண்டிய தேவையே கிடையாது. எனவே ஒரு தேசிய விடுதலை இயக்கமான தமிழரசுக் கட்சியை அழிக்கும். மக்களை தெருவுக்கு கொண்டுவருகின்ற ஒரு யுத்தம் இல்லாத ரத்தம் சிந்தாத மறைமுகமான சூழ்ச்சியான வேலைத்திட்டத்தை ரணில் விக்ரமசிங்கவினுடைய அரசும் இங்கிருக்கின்ற இலங்கை அரசிலிருக்கும் ஒவ்வொருவரும் மிக கச்சிதமாக கையாளுகின்றார்கள்.

நாம் ஒரு சக்தியாக இருக்க வேண்டும் நாங்கள் ஒரு அணியாக இருக்க வேண்டும். நாங்கள் ஒரு பேரியக்கமாக இருக்க வேண்டும். ஒரு தலைமைக்கு கீழே இருக்க வேண்டும் சிந்தித்துப் பாருங்கள் தலைமை இல்லாத இனம் எங்குமே வென்றதாக வரலாறுகள் இல்லை. சரியான தலைமை இல்லை என்றால் நாங்கள் இவ்வளவு காலமும் பலரும் எங்களுடன் இருந்தார்கள் இன்று சிதறி சின்னாபின்னமாகியிருக்கின்றார்கள் அவர்களது தேவை ஒரு ஆசனம் ஒரு பதவி தேர்தல் வருகின்ற பொழுது தான் ஒற்றுமையைப் பற்றி பேசுவார்கள் தேர்தல் முடிந்தவுடன் 4 வருடங்கள் நித்திரை கொள்ளுவார்கள். பின்னர் ஒரு தேர்தல் வருகின்றபொழுது அவர்கள் ஒற்றுமையை பற்றி பேசுவார்கள் ஆனால் தமிழரசுக் கட்சி எப்பொழுதுமே ஒற்றுமையையே வேண்டிநிற்கின்ற ஒரு கட்சி. நாங்கள் இப்பொழுதும் பகீரங்கமாக சொல்லுகின்றோம் பிரிந்துபோனவர்களுக்கு. நாளை தேர்தல் முடிந்த பின்பும் எங்களது இனம் சார்ந்து இனத்தினுடைய விடுதலை சார்ந்து இந்த தேசிய இருப்பு சார்ந்து வாருங்கள் அரவணைத்து செல்ல நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஆனால் தேர்தலுக்காக நீங்கள் வரத்தேவையில்லை தேர்தலை விடுங்கள் தேர்தலுக்காகத் தான் ஒற்றுமை என்ற கோசத்தை முதலில் தூக்கி எறியுங்கள் நீங்களும் நாங்களும் தமிழர்கள் தேசிய விடுதலைக்காகத் தான் இணைகின்றோம் என்றால் ஒரு பொதுக்கொள்கையிலே இனம் சார்ந்த விடுதலை கொள்கைக்கும் நாங்கள் ஒன்றாக இணைவதற்கும் பயணம் செய்வதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம். நீங்கள் வாருங்கள் நாங்கள் அந்த தலைமைத்துவத்தை வழங்கி அணைத்து செல்வதற்கு தமிழரசுக் கட்சி எந்த நேரத்திலும் எந்த காலத்திலும் தயாராக இருக்கின்றது. அதைத்தான் கடந்த 74 ஆண்டுகள் தமிழரசு கட்சி செய்திருக்கின்றது. பல்வேறு திசைகளில் இருந்தவர்களை எல்லாம் ஒன்றிணைத்து அவர்களை கொண்டு வந்து ஒரு தேசிய விடுதலைக்காக கட்டிவைத்து வளர்த்த வரலாறு தந்தை செல்வாவுக்கும் உண்டு தலைவர் பிரபாகரனுக்கும் உண்டு இன்றைய தலைவர்களுக்கும் உண்டு அது எங்களது பொறுப்பும் கடமையும் என்பதனை உங்களுக்கு பொறுப்போடு சொல்லிவைக்க விரும்புகின்றோம்.

**சாணக்கியன் :**

வடக்கு கிழக்கு மாவட்டங்களில் மிக முக்கியமான மாவட்டங்கள் முல்லைத்தீவு மாவட்டமும் திருகோணமலை மாவட்டமும் தான். எங்களுடைய தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையாளர்கள் இணைந்த வடக்கு கிழக்கு என்பது சாத்தியமாகுமாக இருந்தால் அது நிச்சயமாக சாத்தியமாகும். அது சாத்தியமாவதற்கு இன்று முல்லைத்தீவு மாவட்டமும் திருகோணமலை மாவட்டமும் தமிழர்களுடைய கையிலே மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். இந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலை பொறுத்த வரையிலே பலர் சொல்லலாம் இது வெறுமனே ஒரு அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையிலான ஒரு போட்டி. மாமனுக்கும் மச்சானுக்கும் இடையிலான ஒரு போட்டி ஆனால் உண்மையில் இந்த உள்ளூராட்சிமன்ற தேர்தல் இவை அனைத்தையும் தாண்டி தமிழ் மக்களுக்கு மிக மிக முக்கியமான தேர்தல். சிலர் கேட்கலாம் தமிழ் மக்களுக்கு ஏன் இது முக்கியமானதொரு தேர்தல்?. தமிழ் மக்களுக்கு ஏன் இந்த தேர்தலினுடைய முக்கியத்துவம் என்ன என்று பலரும் கேட்கலாம் அதன் முக்கியத்துவம் என்னவென்றால் நாங்கள் நீண்ட காலத்திற்கு பின்னர் எங்களது தந்தை செல்வா காட்டிய சின்னத்திலே தலைவரும் ஆதரித்த சின்னத்திலே நாங்கள் இலங்கை தமிழரசுக் கட்சியாக இந்த முறை தேர்தலிலே போட்டிபோடுகின்றோம். இந்த தேர்தலினுடைய வெற்றி இந்த தேர்தலினுடைய முடிவுகளை நாங்கள் இரண்டு மூன்று காரணங்களிற்காக இலங்கை தமிழரசுக்கட்சியின் வீட்டு சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டிய தேவையுடன் இருக்கின்றோம். முக்கியமான விடயம் உலக நாடுகள் அனைத்தும் சேர்ந்து எங்களது விடுதலைப் போராட்டத்தை மௌனிக்க வைத்த பொழுது அனைத்து நாடுகளிற்கும் இலங்கை அரசாங்கம் கொடுத்த வாக்குறுதி தான் இந்த நாட்டிலே இலங்கை தமிழ் மக்களுடைய நிரந்தரமான அரசியல் தீர்வை பெறுவதற்காக நாங்கள் உதவுவோம் என்று சொல்லியிருக்கின்றோம். ஆனால் அவ்வாறு சொன்னாலும் கூட 2020 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலிலே இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டு சின்னத்திற்கு 16 ஆசனங்களில் இருந்து 10 ஆசனங்களிற்கு குறைந்ததை வைத்துக்கொண்டு உலக நாடுகள் அனைத்தும் தற்பொழுது கூறும் விடயம் தமிழரசு தமது அரசியல் உரிமைக்கான அந்த கோரிக்கை மறைந்து விட்டதா என்ற சந்தேகம் உலக நாடுகளிற்கு இருக்கின்றது. உலக நாடுகளும் கூட தமிழர்களினது இன்றைய பிரச்சனை பொருளாதார ரீதியான பிரச்சனை மட்டும் தான் போலும் தெரிகின்றது என்றிருக்கும் காலம்.

**சுமந்திரன் :**

ஜனாதிபதிக்கு தேர்தலை சந்திக்க பயம் எனவே தேர்தலை பிற்போடப்பார்க்கின்றார்கள். அப்படி தான் மாகாணசபை தேர்தலையும் கால வரையறையின்றி பிற்போட்டுவிட்டார்கள். உள்ளூ ராட்சி என்ற அதிகாரங்களையும் பாவிக்கவிடாமல் பறித்தெடுத்துவிட்டு மக்கள் ஆணை இல்லாத ஏதோ ஒரு விதமாக ஜனாதிபதியாக வந்த ஒருவர் முழு ஆட்சி பலத்தையும் முழு நிறைவேற்று அதிகாரத்தையும் ஒருவருடைய கையிலே வைத்து முழுமையாக ஆட்சி செய்வதற்கான ஒரு சூழ்ச்சி தான் இந்த தேர்தலை பிற்போடுவதற்கு எடுக்கப்படுகின்ற சூழ்ச்சி. இந்த சூழ்ச்சிக்கு எதிராக நாங்கள் திரண்டு எழ வேண்டும். நாங்கள் எழுவோம். இந்த தேர்தல் பரப்புரை கூட்டம் தேர்தல் நடக்குமா? இல்லையா? என்று ஒரு கேள்விக்குறி இருக்கின்ற நேரத்தில் நாங்கள் இந்த தேர்தல் பரப்புரையை நடத்துவதன் காரணமும் இது தான். தேர்தல் நடக்க வேண்டும் நடக்க வைப்போம். நாங்கள் தேர்தல் நடக்கும் என்று மக்கள் மத்தியிலே சொல்லுகின்றோம். தேர்தலை நடத்தாது பிற்போட்டால் அதிலே இருக்கின்ற அந்த குள்ளநரித் தனத்தையும் நாங்கள் வெளிக்கொண்டுவருவோம். ஏனென்றால் மக்கள் ஆணை இல்லாமல் மக்களது விருப்பம் இல்லாமல் மக்களது இணக்கம் இல்லாமல் எவரும் ஆட்சி செய்ய முடியாது. அது தான் எங்களது அரசியல் சித்தார்ந்தமும் கூட நாங்கள் ஏன் தமிழரசு என்று கேட்கின்றோம் நாங்கள் ஏன் எங்களுக்கு சுயாட்சி என்று கேட்கின்றோம். எங்களுக்கு சுயாட்சி என்று கேட்பதன் அர்த்தம் எங்களது மக்களின் அனுமதியோடு அவர்களின் இணக்கப்பாட்டுடன் தான் ஆட்சி செய்யமுடியுமே தவிர வேறொருவர் வந்திருந்து எங்கள் மேல் அந்த ஆட்சியை நடத்த முடியாது. அதற்கு இடம் கொடுக்கக்கூடாது. சர்வதேச சட்டத்திலும்கூட அதற்கு இடம்இல்லை. எனவே தான் நாங்கள் எழுந்து நின்று அன்றிலிருந்து இன்றுவரை சுயாட்சி எங்களது உயிர் மூச்சு என்று சொல்லுகின்றோம். சுயாட்சி தமிழ் அரசு தமிழ் பிரதேசத்திலே எங்களது தாயக மண்ணிலே நாங்கள் எங்களை ஆளவேண்டும். வெறொருவரும் வந்து எங்களை ஆளமுடியாது. அப்படியான ஒரு ஆட்சி முறைமையை இந்த நாட்டிற்குள் மாற்றியமைக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக சொல்லிவருபவர்கள் அதற்காக தொடர்ச்சியாக போராடுபவர்கள் தொடர்ந்தும் நாம் அகிம்சை வழியிலே போராடுவோம். தேர்தலை தவிர்த்தால் அது எங்களது மக்களின் ஜனநாயக உரிமையை நசுக்குகின்ற ஒரு செயலாக கணிப்போம் நாங்கள் அதற்கு எதிராகவும் போராடுவோம். தேர்தல் வருகின்றபொழுது தேர்தல் வாக்குச்சீட்டை வைத்து தொடர்ச்சியா போராடுவோம்.

**மாவை சேனாதிராஜா**

முல்லைத்தீவிலே இருக்கின்ற இந்த மண் இனத்தினுடைய விடுதலைக்காக தங்களது தேசத்தில் தாங்களே ஆட்சி செய்ய வேண்டும் என்பதற்காக கடந்த 70 ஆண்டுகளில் ஜனநாயக ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் போராடி தங்களை தியாகத்திற்குள்ளாக்கி அரப்பணித்து விட்டு உறுப்பினர்களாக இங்கே அமர்ந்திருக்கின்றீர்கள். இந்த மண்ணினுடைய விடுதலைக்காக அர்ப்பணித்த தேசம் இது. இந்த மண்ணிலே நாங்கள் அனைவரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்காக அது நடக்குமா? இல்லையா? அதை நடத்துவதற்கு வழி இருக்கின்றதா? இந்த நாட்டிலே பஞ்சம் பசி பட்டினிக்கு மத்தியில் இந்த தேர்தலை நடத்துவதற்கு நிதியில்லை என்றும் கூறிக்கொண்டிக்கும் வேளையில் தங்களது உயிர்களையும் பணயம் வைத்து இந்த மண்ணில் தங்களது விடுதலைக்காக அர்ப்பணித்த குடும்பங்களினது உறவுகள் இங்கே வீற்றிருக்கின்றீர்கள். என்னுடைய இலட்சியம் என்னுடைய இலக்கு இந்த மண்ணில் நாங்கள் எங்களது இருப்பை நிர்ணயிக்க வேண்டும். இங்கு ஜனநாயக ரீதியாக எங்களது விடுதலையை நாங்கள் நிலைநாட்ட வேண்டும் என்பது தான் காரணம் உங்களது உயிரை நீங்கள் கையில் வைத்து போராடிக்கொண்டிருக்கின்றீர்கள். இந்த நேரத்தில் உங்களிடம் நாங்கள் கேட்பது உங்களது வாக்கு உரிமையை உங்களது இனத்தின் விடுதலைக்காக அளியுங்கள் என்பது தான். இந்த தேர்தல் எப்பொழுது நடக்கும் என்று தெரியாது விட்டாலும் அதை நாங்கள் இங்கு பேசிக்கொண்டு வாக்களிக்கும் நிலைமையில் தேர்தல் வரும் வராமலும் விடும் இன்று அந்த தேர்தலுக்கு ஆயத்தமாக இருக்கின்ற மக்கள். இந்த தேர்தலிலே வேட்பாளர்களாக இருக்கின்ற வேட்பாளர்கள் இந்த மண்ணின் ஜனாதிபதி அவர் சில நாட்களுக்கு முன்னர் நான் இந்த மண்ணில் விடுதலை அரசியல் தீர்வை தருவேன் என அறிவித்தார். அரசியல் தீர்வை நான் வழங்குவேன் என பேசினார். சில மாதங்களுக்கு முன்னர் தான் உங்களது காணிகள் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தை நான் விடுவிப்பேன் என்று சொன்னார். 2004. 2005 ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதி தேர்தலில் இந்த நாட்டினுடைய அரசியல் தீர்வாக சமஷ்டி தான் நான் அதை நடைமுறைக்கு கொண்டுவருவேன் என 2 இலட்சம் வாக்கை போட்டு அவர் வெற்றிபெற்றிருந்தால் என்ன நடக்கும் என்ற சொல்லமுடியாத நிலைமை தற்பொழுது அவர் தோற்கடிக்கப்பட்டுவிட்டார். இனப்பிரச்சனைக்கான தீர்வை தீர்த்துவைப்பேன் என்று கூறியவர் இந்த மாதத்தின் ஆரம்பத்திலே ஒற்றையாட்சி என்பததையும் உச்சரித்திருக்கின்றார். இந்த நாட்டிற்கு 1948 இல் விடுதலை கிடைத்தது. தந்தை செல்வா அவர்களால் நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தாலும் தமிழர்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை.

# ஆயுதகட்சிகள் துரோகிகள் என்றால்? தமிழரசுக்கட்சி துரோகிகள் இல்லையா?

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்

**கேள்வி : இன்றைய சமகால அரசியல் பார்வையிலே உள்ளூராட்சிமன்ற தேர்தல் இடம்பெறவிருக்கும் சூழல் உருவாகியிருக்கின்ற அதே நேரத்தில் மாகாணசபைகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டிருக்கும் நிலையிலே மாகாணசபைகள் நடத்துவதற்கு பதிலாக முந்திக்கொண்டு உள்ளூ ராட்சிசபைகளை நடத்துவதற்கான நகர்வுகள் நகர்த்தப்பட்டிருக்கின்றது. இதிலே கட்சிகள் பிரச்சாரங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன இவ்வாறிருக்கும் சூழலிலே திரை சேரியில் பணம் இல்லை என்கின்றது. அரசாங்க தரப்பிலே குறிப்பாக தேர்தல் ஆணையகம் அதனை வைக்க வேண்டும் என்று கூறுகின்றது. ஆனால் அரச தரப்பை பொறுத்தவரை அதை வைக்ககூடாது என்றவொரு சூழ்நிலையும் உருவாகியுள்ளது. நீங்கள் அரசியலிலே ஆயுத போராட்ட ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் இது தொடர்பாக உங்களது பார்வை எப்படியிருக்கின்றது?**

பதில் : இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரை ஆட்சியாளர்கள் தங்களுக்கு தேவையானவற்றைத் தான் தேவையான நேரத்திலே செய்வார்கள் மக்களுடைய ஜனநாயகம் அதைப்போன்று அவர்களது இறைமை அவற்றைப்பற்றி எல்லாம் அவர்கள் ஏறெடுத்தும் பார்ப்பது இல்லை. இந்திய இலங்கை ஒப்பந்தத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு மாகாணசபை முறை என்பது தற்பொழுது வடக்கு மாகாணத்தை பொறுத்தவரை ஐந்து ஆண்டுகளை கடந்து விட்டன. கிழக்கு மாகாணத்தில் ஆறு ஆண்டுகளை கடந்து விட்டன. எவ்வாறாயினும் ஐந்து ஆண்டுகளுக்கு மேலே இலங்கையில் மாகாணசபைகள் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட எவையும் 9 மாகாண சபைகளிலும் இயங்கவில்லை. அதை வைப்பதற்கான ஒரு ஏற்பாடு கூட அந்த சட்டமூலங்களிலே இல்லை. அதற்கான கால அவகாசங்கள் தெரிவிக்கப்படவில்லை ஆனால் இதைப்போல பாராளுமன்ற தேர்தலை வைக்காமல் இருக்க முடியுமா? இல்லை வைக்காமல் இருக்கமுடியாது. இதைத்தான் தமிழ் நாட்டிலே பலரையும் பார்த்து கேட்டிருக்கின்றோம் சட்டமன்ற தேர்தல்கள் பல வருடங்கள் வைக்காது விட்டால் நீங்கள் சும்மா இருப்பீர்களா அதுபோலவே இங்கு கேட்க பார்க்க ஆள் இல்லை.

இது ஒருவிதமான சூழல் தான் மாகாணசபை முறைகளுக்கு உள்ளது அதைப்போல அவர்கள் விரும்பினால் விரும்பாமல் விட்டால் தற்பொழுது 1979 இல் இருந்து விகிதாசார முறையை உள்ளுராட்சி மன்றங்களிற்கு அமுல்படுத்தினார்கள். அப்பொழுது மாநகர சபைகளும் மாகாண சபைகளுக்கும் தான் தேர்தல்கள் நடைபெற்றன. பின்னர் 1987 இல் தான் பிரதேச சபைகள் முறைகள் கொண்டு வரப்பட்டு வடக்கு கிழக்கிலே முதற்தடவையாக நடத்தப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் 1994 ஆம் ஆண்டும் வவுனியாவில் 1994 ஆம் ஆண்டும் ஏனைய பகுதிகளில். யாழ்ப்பாண குடா நாட்டிலே 1998 ஆம் ஆண்டும் நடத்தப்பட்டது. எனவே இவ்வாறு நடத்தப்படும் நான்கு ஆண்டு இடைவெளி வரும் இதே போன்று எந்தவிதமான சீரான ஒரு தெளிவான அரை அரை ஆண்டு இடைவெளியில் இடம்பெறும் 1995 ஆம் ஆண்டு இலங்கையினுடைய யாழ்ப்பாண மாவட்டம் படையினரின் கட்டுப்பாட்டிலே தொடர்ச்சியாக இருந்தது. 2003 ஆம் ஆண்டு வரை மக்களாட்சி நடந்தது என்றால் அதன் பின்னர் 2011 வரை நீங்கள் ஏன் தேர்தலை வைக்கவில்லை இது தான் நிலவரம்.

ஆட்சிமாற்றம் மாறுவதற்கும் உள்ளூ ராட்சி தேர்தலை நடத்துவதற்கும் சம்மந்தம் இல்லைதானே. அவர்களுக்கு வைப்பதற்கு விருப்பமில்லை தேவையென்றால் வைப்பார்கள் இல்லையென்றால் இல்லை. திரைசேரியில் ஏன் பணம் இல்லை சுதந்திர தினம் கொண்டாடுவதற்கு பணம் இருக்கின்றது இதற்கு பணம் இல்லையா? இவ்வாறு ஏமாற்றியிருக்க தேவையில்லை தேர்தலை மொத்தமாக பின்போடுங்கள் என்று தேர்தல் ஆணைக்குழுவிடம் சொல்லியிருக்கலாம். அதைவிட்டுவிட்டு வைத்துவிட்டு வருமா வராதா என்று ஏமாற்றிக்கொண்டிருக்க தேவையில்லை. அச்சடிக்க தொடங்கி 22 ஆம் திகதி என்றால் 4 நாட்களுக்கு முன்னர் தான் சொல்லப்படுகின்றது தபால் மூல வாக்கெடுப்பு நடத்தப்படாது காலவரையறை இன்றி ஒத்திவைக்கப்படுகின்றது. தற்பொழுது அரசாங்க அச்சகத்திற்கு கொடுப்பதற்கு பணம் இல்லை. எரிபொருளுக்கு பணம் வழங்கமுடியாமல் இருக்கின்றது என்றெல்லாம் சொல்லுகின்றார்கள் இது உங்களுக்கு தெரியாதா அல்லது நூறு கோடி, ஐந்நூறு கோடி என்றால் நீங்கள் இந்தியாவிடம் பணம் கேட்டால் தரமாட்டார்களா? ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஒன்றில் அவர் தெளிவாக இருக்கின்றார் தான் முதலாவது தேர்தலாக ஜனாதிபதி தேர்தலை நடத்தி அதில் தான் வெற்றிபெறுவேன் என்று கனவு காண்கின்றார் வெற்றி பெறுவாரா? இல்லையா? என்பதை எதிர்காலம் தான் சொல்லும். இன்றிருக்கும் சூழலிலே அவருக்கு வலுவான ஒரு எதிர் வேட்பாளர் இல்லாத ஒரு சூழல் இன்று வரை இருக்கின்றது. எல்லாமே சிதறிப்போய் இருக்கின்றது பொதுஜன பெரமுன மொட்டு சின்னத்தில் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவரை பிரதமராக்கி ஜனாதிபதியாக்குகின்ற அளவிற்கு கேவலம் கெட்ட வெட்கம் கெட்ட நிலை தான் இருந்து கொண்டிருக்கின்றது. அதே போல ஐக்கிய மக்கள் சக்தி சஜித் பிரேமதாஸவாக இருக்கட்டும் அவருடைய ஆளுமை எல்லாமே ஒரு மாதிரியாக இருக்கின்றது. தற்பொழுது அவருடைய கட்சியை ஜே.வி.பி முந்திவிடுமான என்றவொரு கேள்வி கூட எழும்புமளவிற்கு இருக்கின்றது. எனவே இந்த சூழ்நிலையிலே ஒரு பொருத்தமான 50 வீதமான அரைவாசிக்கு மேலான வாக்குகளை பெறுபவர் தான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார்.

ஆகவே தான் எண்ணிக்கையிலே சிறுபான்மையினரான தமிழர்கள். மலையகத் தமிழர்கள். முஸ்லிம் மக்களுடைய வாக்குகளை கவர்வதற்காக ரணிலினுடைய நகர்வுகள் சென்று கொண்டிருக்கின்றன. எனவே இவையெல்லாம் ஜனாதிபதி தேர்தலை கடக்க வைக்கின்ற விடயம் தான். மற்றுமொரு விடயம் அவரால் 4 ஆண்டுகளிற்கு முன்னர் ஒரு நாள் முன்னராக கூட அவர்களால் அறிவிக்க முடியாது. ஜனாதிபதி தேர்தல் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்றது. எனவே 2023 நவம்பர் மாதத்திற்கு பின்னர் தான் ரணில் விக்ரமசிங்க இன்றைய ஜனாதிபதியினால் புதிய ஜனாதிபதி தேர்தலை நடத்துமாறு தேர்தல் ஆணையகத்திற்கு வேண்டுகோள்விடுக்க முடியும். அதன் பின்னர் அதற்கான ஏற்பாடுகள் கிட்டத்தட்ட 2 அல்லது 3 மாதங்கள் எடுக்கும் நியமன பத்திரங்கள் கோருவதற்கும் பிரச்சாரங்கள் செய்வதற்கும் பெரும்பாலும் அடுத்த ஆண்டு பெப்ரவரி அல்லது மார்ச் மாதம் முதல் வாரத்திலே ஜனாதிபதி தேர்தல் அவர் விரும்பினால் நடத்தக்கூடும்.

**கேள்வி : கட்சிகளுக்கிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தி தமிழ் தேசிய கூட்டமைப்பு பிளவடைந்த நிலையிலே இருக்கின்றது ஆனால் பிளவுபடவில்லை என்று தமிழரசுக் கட்சி கூறுகின்றது. ஆரம்பத்திலே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஒரு விடயத்தை குறிப்பிட்டார். பேச்சு வார்த்தை தீர்வு திட்டம் என்ற விடயத்திலே கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து வாருங்கள் என கூறி ஒருசில வாரத்திலேயே கட்சிகள் வேறுபட்டு நிற்கின்றதை காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த தமிழ் மக்கள் மீதான இவ்வாறான நிலைப்பாட்டை எப்படி பார்க்கின்றீர்கள்?**

பதில் : நாங்கள் அனைவருமே ஆதரித்தால் தான் பிழையே தவிர வேறு வேறு வழிகளிலே ஒரே விடயத்தை தான் கேட்கின்றோம் என்பதிலே மாறுபட்ட கருத்தில்லை. தற்பொழுது அவர் 13 ஆம் திருத்தத்தை நாங்கள் தீர்வாக ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று சொன்னாலும் கூட இருப்பதை அமுல்படுத்துங்கள் என்றால் அவர் தற்பொழுது சமஷ்டி இல்லை என்று கூறிவிட்டார். 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலிலே சமஷ்டியை தன்னுடைய தேர்தல் அறிக்கையிலே கொள்கையாக வைத்தவர் புலிகள் இருக்கும் பொழுது சமஷ்டியை பற்றி பேசியவர் தற்பொழுது இல்லை என்கின்றார். 13 ஆம் திருத்தம் என்று சொல்லும்பொழுது 13 ஆம் திருத்தம் வேண்டாம் என்று தென்னிலங்கையிலே பௌத்த பிக்குகளும் மற்றும் பலரும் கூக்குரல் விட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்த சூழலிலே 13 ஆம் திருத்தம் என்பது அதிலே மொத்த அரசியல் அமைப்பு 22 திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதில் 21 வது நிறைவேற்றப்படவில்லை அதே போன்று 12 ஆவதும் நிறைவேற்றப்படவில்லை. எது எவ்வாறாயினும் 22 திருத்தங்கள் அடங்கியது தான் இலங்கையினுடைய சோஷலிச குடியரசினுடைய அரசியல் யாப்பு. அதில் இருக்கக்கூடிய விதத்தையே இன்று 8வது ஜனாதிபதி வந்திருந்த நிலையிலே இவர்கள் அமுல்படுத்துவதற்கு தயாராக இல்லை முழுமையாக காணி பொலிஸ் அதிகாரங்கள் உட்பட. ஆகவே அடுத்ததை பற்றி பேசுவதற்கு என்ன இருக்கின்றது. ஒற்றுமையாக நீங்கள் சேர்ந்து வாருங்கள் கூட்டாக வாருங்கள் என்பது அந்த காலத்தில் ஒரு முஸ்லிம் அமைச்சர் சொன்னதைப் போன்று ஒன்றாக போய் ஒன்றுக்கு இருப்போம் என்று அவர் கூறிய விடயமானது அவர்



ஒரு கல்வி அமைச்சராக இருந்தவர் அவருக்கு தெரிந்த தமிழ் அவ்வளவு தான். இன்று இந்த சேட்டை எல்லாம் இல்லை நீங்கள் எம் மக்களுக்கு என்ன கொடுக்கப்போகின்றீர்கள் எதுவும் இல்லை நீங்கள் எதுவும் கொடுக்க தயாரில்லை 4 ஆம் திகதி தீர்வை தருவோம் என்று எதை சொல்லியிருக்கின்றார். 13 இல் தான் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் மாகாணசபை முறை ஏற்படுத்தப்பட்டது. 16 இல் தான் தமிழ் மொழிக்கான விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டது.

**கேள்வி : தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆரம்ப புள்ளி தான் அதில் ஒன்றுமில்லை என கருத்துப்பட அறிவித்திருக்கின்றாரே?**

பதில் : அவர் ஆரம்ப புள்ளி கூட இல்லை என்று சொல்லுகின்றார் அப்படியானால் எப்படி மாகாணசபைத் தேர்தல்கள் வந்தால் போட்டியிடப்போகின்றார்கள். எங்களைப் பொறுத்தவரையிலே வடக்கு கிழக்கு இணைந்த ஒரு தமிழர் தாயகம் நேரடியாக தமிழர் தாயகம் என்று சொல்லாவிட்டாலும் கூட தமிழ் பேசும் மக்களுடைய பாரம்பரிய வாழ்விடங்கள் அதே போன்று தமிழ் மக்களுடைய வடக்கு கிழக்கு எது முடிவாக இருக்கப்போகின்றது என்ற விடயங்கள் அங்கே இருந்தன. எனவே அது முன்னேற்றமான விடயங்கள் அதை விட்டுவிட்டு எதுவுமே இல்லை எதுவுமே இல்லை என்று சொல்லிக்கொண்டிருப்பது ஏதோ ஒரு பேஷனுக்கு 13 க்கு நாங்கள் எதிர்ப்பு ஒற்றையாட்சிக்கு நாங்கள் எதிர்ப்பு என்று சொன்னால் உங்களது பேரன் என்ன செய்தவன். 1948 இல் இருந்து 1972 வரை ஒற்றையாட்சியைத் தானே கேட்டார்கள் அதைப்பற்றி பேசத் தயாரா? தந்தை செல்வா சமஷ்டியை கேட்டுக்கொண்டிருந்த பொழுது. 13ஐ நாங்கள் தற்பொழுது இடைக்கால தீர்வாக கூட நாங்கள் ஏற்கத் தயாராக இல்லை. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தானே பெயர் அதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ற எந்த பதிவும் தேர்தல் ஆணையகத்திற்கு கொடுக்கப்படவில்லை. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சைக்கிள் சின்னத்தை பாதுகாத்துக்கொண்டிருக்கின்றார். அவர் விரும்பினால் அகில இலங்கை தமிழ் காங்கிரஸை பாதுகாக்கட்டும்.

ஆகவே தமிழ் தேசிய மக்கள் முன்னணியை அரசியல் கட்சியாக பதிவு செய்து விட்டு சைக்கிளை மாற்றிக்கொள்ளலாம். தமிழரசுக்கட்சிற்கும் நாங்கள் அதைத்தான் கூறினோம் தமிழ் தேசிய கூட்டமைப்பு வீட்டு சின்னத்தை வைத்துக்கொள்ளுங்கள். தமிழரசுக் கட்சிக்கு நீங்கள் சட்டியோ பானையோ எதையேனும் வைத்துக்கொள்ளுங்கள் மனமிருந்தால் இடமிருக்கும். எனவே அவர்கள் எல்லாம் எங்களிடம் இருக்க வேண்டும் என்பது தமிழரசுக் கட்சிக்கு என்ன வங்ரோத்து புத்தி இருக்கின்றதோ அதே புத்தி தான் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் ஆட்சியிலும் இருக்கின்றது இதிலே மாறுபட்ட கருத்து இல்லை.

எனவே இன்று பார்த்தால் ஐந்து கட்சி கூட்டணி சேரும் பொழுது ரெலோவினுடைய சின்னத்திலே நாங்கள் ஏன் போய் இருக்ககூடாது. நாங்களும் 46 ஆண்டுகள் தேர்தலில் இருந்தோம் புதிய கூட்டணிக்கான புதிய சின்னத்திலே போவோம். விக்னேஸ்வரன் ஐயாவுடன் பேசும் பொழுது அவர் கேட்டார் சிவாஜிலிங்கம் நீங்கள் ஏன் மான் சின்னத்தில் வரக்கூடாது என்று. அதற்கு நான் சொன்னேன் ஐயா நான் வீட்டு சின்னத்திலே பாராளுமன்ற உறுப்பினராகவும் மாகாணசபை உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டேன் ஒரு கட்சியின் சின்னம் என்ற காரணத்தினால் தான் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றோம் மற்றும்படி எந்த பிரச்சனையும் இல்லை என்று.

**கேள்வி : தராக்கி சிவராம் தொடர்புடைய அல்லது RR என்றழைக்கப்படும் ராகவன் அவரும் அந்த விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தார். அவருடன் இணைந்து பீட்டர் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தார். இவ்வாறு ஊடகவியலாளர் சிவராமுடைய கொலையுடன் தொடர்புடைய RR இன் DTNA என்று கூறப்படுகின்ற கட்சியிலே நீங்கள் இணைந்து செயற்படுவது ஆரோக்கியமாக தெரிகின்றதா?**

பதில் : தராக்கி சிவராம் எங்களுடன் சில விடயங்களில் பணியாற்றியவர் கொல்லப்பட்ட பொழுது இறுதிக் கிரியை அவரது பூதவுடல் மட்டக்களப்பு விமானப்படை கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய இடத்தில் அடக்கம் செய்த வேளையிலே நான் அங்கு இருந்தவன். அந்த வகையிலே புளொட் இயக்கத்தை சேர்ந்த பீட்டர் என்பவர் நீண்ட காலம் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டவர். பலர் அவரை விசாரித்திருக்க கூடும் அவரது கட்சி இவரது கட்சி என்றல்ல அதாவது புளொட் இயக்கமும் அதைப்போல வரதராஜ பெருமாளுடைய பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியும். திரு. ஆனந்த சங்கரி ஐயாவினுடைய தமிழர் விடுதலை கூட்டணியும் இணைந்து தான் 2008 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப் என்று வைத்திருந்தார். பின்னர் அது தற்பொழுது தமிழர் ஜனநாயக முன்னணி என்றவொரு பெயரில் மாற்றப்பட்டு மெழுகுதிரி சின்னத்திலே இருந்தது. இந்த மூன்று கட்சிகளும் சேர்ந்து முன்னணியாக பதிவு செய்து கொடுத்து அந்த யாப்பின் அடிப்படையில் தான் குத்துவிளக்கு சின்னம் வழங்கப்பட்டு அதற்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்ற பெயரிலே பதிவு இருக்கின்றது. தற்பொழுது என்ன நடந்தது என்றால் ஆனந்த சங்கரி ஐயா இவர்களுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அவர் அதிலிருந்து வெளியேறி விட்டார். வெளியேறியதன் பின்னர் இதை பயன்படுத்துவது சம்மந்தமாக பேசுகின்ற பொழுது திரு வரதராஜ பெருமாள் அணியை சேர்ந்தவர்கள் நீங்கள் பயன்படுத்துவதாக இருந்தால் நாங்கள் வெளியேறுகின்றோம் என்று கூறிவிட்டு அவர்கள் உத்தியோகபூர்வமாக நிர்வாகிகள் பட்டியலில் இருந்து அதனுடைய பொது செயலாளராக திரு. ராகவன் இருந்தார். அவர்கள் வெளியேறியதை தொடர்ந்து ஏனைய கட்சிகளில் இருந்தவர்கள் வந்திருக்கின்றார்கள்.

**கேள்வி : தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு எதிராகத் தான் அன்றை காலத்தில் உருவாக்கப்பட்டது தானே கூறுகின்றார்கள்?**

பதில் : ஏன் உருவாக்கப்பட்டது என்று நீங்கள் ஏன் கருதுகின்றீர்கள். 2010 பாராளுமைன்ற தேர்தலிலும் புளொட் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் வரவில்லையே. எனவே 2011 இல் தான் தமிழர் விடுதலை கூட்டணியும் புளொட் இயக்கமும் உள்ளே வந்தார்கள். அதன் பின்னர் தான் 2013 இல் மாகாணசபைத் தேர்தல்களிலே ஐந்து கட்சி கூட்டணியாக இருந்தார்கள். அதன் பின்னர் தமிழர் கூட்டணி வெளியே போனது அதன் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப் வெளியிலே போய்விட்டது. மூன்று கட்சிகளாக இருந்தது தற்பொழுது மூன்று கட்சி என்பது தமிழரசுக் கட்சி தானாக வெளியே போய்விட்டது இரண்டு கட்சி மிஞ்சியிருக்கின்றது இதுதான் நிலவரம்.

**தொடரும்...**

**நேர்காணல் : இரணியன்**

# உள்ளூராட்சிமன்ற தேர்தல் விவகாரத்தில்

# ரணிலின் ராஜதந்திர நகர்வு!



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்

**கேள்வி : ஒத்திவைப்பு தேர்தல் பிரேரணை தொடர்பாக நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில் : தேர்தல் ஒத்திவைப்பு பிரேரணையை வைப்பதற்கான நகல் பத்திரத்தை தாக்கல் செய்தவர் முன்னாள் இராணுவ தளபதி. கடந்த மாதம் 10 ஆம் திகதி அது விசாரிக்கப்பட்டு மீண்டும் இன்று விசாரணையின் தீர்ப்பு வழங்குவதாக இருந்தது ஆனால் தீர்ப்பு வழங்குவதற்கு மூன்று நான்கு நாட்களுக்கு முன்னரே தேர்தல் ஆணையகம் தங்களிடம் தேர்தல் நடத்துவதற்கான போதிய பணம் இல்லையென்ற விடயத்தையும் நீதிமன்றத்திற்கு வழங்கியிருந்தது. எனவே இன்று அந்த விபரங்களை ஆராய்ந்ததற்கு பின்னர் உயர் நீதிமன்றத்திற்கு ஒரு கடப்பாடு இருக்கின்றது. தேர்தலை நிறுத்துவதற்கோ அல்லது வேறொரு தினத்தில் தேர்தலை நடத்துங்கள் என்றோ அந்த தீர்ப்பில் கூறுவதற்கு அவர்கள் முற்படவில்லை ஏனென்றால் தேர்தல் ஆணையகம் சமர்ப்பித்த பத்திரத்தின்படி தேர்தல் நடத்துவதற்கான நிதியை நிதியமைச்சர் மூலமாக வழங்கப்படவில்லை. அந்த காரணங்களினால் தேர்தல் நடத்த முடியாது என்ற அறிக்கையை அவர்கள் சமர்ப்பித்திருக்கின்றார்கள்.

அதன் அடிப்படையில் தான் தற்பொழுது அந்த விசாரணை முற்றுபெறாத நிலையில் தேர்தல் தற்பொழுது அந்த விசாரணையை மீளவும் எடுப்பதாக மே மாதம் 10 ஆம் திகதி வரை மூன்று மாத காலம் இடைவெளி வரை பின்னோக்கி சென்றிருக்கின்றது. பின்னோக்கி சென்ற விடயத்தை நாங்கள் தீர ஆராய்வோமாக இருந்தால் நீதிமன்றம் அந்த தீர்ப்பை அவ்வாறு கூறினாலும் கூட மே மாதம் 11 அளவில் விரும்பினால் நிதி கிடைத்தால் தேர்தல் ஆணையகம் அந்த தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. அப்படி நடத்தினால் நடக்கட்டும் என்ற ஒரு விடயம் மறைமுகமாக இந்த தீர்ப்பிலே பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. இரண்டாவது விடயம் விசாரணையின் போது எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதிக்கு இடையில் அதற்கான வாய்ப்புக்கள் இல்லை தேர்தல் நடத்தக்கூடியளவு நிதி இல்லை என்பன வருவதற்கு அதற்கு இடையில் பல மாற்றங்கள் இடம்பெறவிருக்கின்றது. நான் நினைக்கின்றேன் தேர்தலை இவ்வாறு பிற்போடுகின்றபொழுது அதற்கிடையிலே ஏற்கனவே ஒரு உள்ளூராட்சிசபையில் புதிய எல்லை நிர்ணயம் சம்பந்தமாக தற்பொழுது ஆராயப்பட்டு முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பரிய அவர்கள் அறிக்கையை தயாரித்து அது முற்றுப்பெரும் தருணத்தில் இருக்கின்றது. அவ்வாறான அறிக்கையை அவர் சமர்ப்பித்து எடுப்பாராக இருந்தால் அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுமாயின் இப்பொழுதிருக்கும் தேர்தல் நடைமுறை தன்னிச்சையாக நிறுத்தப்படும் இதுதான் உண்மையான விடயம். தன்னிச்சையாக நிறுத்தப்படுமாக இருந்தால் இன்னுமொரு முறை புதிய எல்லை நிர்ணயம் மூலம் தான் தேர்தல் வருவதற்கான வாய்ப்புக்கள் கூடுதலாக இருக்கும் ஆனால் அது எந்தளவில் மே 11 க்கு இடையில் செய்யப்படுமா? என்பது கேள்விக்குறியாக இருக்கும்.

ஆனால் மே 11 என்பது தேர்தல் நிதி வழங்கப்படவில்லை என்றால் தேர்தல் நடத்துவதற்கு வாய்ப்பில்லை என்றால் அதைத் தான் நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்க இருக்கின்றது. அது எவ்வாறான தீர்ப்பாக வரும் என்று நாங்கள் தற்பொழுது சொல்ல முடியாது. பெரும்பாலும் ஒரு ஜனநாயக ரீதியான நாட்டில் ஜனநாயகத்திற்கு எதிராக எப்பொழுதும் நீதிமன்றம் இயங்குவது இல்லை. ஏனென்றால் நீதிமன்றம் ஏற்கனவே ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கின்றது தேர்தலை நடத்துவதற்கான கட்டளையிடப்பட்ட ஒரு தீர்ப்பும் இருக்கின்றது. எனவே அந்த அடிப்படையில் காலத்தை நீண்டு செல்லும் ஒரு வாழ்க்கையை வழங்கியிருக்கின்றது. ஏனென்றால் இலங்கை அரசாங்கம் தேர்தல் ஆணையகம் நிதியை கண்டுபிடிப்பதற்கான ஒரு காலக்கெடுவாகத்தான் நான் மே 11 வரையான அந்த தீர்ப்பை பார்க்கின்றேன்.

**கேள்வி : நிதி ஏற்கனவே இல்லை நாட்டின் பொருளாதார பிரச்சனை இவ்வாறு செல்லுகின்றது என்று தெரிந்தும் தேர்தல் ஆணையகம் இந்த அறிவிப்பை அறிவித்திருந்தது ஒரு பிழையான முடிவல்லவா?**

பதில் : நிச்சயமாக ஒரு தேர்தலை முழுமையாக பெறாமலே அவர்கள் உள்ளூராட்சிசபை தேர்தலுக்கான வர்த்தமானி பிரகடனம் செய்யப்பட்டது. வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை எல்லாம் உண்மையில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது பொருத்தமற்ற ஒரு தேர்தல் ஆணையகமாகத்தான் இதை நாங்கள் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. ஏனென்றால் இதை விளக்கி கூறுவதாயின் ஒரு திருமணம் முடிப்பதற்காக அழைப்பிதழ்களை அடித்துவிட்டு திருமணம் நடத்தமுடியாமல் திண்டாடும் ஒரு நிலை தான் இருக்கின்றது. அதுபோன்று தான் தற்பொழுது இந்த தேர்தலும் இருக்கின்றது. எல்லா விடயங்களையும் வேட்புமனு தாக்கம் செய்யப்பட்டு வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதைவிட தபால்மூல வாக்கெடுப்பிற்கான திகதி குறிக்கப்பட்டதற்கு பின்னர் இவ்வாறான ஒரு நடவடிக்கையை எடுத்திருப்பது ஆசியாவின் ஆச்சிரயம் இலங்கை தான். தேர்தல் முறையிலே ஒரு ஆச்சர்யமான முறையாக தற்பொழுது இது கணிக்கப்பட்டிருக்கின்றது.

ஆகவே ஒரு நகைச்சுவையான தேர்தல் ஆகவும் நகைச்சுவையான தேர்தல் ஆணையகமாகவும் நகைச்சுவையான நாடாகவும் நகைச்சுவையான ஜனாதிபதியுமாக இருக்கின்றது. ஜனாதிபதி அவர்கள் இன்று பாராளுமன்றத்திலே உரையாற்றும் பொழுது தேர்தல் சம்பந்தமாக அவர் கூறிய விடயம் தேர்தலை விரும்பினால் ஜனநாயக நாட்டில் நடத்தலாம் என்றமாதிரியான ஒரு கருத்தை வெளிப்படையாக கூறிவிட்டு இன்னொரு பக்கம் தேர்தலை நடத்தக்கூடாது என்பதுமான நடவடிக்கையைத் தான் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. எனவே இது உண்மையில் ஜனநாயக நாட்டில் தேர்தலை பிற்போடுவது என்பது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகவே இருக்கின்றது.

**கேள்வி : இதில் தேர்தல் இடம்பெறாது என்றால் அவர்களது கட்டுப்பணம் எல்லாம் திருப்பி வழங்குவார்கள் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?**

பதில் : பெரும்பாலும் மே 11 க்கு பின்னர் தேர்தல் நடத்த முடியாது என்ற ஒரு வர்த்தமானி பிரசுரம் மறு அறிவித்தல் வரை செய்ய வேண்டிவரும். அது எவ்வாறெனில் நான் ஏற்கனவே கூறியது போன்று புதிய முறை உள்ளூராட்சி தேர்தலுக்கான வர்த்தமானியிலே அது பிரசுரிக்கப்பட்டால் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து இந்த தேர்தல் முறை உடனடியாக ரத்து செய்யப்படும். அவ்வாறு ரத்து செய்யப்படுகின்றபொழுது தேர்தல் ஆணையகத்திற்கு ஒரு கடப்பாடு இருக்கின்றது. இந்த தேர்தல் முழுமையாக ரத்து செய்யப்படுகின்றது என்று அறிவித்தால் நிச்சயமாக கட்டுப்பணத்தை திருப்ப எடுக்கும் வாய்ப்பு இருக்கின்றது.

இவ்வாறு ஏற்கனவே தேர்தல் பிற்போடப்பட்டு 2001. 2004 காலப்பகுதிகளிலே அவ்வாறு உள்ளூ ராட்சிமன்ற தேர்தல்களிலே கட்டுப்பணத்தை திருப்பி எடுத்த வரலாறுகளும் இருக்கின்றன. அதை எடுக்கலாம் அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால் தற்பொழுதிருக்கும் ஒரு சிக்கல் என்னவென்றால் ஏறக்குறைய பல அரசாங்க ஊழியர்கள் இந்த வேட்பாளர்களால் நிறுத்தப்பட்டிருக்கின்றார்கள் பல கட்சிகளிலே. எங்களது இலங்கை தமிழரசுக் கட்சியிலும் நிறுத்தப்பட்டிருக்கின்றார்கள் அவர்கள் தற்பொழுது தொடர்ச்சியாக சம்பளமற்ற விடுமுறை இருக்கின்ற பொழுது அவர்களது பொருளாதாரம் எந்தளவு பாதிக்கப்படும் என்பதில் தான் கேள்விக்குறியாக இருக்கின்றது. தேர்தல் நடத்த முடியாது என்று கூறினாலும் கூட தேர்தல் பிற்போடப்பட்டிருந்தால் நாளை அவர்கள் கடமைக்கு சென்று தேர்தல் நடக்காது என்பதனை எதிர்பார்த்திருக்கலாம். தற்பொழுது நடக்குமா நடக்காதா என்பதைக்கூட தெரியாத அளவில் பல அரச ஊழியர்கள் தங்களின் பொருளாதார வாழ்க்கையை மேலே கொண்டுசெல்ல முடியாத நிலைமையும் இதில் இருக்கின்றது. அதையும் நாங்கள் சுட்டிக்காட்ட வேண்டி இருக்கின்றது.

**கேள்வி : ஒருவேளை உள்ளூராட்சிமன்ற தேர்தலை இடைநிறுத்தி மாகாணசபை தேர்தலை நடத்த வேண்டும் என்றவொரு சந்தர்ப்பம் இருக்கின்றதா?**

பதில் : உள்ளூராட்சிசபை தேர்தலுக்கே பணத்தை கண்டுபிடிக்காதவர்கள் மாகாணசபைத் தேர்தலுக்கு எவ்வாறு கண்டுபிடிக்கப்போகின்றார்கள். தேர்தல் நடத்துவதற்கு பணம் இல்லை என்று சொன்னால் அதில் சகல தேர்தல்களும் அடங்குகின்றது. மாகாண சபைத்தேர்தலாக இருக்கலாம் அல்லது உள்ளூராட்சிமன்ற தேர்தலாக இருக்கலாம். அதற்கும் இதற்கும் தேர்தல் முறை தான் வித்தியாசமாக இருக்கின்றதே தவிர பணச்செலவு ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். ஒரு தேர்தலை நடத்துவதற்கு எத்தனையோ மில்லியன் கோடி ரூபாய் தேவை என கூறிக்கொள்கின்றார்கள் அந்த நிதியை மாகாணசபை எங்கிருந்து எடுக்கப்போகின்றார்கள்.

**கேள்வி : அதற்கு தேவையான ஆயிரத்து நூறு கோடி ரூபாயையும் இந்தியா தருகின்றேன் என்று தானே கூறியது ஏன் தற்பொழுது அதை இடைநிறுத்தியிருக்கின்றது?**

பதில் : இந்தியா அல்லது பகீரங்கமான ஒரு நாடு அந்த தேர்தல் தான் அவர்களுக்கு முக்கியம் அதை நடத்துங்கள் என்று கூறினால் அதை இலங்கை அரசாங்கம் கணக்கில் எடுக்கும் என்பது இரண்டாவது விடயம் ஆனால் இந்த தேர்தலை நிறுத்திவிட்டு இன்னுமொரு தேர்தலை இடையில் மாகாணசபைத் தேர்தலை கொண்டுவருவார்கள் என்பதில் சிக்கல் ஒன்று இருக்கின்றது. என்னவென்றால் முதலாவது மாகாணசபைத் தேர்தலை எந்த முறையில் நடத்த வேண்டும் என்பது கூட இதுவரை பாராளுமன்றத்திலே அந்த சட்டமூலம் திருத்தப்படவில்லை அது நிலுவையில் இருந்து கொண்டிருக்கின்றது. அதை விகிதாசார தேர்தல் நடத்தப்படுவதா? அல்லது இதே தேர்தல் போன்று கலப்பு முறையில் நடத்தப்படுவதா? என்பது கூட இன்னும் முற்றுப்பெறாத வகையில் தான் மாகாணசபை சட்டமூலம் இருந்து கொண்டிருக்கின்றது. அதை எந்த முறையில் நடத்த வேண்டும் என்பதை பாராளுமன்றம் தீர்மானிக்க வேண்டும் அதன் பின்னர் தான் மாகாணசபைத் தேர்தலை பற்றி கதைக்கலாம் என நான் நினைக்கின்றேன்.

**கேள்வி : பாராளுமன்றத்தை கலைக்கக்கூடிய அதிகாரமும் தற்போதைய ஜனாதிபதியிடம் இருக்கின்றது. அதே நேரத்தில் 1100 கோடி செலவினம் தேவை என்பது ஒரு நாட்டில் இருந்து பெற்றுக்கொள்ள முடியாதா?**

பதில் : நிச்சயமாக தேர்தலுக்காக பணம் தாருங்கள் என இதுவரை ஜனாதிபதியோ அல்லது நிதி அமைச்சரோ பகீரங்காக எந்த நாட்டிடமும் கேட்கவில்லை. அவ்வாறு கேட்டிருந்தாலும் கூட சில நாடுகள் அதற்கு உதவுவதற்கு தயாராக இருப்பார்கள். அதைவிட பலர் எங்களுக்கு தேர்தலுக்கான பணம் தேவை என கூறுகின்ற பொழுது பல விடயங்களிலே அதை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. ஆனால் தேர்தல் நடத்தக்கூடாது என்ற மனப்பாங்கில் இருக்கின்ற பலர் நிச்சயமாக கேட்கமாட்டார்கள். ஆனால் மாகாணசபை தேர்தலுக்கு சட்டமூலத்தை கொண்டு வந்த இலங்கை இந்திய ஒப்பந்தத்தை கொண்டு வந்த இந்தியாவிற்கு ஒரு கடப்பாடு இருக்கின்றது தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது நீங்கள் கூறுவது சரியாக இருக்கின்றது. ஆனால் அதை செய்வதற்கு முன்பு சட்டத்திருத்தத்தை இலங்கை பாராளுமன்றம் திருத்த வேண்டும். அதுதான் தற்பொழுது நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கான காரணம் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. அவ்வாறிருக்கும் பொழுது மாகாணசபை தேர்தலும் நடத்தப்படுமென நான் நினைக்கவில்லை. எனவே இந்த வருடம் அந்த தேர்தலை நடத்த வாய்ப்பில்லை.

**கேள்வி : திருமணத்திற்கு அழைப்பிதலை வழங்கிவிட்டு அதை நடத்த முடியாத நிலை போன்று ஒரு அவமானத்திற்குள்ளான நிலைப்பாடாகத்தான் இந்த நிலை இருக்கின்றது என நீங்கள் கூறுகின்றீர்கள் அப்படித்தானே?**

பதில் : நிச்சயமாக அப்படித்தான். தற்பொழுது பெண்ணையும் மாப்பிள்ளையையும் நிர்ணயித்த பின் அழைப்பிதலை அடித்துவிட்டு தாலி கட்டுவதற்கு பணம் இல்லை. திருமண மண்டபத்திற்கு பணம் கட்டவில்லை அல்லது விருந்தினர்களை உபரிப்பதற்கான செலவீனங்களிற்கு பணம் இல்லை எனவே அந்த திருமணத்தை நாங்கள் ஒத்திவைத்துவிட்டு மே மாதம் 11 ஆம் திகதி தான் அதைப்பற்றி சிந்திக்க வேண்டும் என்பது போன்ற நிலை தான் தற்பொழுது உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பாகவும் வந்திருக்கின்றது அதில் மாற்றுக்கருத்தில்லை.


**கேள்வி : உள்ளூராட்சிமன்ற தேர்தல் நடந்தாலும் நடக்காவிட்டாலும் இதில் யாருக்கு இலாபம்? யாருக்கு நட்டம்?**

பதில் : கடந்த முறை உள்ளூராட்சிமன்ற தேர்தல் இடம்பெற்றிருக்கின்றது அதில் எதிர்பார்க்கத்தக்க அபிவிருத்திகள் எந்த மாவட்டத்திற்கும் இடம்பெற்றதாக தெரியவில்லை. அவர்களும் வருமானத்தை கொண்டு உள்ளூராட்சிமன்றத்தில் பெறப்பட்ட நிதியை கொண்டு மாத்திரம் பல சபைகள் செய்யப்பட்டிருக்கின்றது. அதிலே வடக்கு கிழக்கிலே இருக்கின்ற மாநகர சபைகள் போன்று சில சபைகள் என பலர் இருக்கின்றார்கள் அது போன்று தென் பகுதிகளிலும் செய்திருக்கின்றார்கள்.

ஆனால் இந்த வெளிநாட்டு உதவிகள் மூலம் வரவேண்டிய பல நிதிகள் உள்ளூ ராட்சிமன்றங்களிற்கு கிடைக்கவில்லை அதைப்போல 2018 ஆம் ஆண்டு வாக்குறுதிகள் அழிக்கப்பட்ட ஒவ்வொரு வட்டார உறுப்பினர்களும் 3 கோடி அல்லது ஒரு கோடி ரூபாய் பெறுமதியான அபிவிருத்திகளை செய்வதாக 2018 ஆம் ஆண்டு வாக்குறுதிகள் அழிக்கப்பட்டது நல்லாட்சி அரசாங்கத்தில். அது கூட எவருக்குமே வழங்கப்படவில்லை. எனவே உள்ளூராட்சி சபை மூலமாக மக்களுக்கான தேவைகள் முழுமையாக செய்யப்பட்டதா? என்று கேட்டால் இல்லை அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால் உள்ளூராட்சிசபையில் இருக்கின்ற வரிப்பணத்தின் மூலமாக சில மாநகரங்களிலே சில அபிவிருத்திகளை செய்திருக்கின்றார்கள் அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை.

**நேர்காணல் : இரணியன்**

# கடல் வளங்களை அழிக்கும் பொருளாதார வளர்ச்சி!



உலக உருண்டையில் நான்கில் மூன்று பங்கு (72 %) நீரால் ஆனது. அதில் பெரும்பகுதி கடலாக உள்ளது. இது இயற்கையின் பெருங்கொடைகளில் ஒன்று. கடல் பூமியின் பருவ நிலையைச் சீராக வைப்பதோடு மட்டுமல்லாமல் காற்றைச் சுத்தப்படுத்தவும். உணவு வழங்கவும் உதவி செய்து கோடிக்கணக்கான உயிரினங்கள் வாழுமிடமாகவும் இருக்கிறது. நுண்ணுயிரி முதல் உலகின் மிகப்பெரிய விலங்கான நீலத்திமிங்கலம் வரை கடலில்தான் வாழ்கின்றன.

இந்த பூமியிலுள்ள அனைத்து உயிர்களும் வாழ சம உரிமை உள்ளபோதும் உயிரினங்களின் இறுதித் தோற்றமாகிய மனிதனின் அளவு மீறிய நுகர்வுக் கலாச்சாரத்தின் காரணமாக ஒட்டுமொத்த உயிரினங்களும். தாவர வகைகளும். இயற்கை வளங்களும் அழிவுப் பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன. ஆம்! மனிதக்குலம் ஏற்படுத்தும் மாசு இதற்கு முக்கிய காரணமாக அமைகிறது. அதில் குறிப்பாகக் கடல் மாசுபடுவதால் மனிதனுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் பயன்படும் கடல் வளங்கள் அழிவை நோக்கிய ஆபத்தில் உள்ளன. இது உலகில் உள்ள ஒட்டு மொத்த உயிரினங்களுக்கும் பெருந்தீங்கு விளைவிக்கும். நிலத்தில் உள்ள எல்லா கழிவுகளும் இறுதியாகப் போய்ச் சேர்வது கடலில்.

**கடல் மாசுபட முக்கிய காரணிகளாகப் பின்வருபவை உள்ளன.**

**நெகிழிக் கழிவுகள் (பிளாஸ்ரிக் கழிவுகள்)**
**தொழிற்சாலை கழிவுகள்**
**அனுமின் நிலைய கழிவுகள்**
**கப்பல் போக்குவரத்து**
**பெருமழை**
**சுரங்கப் பணிகள்**
**பவளப் பாறைகளின் அழிவு**

இவற்றால் ஏற்படும் விளைவுகளை விரிவாகப் பார்ப்போம்.

### நெகிழிக் கழிவுகள்

கடலில் சிறுமீன்கள். பெரிய மீன்கள். திமிங்கிலம் போன்ற பாலூட்டிகள். கடல் விலங்குகள். தாவரங்கள் என ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் வகை உயிரினங்கள் உள்ளன. இதில் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிரிகளும் அடக்கம். உத்தேசமாக பதினாறாயிரத்துக்கும் மேற்பட்ட மீன் வகைகளும். இருபதாயிரம் வகை தாவரங்களும் உள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இவை கடல் மாசுபடுவதால் அழியும் அபாயமுள்ளது.

### பிளாஸ்ரிக் கழிவுகள்

இன்று கடலும். கடற்கரைகளும் குப்பைகளால் நிறைந்து காணப்படுகின்றன. அதில் பெரும்பகுதி நெகிழிக் குப்பையாக இருப்பது கவலை தரும் விஷயமாகும். நெகிழி மட்கிப் போவதற்கு நானூற்று ஐம்பது ஆண்டுகள் ஆகும் எனக் கணிக்கப்பட்டாலும் உறுதியாக எத்தனை வருடங்கள் ஆகும் எனச் சொல்லிவிட முடியாது. வட பசிபிக் கடலில் பெரும் தீவு போல நெகிழி குப்பைகள் சுமார் பதினான்கு லட்சம் சதுர கிலோமீட்டர் அளவில் மிதந்து கொண்டிருக்கின்றன. நூற்றியெண்பது கோடி டன் (ஒரு டன் என்பது ஆயிரம் கிலோ) நெகிழி துண்டுகள் மிதப்பதாகக் கருதப்படுகிறது. இந்த மொத்தக் கழிவு கடலின் மேற்பகுதியிலிருந்து நூறு மீட்டர் ஆழம் வரை நிறைந்திருக்கிறது. இதையே பசுபிக் கழிவு மண்டலம் என்கிறார்கள். இதுபோல் உலகெங்குமுள்ள கடல்களில் நெகிழி கழிவுகள் மிதக்கின்றன.

இவ்வாறு மிதக்கும் நெகிழி கழிவுகளால் கடல் வாழ் உயிரினங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. கடலில் மிதக்கும் நைலான் மீன்பிடி வலைகளில் சிக்கிக் கொள்ளும் மீன்களும். ஆமைகளும் நீந்தவோ. இரைதேடவோ முடியாமல் இறக்கின்றன. குளிர்பான டின். பாட்டில்களைப் பொதிந்து வரும் நெகிழிகளிலும் மீன்கள் மற்றும் ஆமைகள் சிக்கிக் கொள்ளும் காணொளிக் காட்சிகள் நெஞ்சைப் பதைபதைக்க வைப்பவை.

மேலும் நெகிழியை உணவாக உட்கொள்ளும் மீன்கள். அதனால் இரையைத் தேடுவதில் குழப்பமடைவதோடு நெகிழி வயிற்றில் ஜீரணமாகாமல் நோய் தாக்கி இறக்கவும் நேரிடும். ஆண்டுக்கு ஒரு லட்சம் பாலூட்டிகள். பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட பறவைகள் மற்றும் நிறையக் கடல் ஆமைகள் இக்கழிவுகளால் இறக்கின்றன. இந்தோனேசியாவில் ஒரு திமிங்கிலத்தின் வயிற்றில் ஆறு கிலோ எடையில் நெகிழி சேர்ந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதில் நெகிழி கப்புகள். உணவு பொதியப்படும் நெகிழி தாள்கள் போன்றவை இருந்தன.

கடந்த ஆண்டுகளில் அறுநூற்று ஐம்பதுடன் நெகிழி கழிவுகள் கடலில் கொட்டப்படுவதாக ஆய்வுகள் சொல்கின்றன. இதே நிலை தொடர்ந்தால் 2050ஆம் ஆண்டு கடலில் மீன்களை விட அதிகம் நெகிழி இருக்குமென ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கிறது. மேலும் சில வளர்ந்த நாடுகள் மருத்துவ கழிவுகளைக் கப்பல்கள் மூலம் ஏற்றி வந்து ஆழ்கடலில் நேரடியாகக் கொட்டிச் செல்வதும் வேதனையான விஷயம். இதில் அதிகமாக ஒருமுறை உபயோகித்து வீசி எறியப்படும் பைகள். குடிநீர். பழரசச் சாறுகள். குளிர்பான பாட்டில்களே மிக அதிகமாகக் காணப்படுகின்றன.

### தொழிற்சாலை கழிவுகள்

கடலை மாசுபடுத்துவதில் தொழிற்சாலைகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. கடற்கரையை மற்றும் துறைமுகங்களை ஒட்டிய தொழிற்சாலைகளின் கழிவுகள் சுத்திகரிக்கப்படாமல் கடலில் கலக்கப்படும்போது அவை கடலை அமிலத் தன்மை உடையதாக மாற்றுகின்றன. இது உணவுச் சங்கிலியில் பெரும் பாதிப்பை உண்டு பண்ணுகிறது. கடல் உணவை உட்கொள்ளும் பறவை மற்றும் விலங்குகளின் மூலம் அவ்வேதிப்பொருட்களின் நஞ்சு நிலத்தில் உள்ள விலங்குகளுக்கும் பரவி. அவற்றின் பால் மற்றும் இறைச்சியை உண்பவர்கள். நேரடியாக மீனை உண்பவர்கள் ஆகியோருக்கு புற்றுநோய் மற்றும் கொடிய நோய்கள் பரவ காரணமாகிறது. ஆண்டு தோறும் மூன்று கோடி லிட்டர் கழிவுநீர் கடலில் கலக்கிறது. முந்நூறு ஆண்டுகளில் இல்லாத அளவு கடல் அமிலமாக மாறியிருக்கிறது. இதில் முப்பது சதவீதம் தொழிற்சாலைகள் கடந்த இருநூறு ஆண்டுகளில் வெளியேற்றிய கழிவுகளால் ஏற்பட்ட சேதம்.

கடல் அமிலமாக மாறுவதால் கால்சியம் கார்பனேட் கரைந்து பவளம். சிப்பி. மட்டி(உடயஅ). ஓயிஸ்டெர் போன்றவை அழிந்துவிடும். கடலில் அமிலத்தன்மை அதிகரிக்கக் காற்றில் நாம் கலக்கும் கரியமில வாயுவும் ஒரு காரணம். சிலவகை புற்களை வளர்ப்பதால் கடலின் அமிலத்தன்மையைக் குறைக்கமுடியும் என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

### அனுமின் நிலைய கழிவுகள்

மின்சாரத் தேவைக்காக உலகெங்கும் உள்ள அணுமின் நிலையங்கள் தமது கழிவுகளைக் கடலில்தான் கொட்டுகின்றன. அதிலுள்ள சக்திவாய்ந்த கதிர்வீச்சு காரணமாக கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் கடல் வளம் பாதிப்புக்குள்ளாகிறது.

### பவளப் பாறைகள்

கோரல் பாலிப்ஸ் (polyps) எனும் நுண்ணுயிர் பாறைகளில் ஒட்டிக்கொள்கிறது. பின்னர் இந்த பாலிப்ஸ் வளர்ந்து பவளமாகிறது. இந்த பாலிப்ஸ் கால்சியம் கார்பனேட்டை சுரக்கிறது. அதில் மேலும் பல பாலிப்ஸ்கள் வந்து ஒட்டிக் கொள்வதால் இவை மிகக் கடினமானதாகிறது. வருடத்திற்கு இரண்டு இன்ச் வரை இது வளர்ந்து மிகப்பெரிய பவளப்பாறைகளாகின்றன. ஒவ்வொரு பவளப் பாறையும் தனது வாழ்வை இருநூறு கோடி ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கியிருக்கும். இவை அதிக அலைகள் இல்லாத மித தட்பவெப்ப சீதோஷ்ண நிலையில் மட்டுமே வாழும். எனவே பூமத்தியரேகையை ஒட்டிய நாடுகளில் இவை அதிகமாகக் காணப்படுகிறது.

கடலில் ஒரு சதவீதம் மட்டுமே உள்ள பவளப்பாறைகள் இருபத்தி ஐந்து சதவீதம் உயிரினங்களுக்கு வாழுமிடத்தைத் தருகின்றன. இவை காற்றிலுள்ள கார்பன் டை ஆக்ஸைடை குறைக்கிறது. கடலலையின் வேகத்தைக் குறைப்பதால் கடலோர மண்ணரிப்பை தடுக்கிறது. சுனாமி ஏற்பட்டபோது ராமேஸ்வரம் பகுதி அதிகம் பாதிப்புக்குள்ளாகாமலிருந்ததற்கு அப்பகுதியில் உள்ள பவளப்பாறைகளே காரணம்.

கடலில் அமிலத்தன்மை கூடும்போது பவளப்பாறையை உருவாக்கும் பாலிப்ஸ் எனும் நுண்ணுயிர் அதில் கரைந்துபோவதால் பவளப்பாறையின் வளர்ச்சி பாதிக்கிறது. மேலும் சுண்ணாம்பு. அழகிய நகைகள் போன்ற ஆபரணங்கள் செய்ய வெட்டி எடுப்பது. வெடிவைத்து மீன் பிடிப்பது. கடலில் மணலைக் கொட்டி துறைமுகம் அமைக்க. அல்லது நகர்ப்பகுதி விரிவாக்கம் (உதாரணமாகச் சிங்கப்பூர்) செய்யும் போதும். கடல் நீர் வெப்பமாதல் மற்றும் கடல் மாசு போன்றவற்றால் பவளப்பாறைகள் அழிவை நோக்கிச் செல்கின்றன. இன்று சில நாடுகளில் விமானநிலையங்களைக் கடலை நிரப்பித்தான் கட்டியுள்ளனர். இருபது சதவீதம் பவளப்பாறைகள் அழிந்துகொண்டிருப்பதாகவும் அடுத்த சில ஆண்டுகளில் இருபத்துநான்கு சதம் பவளப்பாறைகள் அழிவை எதிர்நோக்கியுள்ளதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.

பவளப்பாறைகள் அழிந்தால் கடல் மாசு அதிகரிப்பதோடு. கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் நிலவாழ் உயிரினங்களுக்கும் ஆபத்து ஏற்படும் என்பதில் ஐயமில்லை. சிலவகை கடற்புற்கள் கடல்நீரிலுள்ள கார்பனை உள்வாங்கி கடலின் அமிலத்தன்மையைக் குறைக்கிறது. இது பவளப்பாறைகள் அழிவதிலிருந்து தடுப்பதுடன் ஆரோக்கியமாக வாழவும் உதவுகிறது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### கடல்(கப்பல்) போக்குவரத்து

இன்று உலக வணிகத்தில் மிகக் குறைந்த செலவில் பொருட்களை ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்குக் கொண்டு செல்ல நீர்வழி போக்குவரத்து உள்ளது. அதில் கடல்வழி நவீன கப்பல் போக்குவரத்து பெரும் பயன்பாட்டில் உள்ளது. இன்று கடலில் நடக்கும் எண்ணிலடங்கா கப்பல் போக்குவரத்தால் கடல் மாசு அதிகரித்துள்ளது.

எண்ணெய்க் கப்பல்களிலிருந்து விபத்தால் கடலில் எண்ணெய் கொட்டுவதே கடல் மாசடைவதற்கு முக்கிய காரணி. 1989ஆம் ஆண்டு எக்ஸான் வால்டெஸ் (Exxon Valdzez) எனும் எண்ணெய் கப்பல் (oil tanker) பிரின்ஸ் வில்லியம் சவுண்ட்ஸ் பகுதியில் விபத்து ஏற்பட்டு ஒரு கோடி லிட்டருக்கும் அதிகமான கச்சா எண்ணெய்யைக் கடலில் கொட்டியது. இது ஆயிரத்து நூறு சதுர மைல்களுக்குப் பரவியது. மேலும் ஆயிரத்து ஐந்நூறு மைல் கடற்கரையைச் சேதப்படுத்தியது. இதில் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் கடல் பறவைகளும். இரண்டாயிரத்து எண்ணூறு கடல் நீர்நாய்களும். இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட வழுக்கை கழுகுகளும். உலகின் பெரிய விலங்கான இருபத்தியிரண்டு கில்லர் வகை திமிங்கிலங்களும் கொல்லப்பட்டன. விபத்து நடந்த பிரின்ஸ் வில்லியம் சவுண்ட்ஸ் பகுதி பல வகைப்பட்ட மீன்கள். பறவைகள் மற்றும் பாலூட்டிகள் வாழ உகந்த இடமாக இருந்தது. இந்த எண்ணெய்யைச் சுத்தப்படுத்தியபோது உணவு சங்கிலியில் இருந்த முக்கிய கூறுகள் மற்றும் உயிரினங்களை அழித்துவிட்டது வேதனையான விஷயம்.

விபத்து நடந்த ஓராண்டுக்குள்ளாகவே அப்பகுதி பெரும் பொருட்செலவில் சுத்தப்படுத்தப்பட்டாலும் அதன் சுற்று சூழல் பாதிப்பு இப்போதும் உள்ளது. இது உலக வரலாற்றில் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சுற்றுச் சூழல் பேரழிவுகளில் ஒன்று.

2014ஆம் ஆண்டுக்கு முன்புவரை கப்பலில் உள்ள காகிதங்கள் மற்றும் இரும்பு போன்ற கழிவுகளைக் கடலில் கொட்ட அனுமதியிருந்தது. 2014ஆம் ஆண்டுக்குப் பிறகு உணவுக் கழிவுகளை மட்டும் கரையிலிருந்து மூன்று மைல் தொலைவில் கொட்ட அனுமதியுள்ளது. அதிலும் சிறப்புக் கடல் பகுதிகளில் உணவுக் கழிவுகளையும் கொட்ட அனுமதியில்லை. IMO (International Marine Organization), MARPOL (MARine POLlution act) ஆகியவை கடுமையான சட்டங்களை வகுத்துள்ளன. நெகிழியைக் கடலில் கொட்ட எப்போதும் அனுமதியில்லை. ஒரு துளி எண்ணெய் கூட கடலில் கொட்டக் கூடாது. கப்பலில் சேகரமாகும் கழிவு எண்ணெய்கள் முறையாக எரிக்கப்படுகிறது. கப்பல்களின் ஸ்திரத்தன்மைக்காகச் செய்யப்படும் பலாஸ்ட் நீரையும் வெளியேற்றச் சட்டங்கள் உள்ளன.

அமெரிக்காவில் கப்பலில் நிறைக்கப்படும் கடல்நீரை இந்தியத் துறைமுகத்தில் வெளியேற்றினால் அதிலிருக்கும் சில உயிரிகளால் இந்தியக் கடல்பகுதியில் மட்டும் வாழும் சில சிறப்புக் கடல் உயிரினங்கள் அழிந்துபோகும். எனவே Balaast Water Management வகுத்துள்ள விதிப்படி அல்ட்ரா வயலட் கதிர்களைச் செலுத்தி நுண்ணுயிரிகள் அழிக்கப்பட்டபின்தான் பலாஸ்ட் நீரை வெளியேற்ற முடியும்.

கப்பலின் குளிக்கவும். துவைக்கவும் பயன்படுத்தப்பட்ட நீர். கழிப்பறை கழிவு நீர் ஆகியவற்றை வெளியேற்ற சில இடங்களில் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆழ்கடலில் அவை சுத்திகரிக்கப்பட்டு முறையாக வெளியேற்றப்படுவதைக் கடுமையான சட்டங்களைக் கொண்டும். துறைமுக அதிகாரிகளின் சோதனைகள் மூலமும் கண்காணிக்கப்படுகிறது. விதிகளை மீறி எண்ணெய்க் கழிவுகளைக் கடலில் கொட்டினால் மிக அதிக அபராதத் தொகையுடன். கப்பலின் மூத்த அதிகாரிகள் சிறை செல்லவும் சட்டங்கள் உள்ளன.

சரக்குப் பெட்டகங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களிலிருந்து ஆண்டுதோறும் பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட சரக்கு பெட்டகங்கள் மோசமான கடல் சீற்றம் மற்றும் விபத்துகளால் கடலில் மூழ்குகின்றன. இதில் அபாயகரமான சரக்குகள் (Dangerous goods) மற்றும் ரசாயனங்கள் ஏற்றிய சரக்கு பெட்டகங்கள் கடலில் மூழ்குவதால் ஏற்படும் கடல் மாசு பெரும் ஆபத்து நிறைந்த விளைவை உருவாக்கும் என்பதில் ஐயமேதும் இல்லை.

கடலில் உள்ள எண்ணெய்க் கிணறு மற்றும் திரவ வாயு நிலையங்கள் தொடர்ச்சியான உற்பத்தியால் கடலின் சுற்றுச்சூழலை அழிக்கும் அபாயகரமான வாயுக்கள் கடலில் கலக்கின்றன.

2010ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனத்துக்குச் சொந்தமான எண்ணெய்க் கிணறு மெக்சிகோ வளைகுடாவில் விபத்து ஏற்பட்டு வெடித்தபோது ஒரு கோடியே முப்பது லட்சம் காலன் கச்சா எண்ணெய் அந்த கடலில் கலந்தது. இதுவும் சுற்றுச் சூழலைப் பாதித்த மிகப்பெரிய விபத்து. அப்போது இதில் பணிபுரிந்த பதினோர் ஊழியர்கள் தவிர அக்கடல் பகுதியில் வாழ்ந்த எண்ணிலடங்கா கடல் பாலூட்டிகள். ஆமைகள். பறவைகள் மீன்கள் ஆகியவை கொல்லப்பட்டன. இந்த விபத்து நடந்து பன்னிரண்டு ஆண்டுகள் ஆனபின்பும் அந்த பகுதியில் வாழும் கடல் வாழ் உயிரினங்கள் பாதிப்புக்குள்ளாகின்றன. அதில் இருபது சதவீதம் டால்பின்கள் இப்போதும் கர்ப்பமடைவதில்லை என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

**11ஆம் பக்கம் பார்க்க...**

# பிராந்திய செய்திகள்

## ப்ரில்லியன்ட் பாலர் பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வளையத்தினால் சம்மாந்துறை ப்ரில்லியன்ட் பாலர் பாடசாலைக்குத் தேவையான கதிரைகள், மேசைகள் மற்றும் அத்தியாவசிய கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் தலைவர் வினோஜ்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது பாலர் பாடசாலைகளுக்குத் தேவையான ரூபா 65000 பெறுமதியான கதிரைகள், மேசைகள் மற்றும் அத்தியவசிய கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வை பாலர் பாடசாலையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம். முஹம்மட் சர்ஜீன் ஏற்பாடு செய்திருந்தார். இதன் போது நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் அங்கத்தவர்களும் கலந்து கொண்டு பொருட்களை வழங்கி வைத்தனர். மக்களுக்கு யோகாக் கலையின் உண்மைகளை உணர்த்த சைவ முன்னேற்றச் சங்கத்தின் மற்றுமொரு சேவையே அறிவொளி வளையம் என்பது குறிப்பிடத்தக்கது.





## மனித உயிர்களை பாதுகாப்பது தொடர்பில் கலந்துரையாடல்

சம்மாந்துறை பிரதேசத்தில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் அன்று (25)அதிகாலை யானை தாக்குதலில் ஒருவர்உயிரிழந்துள்ளதுடன்மூவர்வைத்தியசாலையில்சிகிச்சைபெற்றுவருகின்றமைஅறிந்தசம்மாந்துறைபிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.எம்.எம். தௌபீக் அவர்களை தொலைபேசியின் ஊடாக தொடர்பு கொண்டு பிரதேசத்தில் யனைகளினால் பலர் மரணம் அடைந்துள்ளதுடன், பொதுமக்களின் உடமைகளையும் நாளாந்தம் சேதப்படுத்துவதையும், தெளிவுபடுத்தினார். சம்மாந்துறை பிரதேசத்தில் யானைகளினால் ஏற்படும் பிரச்சினைகளை கட்டுப்படுத்துவது தொடர்பான அவசர கலந்துரையாடல் அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தலைமையில் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் அன்று இடம்பெற்றது.



இதில் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் மாவட்ட உதவிப்பணிப்பாளர் பிரசாந்த, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப்பணிப்பாளர் எம்.சீ.எம்.றியாஸ், வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களான ஜெகதீஸ், சுரேஸ்குமார், சிசிரகாமினி, கித்சிறி மெமன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் சேதம் ஏற்படுத்தும் குறித்த ஒரு யானையை இனங்கண்டுள்ளதாகவும் அதனை வனவிலங்கு சரணாலயத்திற்கு இன்று ஏற்றி செல்லுவதற்கான நடைவடிக்கை எடுப்பதாகவும், விவசாய நடவடிக்கை முடியும் வரை யானைகளை வனவிலங்கு பாதுகாப்பு செயலணியும், சிவில் பாதுகாப்பு படையும் இணைந்து விவசாயிகளின் பாதுகாப்பை வயல் நிலப் பகுதிகளில் உறுதிப்படுத்துவதாக தீர்மானிக்கப்பட்டது. அதனுடன் நீண்டகால பாதுகாப்பு திட்டதினையும் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

## மருந்து தட்டுப்பாடு தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆய்வு செய்கிறது

மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் குறித்து விசேட விசாரணை நடத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. நிலைமை குறித்து விசாரணை நடத்துமாறு சுகாதார அமைச்சுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மருத்துவம் மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்கள் தொழிற்சங்கம் மனுவை சமர்ப்பித்தது, தற்போதைய மருந்து தட்டுப்பாடு மனித உரிமை மீறல் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோர் இந்த மனுவின் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

## கடவுச் சீட்டு பெற வருபவர்களுக்கு வழங்கப்படவுள்ள வசதி

தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு பெற வரும் பொதுமக்களின் வசதிக்காக, அந்த இடத்தில் இருக்கைகளை பொருத்த, நகர அபிவிருத்ததிகார சபை நடவடிக்கை எடுத்து வருகிறது. நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் திரு. நிமேஷ் ஹேரத் மேற்கொண்ட கள ஆய்வுப் பயணத்தின் பின்னரே இது இடம்பெற்றது.

குடிவரவு குடியகழ்வு திணைக்களம் மற்றும் ஆட்பதிவு திணைக்களத்திற்கு கடவுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வதற்காக தினமும் ஏராளமான மக்கள் வருகை தருகின்றனர். உட்காருவதற்கு போதிய இருக்கைகள் இல்லாததால், மரங்களின் கீழ், சுவர்களுக்கு மேல், வீதிகளில் அமர்ந்து விடுகின்றனர். இதற்கு தீர்வாக அந்த இடத்தில் பொதுமக்கள் அமர்வதற்கு இருக்கைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## முட்டை இறக்குமதிக்கான வரி திருத்தம்

நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் முதல் தொகுதி முட்டை எதிர்வரும் திங்கட்கிழமை நாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இலங்கை அரச வர்த்தக சட்ட கூட்டுத்தாபனம் இந்த முட்டைகளை இறக்குமதி செய்யவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். முதன்முறையாக இந்தியாவில் இருந்து கிட்டத்தட்ட 02 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, முட்டை இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள விசேட வர்த்தக வரியில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கை அரச வர்த்தக சட்ட கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்படும் முட்டை ஒன்றின் மீது நிதி அமைச்சினால் விதிக்கப்பட்டிருந்த 50 ரூபா விசேட சரக்கு வரி பெப்ரவரி 21 ஆம் திகதி முதல் ஒரு ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. குறித்த வரித் திருத்தம் மூன்று மாத காலத்திற்கு செல்லுபடியாகும் என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.



## உரங்களை இறக்குமதி செய்ய நடவடிக்கைகள்

எதிர்வரும் பருவங்களுக்கான உரங்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய உர செயலகம் தெரிவித்துள்ளது.

உலக விவசாய அமைப்புடன் தொடர்பு கொண்டு உர இறக்குமதிக்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதன் பணிப்பாளர் சந்தன முத்துஹேவகே குறிப்பிட்டார். கடந்த பருவத்தில் இறக்குமதி செய்யப்பட்ட உரம் இன்னும் இருப்பு உள்ளதாக சந்தன முத்துஹேவகே தெரிவித்தார்.

## இராணுவ முகாமில் இராணுவ வீரர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை

பனாகொட இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவ சிப்பாய் ஒருவர் தனது சேவைத் துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துள்ளார். உயிரிழந்தவர் மாத்தளை நாவுல பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அன்று(24) மாலை பனாகொட இராணுவ முகாமின் 12 ஆவது பீரங்கி படையணிக்கு முன்பாக இந்த இராணுவ வீரர் தனது துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுக் கொண்டுள்ளார். துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை என இராணுவம் தெரிவித்துள்ளது. பனாகொட இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் ஹோமாகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தேசிய வைத்தியசாலை சிற்றூழியர்கள் இருவர் ஹெரோயினுடன் கைது

ஹெரோயினுடன் தேசிய வைத்தியசாலையின் ஊழியர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சிற்றூழியர்கள் இருவரை பொரளை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்கள் இருவரும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்களுக்கு ஹெரோயின் கடத்தலில் தொடர்பு உள்ளதா என்பது குறித்தும் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. முன்னதாக, போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டிருந்த தேசிய வைத்தியசாலையின் சிற்றூழியர் ஒருவர் கட்டுநாயக்க பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.



# சினி துளிகள்




## பஹீரா பட அப்டேட்

இயக்குனர் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் பிரபுதேவா நடித்துள்ள திரைப்படம் "பஹீரா". சைக்கலாஜிக்கல் திரில்லராக உருவாகியுள்ள இந்த படத்தில் அமைரா தஸ்தூர், ரம்யா நம்பீசன், ஜனனி ஐயர், சஞ்சிதா ஷெட்டி, காயத்ரி சங்கர், சாக்ஷி அகர்வால், சோனியா அகர்வால் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

அபிநந்தன் ராமானுஜன் ஒளிப்பதிவு செய்துள்ள இந்த படத்திற்கு கணேசன் சேகர் இசையமைத்துள்ளார். பிரபுதேவா பல வேடங்களில் நடித்துள்ள "பஹீரா" படத்தின் டிரைலர் 2021-ம் ஆண்டு வெளியானது.

இப்படம் கடந்த ஆண்டு வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது. சில தினங்களுக்கு முன்பு இப்படம் வருகிற மார்ச் மாதம் 3-ந் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இப்படத்தின் புதிய அப்டேட்டை படத்தின் இயக்குனர் ஆதிக் ரவிச்சந்திரன் வெளியிட்டுள்ளார். அதன்படி பஹீரா படத்தின் டிரைலர் மற்றும் பாடல்கள் வருகிற மார்ச் 25ம் திகதி வெளியாகும் என அறிவித்துள்ளார்.




## இரண்டு தோல்விக்கு பின்பும் தமிழ் படத்தில் நடிக்கவரும் பூஜா ஹெக்டே..

தமிழில் மிஸ்கின் இயக்கத்தில் வெளிவந்த முகமூடி படத்தில் நடித்து நடிகையாக அறிமுகமானவர் பூஜா ஹெக்டே.

இப்படம் தோல்வியை தழுவியதனால் பூஜா ஹெக்டே ராசியில்லாத நடிகை என்று கோலிவுட் வட்டாரத்தில் கிசுகிசுக்கப்பட்டுள்ளது.

இதனால் தெலுங்கு திரையுலகம் பக்கம் கவனம் செலுத்திய பூஜா பல வெற்றிப்படங்களை கொடுத்தார். தெலுங்கில் மட்டுமின்றி இந்தியிலும் வெற்றி நாயகியாக மாறினார்.

இதன்பின் சில ஆண்டுகள் கழித்து மீண்டும் தமிழில் என்ட்ரி கொடுத்த பூஜா, தளபதி விஜய்யுடன் இணைந்து நடித்திருந்தார். இப்படமும் எதிர்பார்த்த வெற்றியை அவருக்கு தரவில்லை.

இந்நிலையில் இந்த இரு திரைப்படங்களை தொடர்ந்து மீண்டும் தமிழில் புதிய படத்தில் கமிட்டாகியுள்ளாராம் பூஜா.

ஆர்யா நடிப்பில் லிங்குசாமி இயக்கவிருக்கும் பையா 2 படத்தில் கதாநாயகியாக பூஜா ஹெக்டே தான் நடிக்கவுள்ளாராம்.

அதற்கான பேச்சு வார்த்தை நடந்து வருவதாகவும் கூறப்படுகிறது. விரைவில் இதற்கான அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வெளியாகும் என தெரிவிக்கின்றனர்.



## இலங்கை பெண்ணை நடிகர் சிம்பு திருமணம் செய்ய இருக்கிறாரா?

நடிகர் சிம்புவிற்கு சில காதல் தோல்விகள் ஏற்பட்டது. அதெல்லாம் நமக்கு தெரிந்த விஷயம் தான். 40 வயதாகும் சிம்புவிற்கு அவரது வீட்டில் பெண் தேடி வருகிறார்கள். அவ்வப்போது திருமணம் குறித்து சில வதந்திகளும் வருகின்றன.

தற்போது என்னவென்றால் இலங்கையில் உள்ள பிரபல தொழிலதிபரின் மகளை சிம்பு திருமணம் செய்ய போவதாகவும் அவரது பெற்றோர்கள் தேர்வு செய்து முடித்துவிட்டார்கள் என செய்திகள் வந்துள்ளன. இது உண்மையா இல்லையா என்பது சிம்பு தரப்பில் இருந்து தான் கூற வேண்டும். ஆனால் நடிகர் சிம்புவின் திருமணத்தை பார்த்த ரசிகர்கள் ஆவலாக உள்ளனர் என்பது மட்டும் உண்மை.



## சந்திரமுகி 2 படப்பிடிப்பை நிறைவு செய்த படக்குழு



நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில் இயக்குனர் பி.வாசு இயக்கத்தில் வெளியாகி சூப்பர் ஹிட் ஆன திரைப்படம் சந்திரமுகி. இந்த படத்தின் 2-ம் பாகத்தை எடுக்க சில ஆண்டுகளாகவே வாசு முயற்சித்து வந்தார். அதன்பின் 17 வருடங்கள் கழித்து இப்படத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு சமீபத்தில் வெளியானது.

தற்போது "சந்திரமுகி 2" என்ற பெயரில் இப்படம் பிரமாண்டமாக உருவாகிறது. பி.வாசு இயக்கும் இப்படத்தில் ராகவா லாரன்ஸ் கதாநாயகனாக நடிக்க, முக்கிய கதாபாத்திரத்தில் வடிவேலு நடிக்கிறார். லைகா நிறுவனம் இந்த படத்தை தயாரிக்க, எம்.எம் கீரவாணி இசையமைக்கிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

படக்குழு சமீபத்தில் இப்படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பில் நடிகை கங்கனா ரனாவத் இணைந்துள்ளதாக அவர் தனது சமூக வலைதளத்தில் புகைப்படம் பகிர்ந்து தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் சந்திரமுகி 2 படத்தின் ஒரு கட்ட படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதாக அறிவித்து படக்குழுவினரின் புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளனர். தற்போது அந்த புகைப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது.

## விரைவில் முடிவுக்கு வரும் சீரியல்

சீரியல்களுக்கு பெயர் போன தொலைக்காட்சி என்று முன்பெல்லாம் சன் டிவியை கூறுவார்கள். ஆனால் இப்போது எல்லா தொலைக்காட்சியிலும் தொடர்கள் ஒளிபரப்பாகி வருகின்றன.

விஜய் டிவியில் மதியம் மற்றும் மாலை நேரங்களில் வெற்றிகரமான ஒளிபரப்பாகின்றன. இளைஞர்களை கவரும் தொடர்கள், வீட்டுப் பெண்கள் பார்ப்பது போல் கதையுள்ள தொடர்கள் என ஒளிபரப்பாகின்றன.

தற்போது விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் ஒரு தொடர் முடிவுக்கு வரப்போவதாக தகவல் வந்துள்ளது. அதாவது மாலை ஒளிபரப்பாகும் மௌன ராகம் 2 தொடர் விரைவில் முடிவுக்கு வரப்போகிறதாம்.

இதைக்கேட்ட ரசிகர்கள் நன்றாக தானே ஓடிக் கொண்டிருக்கின்றது ஏன் முடிவுக்கு கொண்டு வருகிறீர்கள் என ரசிகர்கள் கமெண்ட் செய்து வருகிறார்கள்.



# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

09

திருகோணமலையில் இருந்து கொண்டு தமிழ் மக்களின் பிரச்சனையை நாடாளுமன்றத்திற்கு எடுத்துரைத்து பல செயற்பாடுகளை காண்பித்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் துரைசிங்கம். ஒவ்வொரு நாடாளுமன்ற அமர்விலும் திருமலையின் பிரச்சனைகள் தமிழ் உறுப்பினர்கள் தமிழ் மக்களின் பிரச்சனைகளை கதைக்கும் போது சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தம் போட்டு மேசைகளில் அடித்தும் பேசவிடாமல் குழப்புவார்கள். ஆனாலும் தமிழ் உணர்வாளர்கள் சிங்களத்தின் இந்த கெடுபிடிகளுக்குள்ளும் இருந்து கொண்டு தமிழ் பிரச்சனைக்கு குரல் கொடுத்தார்கள். ஆனால் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு தான். இவ்வாறு தான் தமிழ் மக்கள் பேரவை தலைவர் விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் கடற்தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்தும் திருகோணமலையில் சிறிலங்கா படையினரின் கடல் வளைய தடைச்சட்டம் தொடர்பாகவும் வன்னியில் உள்ள ஊடகம் ஒன்றிற்கு 06.04.2006 அன்று இரவு செவ்வியளித்திருந்தார் செவ்வியளித்த மறுநாள் காலை திருமலை சிறிலங்கா காவல் நிலையத்திற்கும் காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கும் இடையில் உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் மத்திய கிளையினுள் விக்கினேஸ்வரன் துளையும் போது ஒட்டு குழுவினரால் சுட்டு கொல்லப்படுகின்றார்.

அவரின் இழப்பு திருகோணமலையில் தமிழ் மக்கள் மத்தியில் பாரிய இழப்பாக கருதப்பட்டது. இந்த படுகொலையானது ஜெனீவா பேச்சுக்களிலிருந்து விடுதலைப் புலிகளை விலக செய்யும் முயற்சியென தமிழ் தேசிய கட்டமைப்பினர் கண்டனம் வெளியிட்டு இருந்தனர். இவரது தமிழ் உணர்வு செயற்பாட்டினை கௌரவித்து தமிழீழ தேசிய தலைவர் பிரபாகரன் அவர்கள் மாமனிதர் என்ற உயர் விருதை வழங்கி கௌரவித்தார். இவரது வாழ்வு திருகோணமலை மக்களோடும் மண்ணோடும் ஒன்றியதாகவே இருந்தது. இவர் திருமலை மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்தார். அங்கு தலைவிரித்தாடும் இராணுவ அடக்கு முறையையும் நில ஆக்கிரமிப்பையும் முழு மூச்சாக எதிர்த்து நின்றார்.

எமது மண் எமக்கே சொந்தம் என்று உரிமை குரலை ஆக்கிரமிப்பு இராணுவத்திற்குள் இருந்து கொண்டே உலகிற்கு உரத்து கூறினார் என தமிழீழ தேசிய தலைவர் இவரது தேசத்துக்கான பங்களிப்பையும் அதற்காக துணிந்து செயற்பட்ட அவரது வீரத்தையும் தனது அறிக்கையில் எடுத்து கூறியிருந்தார். இவரது உடலம் வன்னிக்கு எடுத்துவரப்பட்டு பல இடங்களில் பெருமளவான மக்களினதும் போராளிகளினதும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்பு திருகோணமலையில் அடக்கம் செய்யப்படுகின்றது. இவரது படுகொலை தொடர்பிலான அறிக்கையை திருமலை கண்காணிப்பு குழுவினர் கொழும்பு தலைமையகத்துக்கு அனுப்பி வைத்து படுகொலை செய்யப்பட்டதற்கு முதல் நாள் கடல்வலைய தடைசட்டத்தை நீக்குவது தொடர்பாக கடற்தொழிலாளர்கள் அமைப்புடன் கண்காணிப்பு குழுவினரை சந்தித்து நீண்ட நேரம் விவாதித்து இருந்தார். இப்படுகொலை தொடர்பில் பலரிடம் விசாரணை நடத்திய கண்காணிப்பு குழுவினர் சம்பவம் நடைபெற்ற இடத்தின் நிழற்படங்களையும் இணைத்து அறிக்கை தயாரித்து கொழும்பிற்கு அனுப்பிவைத்து தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக கண்காணிப்பு குழுவிடம் விக்னேஸ்வரன் பலமுறை முறைப்பாடு செய்திருந்ததையும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது.

இவரது படுகொலையின் தொடர்ச்சியாக திருமலையில் சில வன்முறை சம்பவங்கள் வெடிக்கின்றன சிங்கள காடையர்களால் தமிழ் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு. கைக்குண்டு தாக்குதல்கள் என தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. பாடசாலை மாணவர்கள் கூட சுட்டு படுகொலை செய்யப்படுகின்றார்கள். படையினரால் வல்வளைக்கப்பட்ட சம்பூர் பிரதேசம் அதியுயர் பாதுகாப்பு வளையமாக படையினரால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பின்பு முதூர் கிழக்கு பிரதேசத்தில் சிங்கள கடற்தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடுகின்றார்கள். இன்னொரு பக்கம் பௌத்த மதத்தை கட்டியெழுப்புவதில் சிறிலங்கா இராணுவம் எடுபடுகிறது.



வெருகல் (45) ம் கட்டை வாழைத்தோட்டம் கட்டடி புன்னையடி இலங்கை துறைமுகத்துவாரம் போன்ற பகுதிகளில் பௌத்த மதம் வளர்ந்த வரலாற்று சின்னங்கள் இருப்பதாக சிறிலங்கா படையினரால் அறிவிக்கப்படுகின்றது. (இக்கிராமங்கள் வெருகல் (18) பிரதேச சபைக்குள் அடங்குபவை) (45) ம் கட்டை எனப்படும் இடத்தில் பெரிய பெரிய மலைகள் பாறைகள் கற்கள் உள்ளன இவற்றில் கோவில்களும் உள்ளன. அவ்வாறான சில பாறைகளின் உச்சியில் புத்தர் சிலை நாட்டப்படுகின்றது. கல்லடி எனப்படும் இடத்தில் (120) அடி உயரம் கொண்ட மலை காணப்படுகிறது. அதன் உச்சியில் முருகன் ஆலயம் உள்ளது. சில விசித்திரமான எழுத்துக்கள் அந்த மலையில் பொறிக்கப்பட்டுள்ளன.

இதனை சிங்கள மூதாதையர்களை கொண்டு சிறிலங்கா அரசு ஆய்வு செய்து தொன்மையான பௌத்த மதம் இருந்ததற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று அறிக்கை வெளியிடுகின்றது. இதன் பின்பும் அங்கும் பௌத்த விகாரை அமைக்கப்படுகின்றது. அதே போல் இலங்கை துறைமுகத்துவாரத்தில் (70) அடி உயரம் கொண்ட கடற்கரை அருகில் கல்லுமலை ஒன்றும் உள்ளதாக இதன் உச்சியில் வேளாங்கண்ணி மாதா கோவில் உள்ளது. அருகில் பெரிய ஆற்று தொடுவாய் உள்ளது. இதனை எல்லாம் ஆராய்ந்துவிட்டு பௌத்த மதம் சிங்கள மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் உண்டு என தெரிவிக்கின்றார்கள். இவ்வாறு சம்பூர் பிரதேசத்தில் மலைகளும் ஆற்று மரங்களின் கீழும் புத்த விகாரைகள் கட்டப்பட்டு பௌத்த மதம் பரப்பப்படுகின்றது. தமிழர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் அளிக்கப்படுகின்றன. இது ஒருபுறம் இருக்க இந்தியாவுடன் அனல் மின் நிலையம் அமைப்பதற்கு ஒப்பந்தம் எழுதப்படுகின்றது. தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடம் சம்பூர் சொந்த வீடுகள் விவசாய காணிகள் இங்குள்ளன. தமிழ் மக்களின் பூமியை அயல் நாட்டிற்கு தாரை வார்கிறது. சிறிலங்கா தமிழர்கள் நிலத்தையும் இழந்து சூழல் பாதிப்பையும் சுகாதார சீர்கேட்டை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இதன் மூலம் சிங்கள மக்கள் பெருமளவு பயனடைய இருக்கின்றார்கள்.



அதாவது இந்தியாவின் அனல்மின் நிலையம் நிறுவப்பட்டால் அங்கு வேலை செய்பவர்கள் சிங்களவர்கள் பின்பு அவர்களின் குடும்பங்கள் அருகில் உள்ள தமிழ் கிராமங்களில் குடியேற்றப்படுவார்கள். இவ்வாறு ஒட்டுமொத்த தமிழின அழிப்பை சிறிலங்கா அரசு நீண்டகால திட்டமிடலின் அடிப்படையில் மேற்கொள்கின்றது. இதன் முதற்கட்டமே திருகோணமலையில் இருந்து விடுதலைப்புலிகள் வெளியேற்றப்பட்டு தமிழின உணர்வாளர்கள் அளிக்கப்பட்டு தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டு தமிழர்கள் அனாதை ஆக்கப்பட்டார்கள்.

தொடரும்...

07ஆம் பக்க தொடர்ச்சி...

**ஒலி மாசு**

கடல் எப்போதும் பேரமைதியில் இருக்கும். டால்பின்கள். திமிங்கிலம் போன்ற பாலூட்டிகள் மற்றும்குறிப்பிட்ட மீனினங்கள்இரை தேடுவதற்காக ஒலி எழுப்பி தனது இனத்துக்கு அறிவிக்கும். இவை கடலில் மனிதனால் ஏற்படுத்தப்படும் ஒலிமாசுவால் பாதிக்கப்படுகிறது. கடலின் ஒரு பகுதியிலிருந்து வேறு பகுதிக்கு மூவாயிரம் மைல்கள் வரை பயணிப்பவை திமிங்கிலங்கள். இவற்றின் பயணப் பாதை கடலில் ஏற்படுத்தும் ஒலியால் பாதிக்கப்படுவதோடு ஏராளமான மீனினங்கள் இறக்கின்றன. அமெரிக்கக் கடல்பகுதியில் திமிங்கிலங்கள் வாழும் பகுதிகளாகக் கண்டறியப்பட்ட இடங்களில் கப்பலின் வேகத்தைக் குறைத்துச் செல்ல அறிவுறுத்தப்படுகிறது (அதிக பட்சம் 10 மழெவ வேகம்). கோடிக்கணக்கான கப்பல்கள் பயணிப்பது. எண்ணெய் மற்றும் திரவ வாயுக்காக எண்ணெய்க் கிணறுகளில் நடக்கும் தொடர் உற்பத்தியால் ஏற்படும் ஓசை ஆகியவை கடலில் ஒலி மாசு ஏற்படக் காரணம்.

**பெரும் மழைக்காலம்**

மனிதனால் பூமியில் வீசப்படும் அனைத்து கழிவுகளும் இறுதியாகக் கடலில்தான் வந்து சேர்கிறது. பெருமழை பெய்யும்போது நிலத்தில் உள்ள அனைத்து குப்பைகளும் ஆறுகள் வழியாகப் பயணித்து கடலில் போய்ச்சேர்கின்றன. தங்கம் மற்றும் கனிம வளத்துக்காக சுரங்கப்பணிகளின் போது வெளியேற்றப்படும் கழிவுகளாலும் கடல் மாசடைகிறது.

**வாழ்வாதாரம், பொருளாதாரம் இழப்பு**

உலகம் முழுவதும் இன்று மீன் முக்கிய உணவாக உள்ளது. மீன்பிடி தொழில் மூலம் கடலை நேரடியாகச் சார்ந்து வாழ்பவர்களும், மறைமுகமாகக் கடலை சார்ந்து வாழ்பவர்களும் கோடிக்கணக்கானோர். கடல் மாசுபடுவதால் மீன்பிடி தொழில் பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் வாழ்வாதாரம் அழிவதோடு மிகப்பெரிய பொருளாதார இழப்பும் ஏற்படும். கடல் மாசுபடுவதால் பல்லுயிர் பெருக்கம் தடைப்படுவதோடு. நோய் பெருகவும் காரணமாகிறது. கடல் பூமியின் சுவாசப்பை என்று சொன்னால் மிகையாகாது. மழை பெய்யவும் கடல்தான் ஆதாரமாக உள்ளது. எனவே கடலை மாசுபடுத்தாமல் காக்க வேண்டியது அரசோ. தனியார் நிறுவனங்களோ மட்டுமல்ல. ஒவ்வொரு உலகக் குடிமகனும் இதை உணர்ந்து அன்றாட நடவடிக்கைகளில் நெகிழி உபயோகத்தைக் குறைத்தும். ஒருமுறை பயன்படுத்தித் தூக்கிவீசும் பொருட்களைத் தவிர்த்து நீண்டகாலம் உபயோகிக்கும் பொருட்களைப் பயன்படுத்தி. நிலத்தையும். நீரையும். கடலையும் மாசுபடுத்தாமல் இருக்கவேண்டியது இன்றைய கட்டாய கடமை.

---

02ஆம் பக்க தொடர்ச்சி...

அது உண்மையல்ல என்பதனை ஊடகவியலாளர்கள் நீங்கள் தொடர்ந்தும் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும் இது தான் விடயம் எங்களது தலைவர் இந்த வேலையைத் தான் செய்தவர் அவர் கொண்ட கொள்கைக்கு அவர் எதை சொன்னாரோ நான் ஒன்று 'தமிழ் மக்களுக்கான விடுதலையை பெற்றுக்கொடுப்பேன் அல்லது அந்த மக்களுக்காக எனது உயிரை விடுவேன்' என்று ஆரம்பித்த காலத்தில் சொன்னாரோ அவர் இறுதிவரை அதை செய்து முடித்தவர். அந்த கௌரவத்தை குறைத்துவிடும் நடவடிக்கையை செய்யவிடாது காக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் ஊடகவியலாளர்களுக்கு இருக்கின்றது என்பதை நான் இந்த இடத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். நாங்கள் மற்றவர்களை குறை கூறுவதை விட எங்களுக்குள் உள்ள குறையைத் தான் நாங்கள் சொல்ல வேண்டும். புலம்பெயர்ந்திருக்கும் ஒருசிலர் அவர்களில் யார் இதற்கு முக்கிய காரணமாக இருப்பார்கள் என்பதனை கண்டறிந்து நெருங்கிவிட்டோம். அதில் குறிப்பாக ஒருவரை நான் தற்பொழுது கூறியுள்ளேன் சுவிஸ் நாட்டில் இருக்கும் அப்துல்லா என்னும் ஒரு நபர் அவர்கள் சொல்லும் விடயங்களை செய்துகொண்டு சுவிஸ் இருக்கின்றார்.

அதே போன்று ஏனைய நாடுகளிலும் யார் யார் இருக்கின்றார்கள். குறிப்பாக தமிழ் நாட்டில் அதிலும் குறிப்பாக எங்களது போராட்ட அமைப்பில் இருந்த ஒருவர் தமிழகத்தில் இருந்து கொண்டு தான் இந்த வேலைகளை மிக முக்கியமாக செய்கின்றார் அவர் எங்களது இயக்கத்தில் ஒரு ஆசிரியராக இருந்தவர். அதாவது புதிதாக வருகின்ற போராளிகளுக்கு கற்பிக்கும் ஒரு ஆசிரியராக இருந்தவர் அவர் எப்படி விளங்கப்படுத்த முடியுமோ அதை செய்யக்கூடியவர் அந்த நபர் தற்பொழுது தமிழகத்தில் தான் இருக்கின்றார். அவர் தான் பழ. நெடுமாறன் ஐயாவை தற்பொழுது கதைக்க வைத்து அதிலும் தலைவர் ஐயா நெடுமாறனுடன் பேசியதாகவே அவர் கூறியிருக்கின்றார் அந்த விடயம் கூட ஏற்பாடு செய்த நபரால் தான் சொல்லப்பட்ட விடயம் என்பதனை நான் இந்த இடத்தில் கூறிக்கொள்கின்றேன். இதுவொரு ஆபத்தான விடயம் தலைவரது கௌரவத்தை குழிதோண்டி புதைக்கின்ற வேலையை அவர்கள் செய்யத்தொடங்கியிருக்கின்றார்கள். அது உண்மையில்லை என்பதை நாங்கள் தொடர்ந்தும் சொல்லிக்கொண்டே இருப்போம்.

தலைவர் இருக்கின்றார் இருக்கின்றார் என்று சொல்லும் பொழுதிலோ அல்லது விடுதலைப்புலிகளின் நோக்கம் தலைவர் வருவது மட்டும் தான் என்று இருக்கின்றதே தவிர அவர்களது இலக்கை நோக்கிப்போவதற்கில்லை. இவர்களது அறிவிப்பானது இவ்வாறு தொடர்ந்து செல்வது அடுத்த கட்டத்தை தொடந்து நகர்ந்து செல்லமுடியாத நிலையை தோற்றுவிப்பதாக இருக்கும். அதற்கு காரணம் இந்திய புலனாய்வாளர்களுடன் சேர்ந்து இயங்கியவர்கள் இந்த நபரோடு இருப்பதாக அறிகின்றோம். அவர்களுக்கு அந்த நோக்கமும் இருக்கும் எங்களை தொடர்ந்து உலக ஒழுங்குக்கு ஏற்ப எங்களது போராட்ட வடிவங்கள் மாறலாம் ஆனால் போராட்டங்கள் மாறாது. போராட்ட வடிவங்களை மாற்றிக்கொண்டு உலக ஒழுங்குக்கேற்ப எங்களது மக்களையும் எங்களையும் தயார்ப்படுத்திக்கொண்டு நாங்கள் நகர்ந்துகொண்டுபோகின்ற நேரம் அதை குழப்பும் வேலையை இவர்கள் திட்டமிட்டு செய்கின்றார்கள் என்பது இதிலும் இருக்கின்றது. அது நெடுமாறன் ஐயாவிற்கு தெரியாமல் இருக்கும் அவர் மீது அபாண்டமான குற்றச்சாட்டை நாங்கள் சுமத்தமாட்டோம். அவரிடம் இருக்கின்ற தலைவர் மீதான பேரன்பை தவறாக பயன்படுத்துகின்றவர்கள் பயன்படுத்துகின்றார்கள். அதை இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் வயது வந்த பின்னர் அவருக்கு இருக்கும் நன்மதிப்பை பாதுகாத்துக்கொள்வதற்கு இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தியாவினது கைப்பொம்மையாக காசியானந்தனை பார்க்கின்றார்கள். பழ. நெடுமாறன் ஐயா அவர்களும் அவ்வாறு இருப்பார்களோ என்று பலரும் எண்ணுகின்றார்கள். அதாவது இவர் செய்யும் வேலையின் பின் ஏதேனும் சதி திட்டம் இருக்கும் என்கின்றார்கள். அந்த வகையில் அனைவரும் 100 வீதம் சரியாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது தான் குறிப்பாக தலைவரோடு நெருங்கி இருந்தவர்கள் தலைவருக்கு செய்த துரோகங்கள் காலங்காலமாகவே அறிந்து இருக்கின்றோம்.

அதனடிப்படையில் அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் தொடர்ந்தும் இருப்பார்கள் என்றில்லை. அவர்களது மனங்கள் மாறலாம். அவர்கள் இருக்கும் சூழல் அதற்குள் தள்ளிவிடும் காசியானந்தன் ஐயா அவர்கள் தொடர்ந்தும் இந்தியாவிலே வாழ்ந்துகொண்டிருக்கின்றார். அப்படி வாழ்ந்துகொண்டிருக்கின்றவருக்கு அச்சுறுத்தலும் இருக்கலாம் அல்லது அவர் பயன்படலாம் அது அவருக்கு தெரிந்தும் பயன்படலாம் இதை நாங்கள் வெளியில் இருந்து கொண்டு கூறமுடியாது. அதை அவர்களாகவே உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால் ஒரு விடயத்தை மட்டும் நாங்கள் ஞாபகப்படுத்தலாம் என்னவென்றால் தலைவரை நீங்கள் கொச்சைப்படுத்தாதீர்கள் என்பதனை தான் அவர்களிடம் சொல்ல விரும்புகின்றேன். **எந்த இடத்திலும் தலைவர் மக்களையும் போராளிகளையும் விட்டு ஒதுங்கி ஓடமாட்டார். அவர் கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்த ஒரு தலைவர் அந்த கொள்கையுடனேயே வாழ்ந்தவர். எனவே அவரது கொள்கையில் இருந்து அவரது நிலைப்பாட்டை குறைத்து சிரமப்படுத்தும் வேலையை ஒவ்வொரு தமிழர்களும் செய்துவிடக்கூடாது.**

# பாதாள உலக முக்கிய புள்ளியின் சகா பயன்படுத்திய அதி சொகுசு கார் பொத்துவில் பகுதியில் மீட்பு

பாதாள உலக முக்கிய புள்ளி "கிம்புலா எல குணா"வின் சகா பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்பட்ட அதிசொகுசுகார் உட்பட சக்திவாய்ந்த வாயுதுப்பாக்கி என்பன கல்முனை தலைமையக பொலிஸார் மீட்டுள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு தலைமறைவாகி இருந்த சந்தேக நபர் பின்னர் இந்தியாவிற்கு தப்பி செல்லும் வேளை விமான நிலையத்தில் வைத்து கைதானார். அச்சந்தேக வழங்கிய தகவல் ஒன்றிற்கமைய பொத்துவில் பகுதியில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் கல்முனை பிராந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எல்.எம். ரவூப் உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்ட தேடுதலில் இன்று குறித்த பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இதன் போது கைதான சந்தேக நபரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரது 3 ஆவது மனைவி என கூறப்படும் பெண்ணின் வீட்டில் இருந்தே மறைத்து வைக்கப்பட்டிருந்த பாதாள உலக முக்கிய புள்ளி "கிம்புலா எல குணா"வின் சகா பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்பட்ட அதி சொகுசு கார் உட்பட சக்தி வாய்ந்த வாயு துப்பாக்கி என்பனவற்றை பொலிஸ் மோப்பநாய் உதவியுடன் கல்முனை தலைமையக பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இச்சுற்றிவளைப்பிற்கு விசேட அதிரடிப்படையின் உதவியும் பெறப்பட்டதுடன் கைப்பற்றப்பட்ட பாதாள உலக முக்கிய புள்ளி "கிம்புலா எல குணா"வின் சகா பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்பட்ட அதி சொகுசு கார் உள்ளிட்ட பொருட்கள் தொடர்பில் கல்முனை தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் மீட்கப்பட்ட கார் பாதாள உலக முக்கிய புள்ளி "கிம்புலா எல குணா"வின் சகாக்கள் பயணித்த நிலையில் வேறு ஒரு குழுவினரால் துப்பாக்கி சூடு மேற்கொள்ளப்பட்டு தப்பி சென்று பொத்துவில் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் அத்துடன் வெளிமாவட்டத்தில் ஏதாவது குற்றச்செயலுக்கு பாவிக்கப்பட்டு குறித்த கார் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை ஆடம்பர வாகனங்கள் ஊடாக ஹெரோயின் போதைப்பொருளை கடத்தி வந்த குழுவினர் என சந்தேகிக்கப்பட்ட நபர்கள் மூவரும் வெள்ளிக்கிழமை (23) அன்று கல்முனை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இச்சந்தேக நபர்களில் ஏற்கனவே சம்பவ தினமன்று 2 பேரும் மற்றுமொருவர் விமான நிலையத்தில் வைத்தும் கைது செய்யப்பட்டிருந்தனர். மற்றுமொரு சந்தேக நபர் தொடர்ந்தும் தலைமைமறைவாகவே இருந்து வருகின்றார். அச்சந்தேக நபரை தொடர்ச்சியாக பொலிஸார் தேடி வருகின்றார்கள். இச்சந்தேக நபர் தனியார் காப்புறுதி அலுவலகம் ஒன்றில் பணியாற்றுவதாக கூறி வாகனங்களை வாடகைக்கு விட்டு வந்துள்ளதுடன் இவ்வாறான போதைப்பொருள் வலையமைப்புடன் தொடர்பில் இருந்துள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக வழிநடத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் ஆலோசனையின் அடிப்படையில் நீதிமன்ற அனுமதியுடன் கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் தலைமையில் கல்முனை பிராந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எல்.எம். ரவூப் உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மீட்கப்பட்டுள்ள காரின் பெறுமதி சுமார் 1 அரைக்கோடி ரூபா பெறுமதி மதிக்கத்தக்கதாகவும் கார் தற்போது கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டு விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். அந்த கார் சம காலத்தில் பல நபர்களின் பெயரில் பதியப்பட்டுள்ள விடயம் விசாரணையில் தெரிய வந்தது. மேலும் குறித்த கார் வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளதா என்றும் குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாக இருக்கலாமென பொலிசார் சந்தேகிக்கின்றனர். இதே வேளை அடையாளம் காணப்பட்ட காரின் உரிமையாளரை கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகுமாறு பொலிசார் அறிவித்துள்ளனர்.

இதேவேளை காரின் கதவுகளை திறந்து பொலிசார் சோதனையிட்டதில் சில சான்று பொருட்களை கைப்பற்றியுள்ளனர். எனினும் கார் இன்னும் முழுமையாக சோதனையிடப்பட்டு முடியவில்லை. இது தொடர்பில் கல்முனை பிராந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எல்.எம். ரவூப் தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட்களான எம்.எம்.எம். அன்வர் (63037) பொலிஸ் கன்ஸ்டபிள்களான வை.நவராஜ் (8475) எம்.இஷாக்(76433) ராஜபக்ஸ ( 86765) எஸ்.தர்சீகன்(99058) ஆர்.ஹேமானந்த(99059) ஆகியோர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

**சம்பவத்தின் பின்னணி**

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று இராணுவ புலனாய்வு துறையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றினை அடுத்து திருக்கோவில் விசேட அதிரடிப்படையினர் இந்நடவடிக்கையினை மேற்கொண்டு இரு வாகனங்கள் ஒரு சந்தேக நபர் 50 கிராம் 139 மில்லி கிராம் ஹெரோயினுடன் 36 வயது சந்தேக நபரையும் கடந்த வருடம் டிசம்பர் வியாழக்கிழமை(22) நள்ளிரவு கைது செய்து கல்முனை தலைமையக பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக ஒப்படைத்திருந்தனர். இவ்வாறு கல்முனை பொலிஸ ாரிடம் ஒப்படைக்கப்பட்ட வாகனங்களில் ஒரு வேன் மற்றும் கார் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் பின்னர் கல்முனை தலைமையக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் பின்னர் மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்ட நிலையில் இரண்டு சந்தேக நபர்கள் தலைமறைவாகி இருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.





# மகளிர் பக்கம்

## முகத்தில் உள்ள இறந்த செல்கள் நீங்கி சருமம் பொலிவு பெற வேண்டுமா?

நமது சருமத்தின் வகை அறிந்து அதற்கு ஏற்றவாறு மாதம் ஒருமுறையேனும் இறந்த செல்களை நீக்க வேண்டும்.

பொதுவாக வாரம் ஒருமுறை இறந்த செல்களை நீக்குவது சருமத்திற்கும் முகப்பொலிவிற்கும் மிக நன்மை தரும்.

இதற்கு அதிக பணத்தை செலவழிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. வீட்டில் இருக்கும் பொருட்களை கொண்டு கூட எளிய முறையில் நீக்க முடியும்.

அந்தவகையில் தற்போது அவை என்ன என்பதை பார்ப்போம்.

உருளைக்கிழங்கை ஒரு பேஸ்ட் போல செய்து உறங்குவதற்கு முன்பு முகத்தில் தடவி. 30 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் கழுவவும். இது ஆரோக்கியமான தோலை தருகிறது.

காய்ச்சாத பாலை முகத்தில் தடவி வர அதாவது மசாஜ் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் சுருக்கங்கள் மறையும்.

ரோஸ் வாட்டர் ஒரு தேக்கரண்டி. தேன் ஒரு தேக்கரண்டி கஸ்தூரி மஞ்சள் தூள் ஒரு தேக்கரண்டி மூன்றையும் கலந்து முகத்தில் தடவி 15 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் கழுவவும்.

முட்டையின் வெள்ளைக்கருவுடன் ஒரு முழு தேக்கரண்டி பாதாம் ஆயிலை நன்கு கலக்க வேண்டும். இந்த கலவையை முகச்சுருக்கம் உள்ள இடத்தில் தடவி 30 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் கழுவ. முகத்தில் உள்ள இறந்த செல்கள் நீங்கி. சருமத்திற்கு தேவையான புரோட்டீன்கள் கிடைக்கும்.

தினமும் குளிப்பதற்கு 20 நிமிடங்கள் முன்பு பாதாம் ஆயிலை முகத்தில் தடவி குளித்து வர நாளடைவில் முகம் பொலிவு பெறும்.

## இதயம் சம்பந்தமான பிரச்சனைகளுக்கு நல்ல நிவாரணம் தரும் மாதுளம்பழம் !!

மாதுளம் பழம் பிராணவாயுவை கிரகிப்பை ரத்தத்தில் அதிகபடுத்துவதால் உடல் பலம் இல்லாதவர்கள். நோயாளிகள் மற்றும் சுறுசுறுப்புத்தன்மை இல்லாதவர்கள் இப்பழத்தை அதிகம் உண்டு வருவது சிறந்த பலன் அளிக்கும்.

புற்று நோய் மாதுளம் பழத்தை ஜூஸ் பிழிந்து அதனுடன் கற்கண்டுகளை சேர்த்து தினந்தோறும் காலையில் அருந்தும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இனப்பெருக்க உறுப்புகளில் புற்று நோய் ஏற்படாமல் தடுக்கும். வேறு சில வகையான புற்று நோய்களை தடுக்க கூடிய சக்தியும் மாதுளம் பழத்திற்கு உண்டு.

மாதுளம் பழம் அல்லது சர்க்கரை அதிகம் கலக்காத மாதுளம் ஜூஸை தினமும் அருந்தி வந்தால் உடலில் நரம்புகள் பலம் பெற்று தாம்பத்திய சுகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். ரத்தம் உடலில் ரத்தம் என்பது அனைத்து உடலுறுப்புகளும் தொடர்ந்து ஈடுபடுவதற்கு அவசியமானதாகும். உண்ணும் உணவு. அருந்தும் நீர். சுவாசிக்கும் காற்று ஆகியவற்றாலும் ரத்தத்தில் நச்சுகள் சேருகின்றது.

மாதுளம் பழம் அல்லது மாதுளம் ஜூஸ் அருந்துபவர்களுக்கு ரத்தத்தில் நச்சுகள் நீங்கும். ரத்தத்தில் சிகப்பணுக்களின் உற்பத்தியையும் மேம்படுத்தும். இதய நலம் மாதுளம் பழத்தில் கொழுப்பை கரைக்கும் சக்தி அதிகம் உண்டு.

இதயம் சம்பந்தமான பிரச்சனைகள் உள்ளவர்கள் தினந்தோறும் காலையில் மாதுளம் பழத்தை சாப்பிடுவது நல்லது. மாதுளம் பழம் இதயத்திற்கு செல்லும் ரத்த குழாயில் கொழுப்பு படிவதை தடுத்து இதய பாதிப்புகள் வராமல் தடுக்கிறது.

மாதுளம் பழத்தில் விட்டமின் ஈ. விட்ட மின் சி. விட்டமின் கே போன்றவை சத்துக்கள் அதிகம் உள்ளன. எனவே சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரும் தினமும் மாதுளம் பழம் சாப்பிட வேண்டும். மாதுளம் ஜூஸ் போட்டு சாப்பிட நினைப்பவர்கள் சர்க்கரையை சேர்க்காமல் பருகுவது நல்லது. மாதுளம் பழம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் கொண்ட ஒரு பழமாகும்.





பிறருடைய மனதை கவர்வது அழககோ அறிவோ அல்ல நாம் பழகும் விதமும் பிறரை நாம் மதிக்கும் விதத்தில் தான் அமையும்



## முகத்தில் தோன்றும் சுருக்கங்களை போக்க உதவும் தக்காளி விழுது

தக்காளியை தோல் மற்றும் விதைகள் நீக்கி கூழாக்குங்கள். ஒரு தேக்கரண்டி ஆலிவ் எண்ணெய்யை முகத்தில் தடவுங்கள். அதன் மேல் இந்த கூழைத் தடவி பத்து நிமிடம் கழித்து கழுவுங்கள்.


ஒரு சிலருக்கு முகத்தில் எப்போதும் எண்ணெய் வடிந்தபடி இருக்கும் மேக்கப் போட்டாலும் தங்காது. இவர்கள் தக்காளி பழத்தை நன்கு அரைத்து. அந்த விழுதை முகத்தில் போட்டு அரை மணிநேரம் கழித்து கழுவினால் முகம் பளபளப்பாகும்.

தக்காளி விழுது. பாதாம் விழுது தலா அரை தேக்கரண்டி எடுத்து கலந்து முகத்தில் தடவுங்கள். இதை செய்வதால் முகத்தில் தோன்றும் சுருக்கங்கள் மறையும்.

உருளைக்கிழங்கு துருவல் சாறு ஒரு தேக்கரண்டி. தக்காளி விழுது அரை தேக்கரண்டி இரண்டையும் கலந்து முகத்தில் தேய்த்து வந்தால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறைந்து முகம் மின்னும்.

தக்காளி விழுதுடன் சிறிது தயிர் கலந்து முகத்தில் தொடர்ந்து பூசி வந்தால் சருமம் மிருதுவாவதை காணலாம்.

தக்காளி சாறுடன் சிறிது ரவையைக் கலந்து முகத்தில் தேய்த்துக் கழுவினால் முகம் பிரகாசிக்கும். இதுதான் இயற்கை ஸ்கரப்பாக உபயோகிக்கலாம்.



## மனஅழுத்தம் ஆபத்து! கர்ப்ப காலத்தில் தவிர்ப்பது எப்படி?

மன ஆரோக்கியத்தை பராமரிக்க உடற்பயிற்சி இன்றியமையாததாக கருதப்படுகிறது. மேலும் அது மன அழுத்தத்தை குறைக்கும். ஒவ்வொரு பெண்ணுக்கும் கர்ப்பகாலம் என்பது மிக முக்கியமான கட்டம். மிகவும் சந்தோஷமான தருணமும் கூட. இருப்பினும் குழந்தையை பெற்றெடுப்பதற்கு முன் அந்த 9 மாத கர்ப்பகாலத்தில் கர்ப்பிணிகள் பல விதமான மனமாற்றங்களுக்கு ஆளாவார்கள். மூட் ஸ்விங் என்று சொல்லக்கூடிய மனநிலை மாற்றத்தால் சிலர் அடிக்கடி கோபப்படுதல். மன அழுத்தத்தை அனுபவிப்பது. சோகமாக உணர்வது போன்ற பல உணர்வுகளை கொண்டிருப்பர். இதற்கு காரணம் கர்ப்ப காலத்தில் ஏற்படும் ஹார்மோன் மாற்றங்கள். உங்கள் மூளையில் உள்ள ரசாயனங்களை பாதிக்கலாம். இது மன அழுத்தத்தையும் பதட்டத்தையும் ஏற்படுத்தும் என்கின்றனர் மருத்துவர்கள். ஆனால். கர்ப்ப காலம் என்பது ஒவ்வொரு பெண்ணுக்கும் மகிழ்ச்சியின் நேரமாக இருக்க வேண்டும். அந்த சமயத்தில் நீங்கள் மன அழுத்தம் மற்றும் பதட்டத்தால் பாதிக்கப்படுகிறீர்கள் என்றால். அது உங்களில் சில சிக்கல்களை ஏற்படுத்தலாம். கர்ப்ப காலத்தில் ஏற்படும் மன அழுத்தம் மற்றும் அதனை சமாளிக்கும் சில வழிகள்.

**மனம்விட்டு பேசுங்கள்:**-நீங்கள் உங்கள் கர்ப்பகாலத்தில் மிகவும் கவலையாக உணர்ந்தால். அதை பற்றி உங்கள் கணவர். நெருங்கிய நண்பர். உங்கள் பெற்றோர் அல்லது நீங்கள் மிகவும் நம்பும் குடும்ப உறுப்பினர் என யாராக இருந்தாலும் சரி. யாராவது ஒருவரிடம் அதை பற்றி சொல்ல வேண்டும். ஏனெனில் அவர்கள் உங்களுக்கு ஆதரவை வழங்கலாம். உங்கள் அன்றாட வாழ்க்கையில் மன அழுத்தத்திலிருந்து விடுபட உங்கள் எண்ணங்களையும் உணர்வுகளையும் பற்றி பகிர்ந்து கொண்டால் உங்களுக்கு ஒரு நிம்மதி கிடைக்கலாம். ஒருவேளை உங்களுக்கு மனஅழுத்தத்தை சமாளிப்பது கடினமாக இருந்தால். பதட்டத்தை சமாளிக்க பயிற்சி பெற்ற ஒரு சிகிச்சையாளரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளலாம்.

**ஆழ்ந்த சுவாசப் பயிற்சிகள்:**-கர்ப்ப காலத்தில் ஆழ்ந்த சுவாச பயிற்சி என்பது மனஅழுத்தத்தை சமாளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இது உடலில் இருந்து கழிவுப் பொருட்களை திறம்பட அகற்றுவதையும். தாய் மற்றும் குழந்தை இருவருக்கும் போதுமான அளவு ஆக்ஸிஜனை வழங்குவதையும் உறுதி செய்கிறது. சுவாச நரம்பு மண்டலத்தை சுத்தப்படுத்துவதோடு அமைதிப்படுத்துகிறது. இனிமையான நல்வாழ்வின் உணர்வைத் தூண்டுகிறது. நீங்கள் தரையில் நிதானமாக படுக்கும்போது உங்கள் வயிற்றில் கையை வைத்து ஆழமாக சுவாசிக்க பயிற்சி செய்யுங்கள். நீங்கள் மூச்சை உள்ளிழுக்கும்போது கையை மேலும் கீழும் நகர்த்துவதில் கவனம் செலுத்துங்கள். இந்த சுவாசம் கர்ப்பத்திற்கு சிறந்தது. ஏனெனில் இது மூன்றில் ஒரு பங்கு ஆக்ஸிஜனை உள்ளிழுக்க உதவும்.

**உடற்பயிற்சி:**-உங்கள் மன அழுத்தத்தையும் பதட்டத்தையும் குறைக்க பல்வேறு உடல் செயல்பாடுகளில் ஈடுபடுவது மிக நல்லது. மன ஆரோக்கியத்தை பராமரிக்க உடற்பயிற்சி இன்றியமையாததாக கருதப்படுகிறது. மேலும் அது மன அழுத்தத்தை குறைக்கும். சோர்வைக் குறைப்பதிலும். விழிப்புணர்வு மற்றும் செறிவை மேம்படுத்துவதிலும். ஒட்டுமொத்த அறிவாற்றல் செயல்பாட்டை மேம்படுத்துவதிலும் இது மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. மன அழுத்தம் உங்கள் ஆற்றல் அல்லது கவனம் செலுத்தும் திறனைக் குறைக்கும் போது உடற்பயிற்சி மிக உதவியாக இருக்கும். மூளையும் அதன் பல நரம்பு இணைப்புகளும் மன அழுத்தத்தால் பாதிக்கப்படும்போது. உடலின் மற்ற பகுதிகளும் அதன் தாக்கத்தை உணர்கின்றன. எனவே. உடற்பயிற்சிகளால் உங்கள் உடல் நன்றாக இருந்தால். உங்கள் மனமும் நன்றாக இருக்கும்.

**மன அழுத்தத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் பின்வருமாறு:**


நடைபயிற்சி செய்வதன் மூலம் நீங்கள் நிதானமாகவும் புத்துணர்ச்சியாகவும் இருக்க முடியும். நடைபயிற்சி உங்கள் தசைகள் மற்றும் மூட்டுகளை அதிகம் பாதிக்காமல் உங்கள் இருதய அமைப்பு மிகவும் திறமையாக செயல்பட உதவும். கர்ப்ப காலத்தில் நடைபயிற்சி பாதுகாப்பான மற்றும் எளிதான செயலாக கருதப்படுகிறது.

கர்ப்ப காலத்தில் நடைபயிற்சி செய்வதால் பல நன்மைகள் கிடைக்கின்றன. அவை. கர்ப்ப காலம் முழுவதும் ஆரோக்கியமான எடை அதிகரிப்பை பராமரிக்க உதவுகிறது. உங்கள் தசைகளை வலுவாக வைத்திருக்க உதவுகிறது. மலச்சிக்கலை எதிர்த்து உங்கள் குடல் இயக்கத்தை செயல்பட வைக்க உதவுகிறது. ஒட்டுமொத்த இருதய ஆரோக்கியத்திற்காக உங்கள் இதயம். நுரையீரல் மற்றும் இரத்த நாளங்களை பம்ப் செய்கிறது. தவறாமல் முறையாக யோகா பயின்று அதை பின்பற்றுங்கள்.



பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்

# காவி உடை அணிந்த பௌத்த பயங்கரவாதிகள் தங்களை தாங்களே அழித்துக்கொள்ளப்போகின்றார்கள்



கடந்தவார தொடர்ச்சி...

கூடுதலாக நான் ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து சுமந்திரன் அல்லது சம்பந்தன் அல்லது மனோகணேசன் செயற்படுகின்றார் என பத்திரிகையில் கூட வருகின்றது. ரணில் விக்ரமசிங்கவின் கொள்கையை நான் தீர்மானிக்கமுடியாது. ரணில் விக்ரமசிங்கவுடன் நான் மட்டும் இணைந்து செயற்படவில்லை அனைவரும் தான் செயற்படுகின்றார்கள். தற்பொழுது ரணில் விக்ரமசிங்க இல்லையே அவர் ஜனாதிபதியாக இருக்கின்றார் நாங்கள் எதிரணியில் இருக்கின்றோம். எனக்கு ரணில் விக்ரமசிங்கவும் ஒன்று தான். சஜித் பிரேமதாஸ வும் ஒன்று தான். மகிந்த ராஜபக்சவும் ஒன்று தான் அனைவரையும் நான் ஒரு தராதரத்தில் கணித்து வைத்திருக்கின்றேன். ஆனால் யாரும் யாரோடும் முட்டிமோதி முரண்பாடு ஏற்படுத்திக்கொள்வதில்லை முரண்பாடுகளை ஏற்படுத்தப்பட வேண்டிய இடத்திலே எனது கொள்கையிலே உறுதியாக கூறியிருக்கின்றேன்.

அதே நேரத்திலே நட்பை பாராட்டிக்கொண்டு தான் இருக்கின்றேன். எனது அரசியலை சரியான முறையில் ஆய்வு செய்து பார்த்தால் உங்களுக்கு தெரியும் நீண்ட கால வரலாறு இருக்கின்றது. நேற்று பிறந்து இன்று காலையில் அரசியல்வாதியாகியவன் அல்ல நான் 20 வருடங்களாக நேரடியாக பாராளுமன்றத்தில் இருக்கின்றேன் அதற்கு முன்னரும் பாராளுமன்றில் இருந்திருக்கின்றேன். ஆகவே தெளிவாக இருக்கின்றேன் அதில் பிரச்சனையில்லை. தமிழ். முஸ்லிம் அரசியல்வாதிகள் கூட யார் எவர் என்று எனக்குத் தெரியும் அடையாளம் கண்டு தான் வைத்திருக்கின்றேன் அதில் பிரச்சனையில்லை. எல்லா இனத்தின் கட்சியை சேர்ந்த அரசியல்வாதிகளுடன் சேர்ந்து பழகுவது பேசுவது உறவாடுவது என்பது தவறான காரியமல்ல. பல மொழி பல இன மக்களை கொண்டது தான் இந்த நாடு எனவே செயற்பட்டுத்தான் ஆக வேண்டும் அது ஜனநாயகத்தின் அடையாளம் ஆனால் எனது வீட்டு ஜன்னலை நான் திறந்து வைத்துள்ளேன் காற்று வருகின்றது வரவேண்டும் அப்பொழுது தான் ஜனநாயகம் வளரும் ஆனால் வந்த எந்த காற்றும் என்னைத் தூக்கிக்கொண்டு போகமுடியாது. சூறாவளியாக மாறி என்னை சுழட்டியடிக்க முடியாத அளவிற்கு எனது கால்கள் எனது தளத்திலே தெளிவாக கொஞ்சம் இருக்கின்றன. கலபடஞானசார தேரரைக்கூட நான் எதிர்த்து பேசியிருக்கின்றேன். முஸ்லிம் தலைவர்களைக்கூட எதிர்த்து பேசியிருக்கின்றேன் அந்த அடிப்படையிலே பார்க்கின்ற பொழுது பௌத்த பேரினவாதம் இன்று தலைதூக்கி 13 ஐ எதிர்க்கின்றது அல்லது பௌத்த பேரினவாதிகள் நினைத்தது தான் இந்த நாட்டில் நடக்கின்றது என்றால் அது மிகவும் கொடுமையானது. பௌத்த பேரினவாதம் தமிழ் மக்களை மாத்திரம் அழிக்க. முஸ்லிம் மக்களை மாத்திரம் அழிக்க. பௌத்தர்களாகிய ஏனைய மக்களை மாத்திரம் அழிக்க முயலவில்லை தங்களைத் தாங்களே அழித்துக்கொள்ள முயலுகின்றது.

உண்மையில் இன்றைய நாட்டின் அரசியல். பொருளாதார. சமூக. கலாசார அனைத்து சீர்கேட்டிற்கும் காரணம் இந்த முட்டாள்தன பௌத்த தேரர்களினது செயற்பாடு தான். இவர்களுக்கு அரசியலும் தெரியாது. பௌத்தமும் தெரியாது படு முட்டாள்கள் பௌத்த காவி உடையை அணிந்த பயங்கரவாதிகள் இவர்கள். உண்மையில் இவர்களது தொழிற்பாடு கடமை விகாரைக்குள் இருக்க வேண்டும். நான் தெளிவாக பாராளுமன்றத்திலே பேசினேன். பௌத்த பிக்குகளை எல்லாம் விகாரைகளுக்கு அனுப்புங்கள். இந்து குருமார்களை எல்லாம் நாம் கோவில்களிற்கு அனுப்புகின்றோம். இமான்களை எல்லாம் முஸ்லிம் பள்ளிவாசல்களிற்கு அனுப்புங்கள் அதைப் போல மத பிதாக்களை எல்லாம் கிறிஸ்தவ கத்தோலிக்க தேவாலயங்களிற்கு அனுப்புங்கள். இவை எல்லாம் அந்தந்த மத ஸ்தலங்களிற்கு செல்ல வேண்டிய கடப்பாடு எமது தலைவர்களுக்கு இருக்கின்றது. அரசியலில் அல்ல. அரசியலில் அரசியல்வாதிகள் பார்த்துக்கொள்வார்கள். பிழையான அரசியல்வாதிகளாக இருப்பார்களானால் அவர்களை மாற்றிவிடக்கூடி கடப்பாடு மக்களுக்கு இருக்கின்றது அவ்வளவும் தான் மக்கள் மாற்றி அனுப்புவார்கள். வீட்டிற்கு அவர்களை அனுப்பிவிட்டு சரியானவர்களை தெரிவு செய்வார்கள்.

ஆனால் மத தலைவர்களை பொறுத்தவரையிலே அரசு செய்ய வேண்டும் என்றால் மத அடையாளங்களை களைந்து விட்டு சாதாரணமானவர்களாக வரவேண்டும். எல்லா ஆர்ப்பாட்டங்களிலும் மதத் தலைவர்கள் தானே வருகின்றார்கள் அது பிழை அதில் என்ன தெரிகின்றது என்றால் சிங்கள ஸ்தாபனம் என்று சொல்லும் பொழுது அனைத்து சிங்கள அரசியல் கட்சிகள் மத ஸ்தாபனங்கள். சமூக ஸ்தாபனங்கள் போன்றன இன்னமும் இந்த சீரழிவில் இருந்தும் கூட பாடம் கற்கவில்லை இது தான் காரணம். அறகள என்னும் கிளர்ச்சியானது ஆரம்பிக்கப்பட்டபொழுது சில சந்தர்ப்பங்களில் தமிழர்கள் கூட அறகள கிளர்ச்சியாளர்களுக்கு கம்பு சுழட்டினார்கள். இதோ அறகள வந்து விட்டது. கிளர்ச்சி வந்துவிட்டது. சிஸ்டம் சேன்ஸ் வந்து விட்டது. அமைப்பு மாறிவிட்டது. இனி இந்த நாட்டில் இனவாதம் கிடையாது. சிங்கள தேசியவாதம் இல்லை. தமிழ் தேசியவாதம் இல்லை. முஸ்லிம் தேசியவாதம் இல்லை. இனவாதம் இல்லை. பேரினவாதம் இல்லை எல்லாம் ஓரே நாட்டு மக்கள் என்ற எண்ணப்பாடு வருகின்றது என்று கட்டியம் கூறினார்கள். எங்கே அவர்கள் என கேட்கவிரும்புகின்றேன். அறகள ஆங்காங்கே சேர்ந்த தமிழர்கள் சிலபேர் எங்களை பார்த்தும் இழிந்து பேசினார்கள் எங்களை குறை சொன்னார்கள்.

தமிழ் மக்களது உரிமைக்காக போராடக்கூடிய எங்களைப் பார்த்து சிலர் தமிழ் இனவாதிகள் என்று கூட சொன்னார்கள். அவர்களை நான் பார்த்தேன் ரசித்தேன் சிரித்தேன். இன்று அவர்கள் எங்கே? ஏதோ அறகள அந்த கிளர்ச்சி பூமியிலே காலி முகத்திடலிலே ஒரு முறை தமிழில் தேசிய கீதம் பாடிவிட்டார்களாம் அதனை நினைத்துக்கொண்டு பெரிய ஆர்ப்பாட்டம் செய்தார்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடத்தினார்கள் என்று. ஏன் நடத்தினார்கள் யார் நடத்தினார்கள் என்பது கூட அவர்கள் எல்லாருக்கும் தெரியாது. ஏதோ கஞ்சி வார்த்து கொடுத்துவிட்டால் அதை குடித்து விட்டு போனார்கள் அதை படம் பிடித்து விட்டு நம்மவர்கள் பெரிய ஆர்ப்பாட்டம் செய்தார்கள். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நாங்கள் காலி முகத்திடலில் நடத்திவிட்டோம். தமிழ் தேசிய கீதம் பாடிவிட்டோம் என்று. **தமிழ் தேசிய கீதம் 1948 இல் பாடப்பட்டு 2015 இல் தான் பாடப்பட்டது. அது பாடப்பட்டதற்கு காரணம் மனோகணேசன் என்னும் நான். நான் தேசிய பொறுப்பாளர் அமைச்சராக இருந்து அமைச்சரவையில் பேசி வாதம் செய்து முதன்முதலில் நாங்கள் வெற்றிபெற்ற பின்னர் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆந் திகதி காலி முகத்திடலில் பாட வைத்தது நான் அதையெல்லாம் மறந்துவிட்டார்கள்.** அதன் பின்னர் அனைவரும் சென்று 14 வரை பேசி தமிழர்களுக்கு தெரிவித்து பெரிய உரிமையாக காட்டினார்கள் அது பெரிய உரிமையல்ல. ஏற்கனவே அது செய்யப்பட வேண்டியது செய்யப்படவில்லை அவ்வளவும் தான். ஆனால் இதைக்கூட பெரிய விடயமாக காட்டினார்கள் ஒன்றுமே இல்லையே. நான் மலையக மக்களிற்காகவும் வடகிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்களிற்காகவும் பல போராட்டங்களில் கலந்து போராடியிருக்கின்றேன். எனது பணிகளை நான் செய்திருக்கின்றேன். இந்த கட்டத்தில் முஸ்லிம் தரப்புடனும். ரவூப் ஹக்கீம் அவர்களுடனும் நான் சில ரகசிய ஒப்பந்தங்களை செய்ததாகவும் ஊடகங்களில் செய்திகள் வருகின்றது. அவர்களின் செயற்பாடுகளான ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் பொழுது முஸ்லிம் தீவிரவாதிகள். சஹ்றான் போன்றோருடன் மென்போக்கு முஸ்லிம்கள் தொடர்பில் இருக்கின்றார்கள் என்னும் வார்த்தையை நான் வைத்திருந்தேன் என்றார்கள். அப்படியல்ல எனக்கு எவருடனும் தனிப்பட்ட இரகசிய உடன்பாடுகள் எதுவும் இல்லை. முஸ்லிம் தரப்புடனும் இல்லை. தமிழ் தரப்புடனும் இல்லை. சிங்கள தரப்புடனும் இல்லை அதற்கு அவசியமும் இல்லை. நான் இரகசிய அரசியல் செய்யவில்லை பகீரங்கமாகத் தான் செய்கின்றேன் எனக்கு ஒளிப்பதற்கு எதுவும் கிடையாது. ரவூப் ஹக்கீம் அவர்கள் எனது நண்பன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர். ரிஷாட் பதியூதின் எனது நண்பர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர். அவர்கள் ஜனநாயக அரசியல் செய்கின்ற காரணத்தினால் அவர்களுடன் ஜனநாக கட்சி என்ற முறையிலே தொடர்பாடலில் நாங்கள் அனுகியிருக்கின்றோம் அதைவிட நாங்கள் எல்லோரும் இணைந்து தான் தற்பொழுது ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள்ளே இருக்கின்றோம் சஜித் பிரேமதாஸவுடன் இருக்கின்றோம். எங்களது கட்சி தான் பெரிய கட்சி ஆறு எம்பிக்கள் தெரிவு செய்யப்பட்டது எனவே நாங்கள் செயற்படுகின்றோம் அவ்வளவும் தான் மற்றும்படி ஒன்றும் இல்லை. சஹறான் என்ற பயங்கரவாதியை முஸ்லிம் பெருந்தொகை மக்களுடன் சேர்ப்பது பிழையானது. முஸ்லிம் மக்கள் சஹறான் என்ற பயங்கரவாதத்தை புறம் தள்ளிவிட்டார்கள். அது முஸ்லிம் மக்களின் எழுச்சியல்ல முஸ்லிம் மக்கள் சிங்கள பேரினவாதத்திற்கு எதிராக எழுச்சி பெற வேண்டிய நியாயப்பாடுகள் நிறைய இருக்கின்றன இன்னமும் இருக்கின்றது.

சிங்கள பெரும் தேசியவாதம் தமிழர்களை மட்டுமல்ல முஸ்லிம்களையும் படுமோசமான முறையிலே ஒடுக்கியது ஒடுக்குகின்றது. அதற்கு எதிராக போராட வேண்டிய கடப்பாடு முஸ்லிம்களுக்கு இருக்கின்றது ஆங்காங்கே போராடிக்கொண்டு தான் இருக்கின்றார்கள் ஆனால் சஹறான் பயங்கரவாதம் என்பது முஸ்லிம் மக்களின் அடையாளம் அல்ல முஸ்லிம் மக்களின் எழுச்சியல்ல. அந்த அளவிற்கு பெரும் கொடுங்கோளனாக மாறி தேவாலயங்களை எல்லாம் குண்டு வைத்து தளர்த்து இப்படியான ஒரு செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டிய தேவைப்பாடு முஸ்லிம்களுக்கு கிடையாது அதுமட்டுமல்ல தேவாலய குண்டுவைப்பு கூட ஆய்வு செய்து பார்க்கின்ற பொழுது திட்டமிட்ட முறையிலே அரசியல் ரீதியாக மீண்டும் ஆட்சி கைப்பற்றுவதற்காக சில தென்னிலங்கை அரசியல்வாதிகள் செய்யும் காரியமானது தற்பொழுது புலப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அது முஸ்லிம்களின் எழுச்சியை வெளிப்படுத்தவில்லை தென்னிலங்கை சிங்கள அரசியல்வாதிகளின் அரசியல் செல்வாக்கினை பெறுவதற்காக பயன்படுத்தப்பட்ட நபராகத்தான் சஹறானை பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல அந்த குண்டுவைப்பை எங்கே கொண்டுபோய் வைத்தார்கள் பௌத்த விகாரைகளிலா? இந்து கோவில்களிலா? அல்லது இஸ்லாமிய பள்ளிவாசல்களிலா? இல்லையே கிறிஸ்தவ தேவாலயங்களிலே வைத்தார்கள். அதுவும் எனது தொகுதி கொழும்பு கொச்சிக்கடையிலே வைத்தார்கள். அப்பொழுது தமிழ் ஆராதனைகள் நடந்த வேளையிலே அதில் இறந்து போனவர்கள் தமிழர்கள். மட்டக்களப்பிலே குண்டு வைத்தார்கள் அங்கும் தமிழர்களே இறந்தார்கள். கொழும்பு வடக்கு நீர்கொழும்பு பகுதிகளிலே ஒரு தேவாலயத்திலே குண்டு வைத்தார்கள் அங்கும் பாதிக்கப்பட்ட பெரும்தொகை மக்கள் தமிழர்கள். தமிழ் கிறிஸ்தவர்கள் தான் தமிழர்களாக இருந்து சிங்களவர்களாக மாறியவர்களும் இருக்கின்றார்கள். எனவே அந்த குண்டு வெடிப்பிலே கொல்லப்பட்டவர்கள் பெரும்பான்மையானோர் தமிழர்களே அந்த உண்மை இறுதிவரை வெளிவரவே இல்லை. இது கோட்டபாய ராஜபக்சவினால் திட்டமிடப்பட்டு செய்யப்பட்டதான ஒரு கதை இருக்கின்றது. அதைப்பற்றி பேசுவதற்கு முன்னர் பலியான மக்களைப் பார்த்தால் கொழும்புக்கடை கொட்டாஞ்சேனையிலே. மட்டக்களப்பில். கொழும்பு வடக்கில் இருக்கின்ற மற்றுமொரு தேவாலயத்தில் இறந்து போனவர்களில் 75 வீதமானவோர் தமிழ் கிறிஸ்தவர்கள். உண்மையில் அவர்களுக்கு சிங்களவர்கள் மீது ஆத்திரம் இருக்குமானால். ஞானசார தேரர் போன்ற தேரர் மீது ஆத்திரம் இருக்குமானால் விகாரைகளில் தான் அவர்கள் குண்டு வைத்திருக்க வேண்டும். குண்டு வைக்க வேண்டும்என்றுசொல்லவில்லைவைக்கக்கூடாது. நான் வன்முறையை எதிர்ப்பவன் வன்முறை பிழை நான் பயங்கரவாதத்தை முற்றுமுழுதாக நிராகரிப்பவன் அரச பயங்கரவாதமும் சரி அரசு இல்லாத பயங்கரவாதமும் சரி எனக்கு உடன்பாடில்லை.

ஆனால் ஒரு மதத்தை எடுத்துக்கொண்டால் அப்படி எதுவுமே செய்யவில்லை அதுவும் எனது தொகுதியிலே கொச்சிக்கடை தேவாலயத்திலே தமிழ் ஆராதனை இருக்கின்றது. சிங்கள ஆராதணை இருக்கின்றது. அதில் தமிழ் ஆராதனை நேரத்தில் தான் குண்டு வைக்கின்றார்கள் எனவே சாகப்போவது தமிழர்கள் என்று தெரிந்து தானே செய்திருக்கின்றார்கள். அதில் இறந்துபோன பலர் அங்கவீனமான பலர் எனது ஆதரவாளர்கள். இன்னும் அந்த வடுக்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே இதுவும் ஒரு திட்டமிட்ட சதி சஹறான் பயங்கரவாதம் போன்று தான் இன்னும் சில இருக்கின்றன. பெரும்பான்மையுடன் ஜனாதிபதி ஆட்சிக்கு கோட்டபாய வருவதற்கு அல்லது மகிந்த குடும்பம் வருவதற்கு அதுவும் ஒரு காரணமாகத் தான் இருந்தது. தற்பொழுது அந்த விசாரணை விடியவில்லை நாங்கள் ஆட்சிக்கு வரும்பொழுது எந்த புதிய ஆட்சியும் புரட்சிகர ஆட்சி வரும் பொழுது அந்த புரட்சிகர அரசாங்கம் நிச்சயமாக குண்டு வெடிப்பின் பின்னான அரசியல் சதியை நிச்சயமாக வெளிச்சத்துக்கு கொண்டு வர வேண்டும் கொண்டுவரப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அப்பொழுதிருந்த நல்லாட்சி அரசாங்கம் தான் அதை செய்தது என்னும் குற்றச்சாட்டை என்மீது முன்வைத்தார்கள். ஆனால் நல்லாட்சி அரசாங்கம் செய்யவில்லை நல்லாட்சி அரசாங்கத்தின் தலைவராக இருந்த ஜனாதிபதி. பிரதமர் போன்றோர் அது சம்பந்தமாக அக்கறை காட்டவில்லை. முன்கூட்டி தகவல்கள் வந்தபொழுதும் கூட அதனை சரியாக பயன்படுத்தவில்லை பொலிஸ் கடமையை செய்ய தவறிவிட்டது இராணுவம் கடமையை செய்ய தவறிவிட்டது. நாட்டின் பொலிஸ் இராணுவத்தின் முப்படை தலைமை தளபதி என்னும் பதவி தான் மைத்திரிபால சிறிசேனவிற்கு இருக்கின்றது. எனவே அவர் அதை கவனத்தில் எடுக்க தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டைத் தவிர செய்தது எம் நாட்டு அரசாங்ககாரர்கள் அல்ல என்பது தெரியும். அதனால் தான் நல்லாட்சி அரசாங்கம் பறிபோனது. ஆனால் தமது கடமையில் இருந்து மைத்திரிபால சிறிசேன ரணில் விக்ரமசிங்க போன்றோர்கள் தவறினார்கள் என்பதற்கு நான் உடன்படுகின்றேன் அப்படித்தான் நடந்தது.

# தேசியத்தலைவர் பிரபாகரனை வைத்து எவரும் அரசியல் செய்ய வேண்டாம்



இன்றைய அரசியல் நிலைமை என்பது மிக மோசமாக சென்றுகொண்டிருக்கின்றது. உள்ளூராட்சிமன்ற தேர்தல் இடம்பெறவிருக்கும் இந்த நேரத்தில் பெரிய ஒரு குண்டு தற்பொழுது போடப்பட்டிருக்கின்றது அது என்னவென்றால் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்பதாகும். இவ் விடயமானது பெரியதொரு விடயமாக எடுக்கப்பட்டு சர்வதேச ரீதியில் பேசப்படுகின்ற ஒரு விடயமாகவே இருக்கின்றது. உண்மையில் இவ்வாறான ஒரு நிலைமை ஏன் இங்கு உருவாக்கப்பட்டிருக்கின்றது என்பது பற்றி சிந்திக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் உயிருடன் இருக்கின்றார் அவர் மிக விரைவில் வெளியில் வருவார் என்ற செய்தியை கேள்விப்பட்டவுடன் இலங்கை அரசு மட்டுமல்ல இந்திய அரசு உட்பட பல நாடுகளும் ஆடிப்போயுள்ள நிலைமையை தற்பொழுது காணக்கூடியதாக உள்ளது. உண்மையில் இலங்கை அரசு பிரபாகரனை கொலை செய்து விட்டது என்றால் எதற்காக அவர்களுடைய புலனாய்வு கட்டமைப்பு NIV, CID, TID என்னும் அரச மந்திரிகள். அரச தரப்புக்கள் அனைவரும் ஏன் குழம்பியடிக்க வேண்டும் என்ற கேள்வி தற்பொழுது எழுப்பப்படுகின்றது.

எனவே இவ்வாறு இந்திய அரசு கூறியிருக்கின்றது எனவே நாங்கள் பயங்கரவாத சட்டத்தை எதிர்க்க முடியாது மீண்டுமொரு விடுதலைப்புலிகளின் உருவாக்கமானது உருவாகினால் அதற்கு முன் எச்சரிக்கையாக நாங்கள் இவற்றையெல்லாம் செய்ய வேண்டும் என்று நிலைப்பாட்டையெல்லாம் இவர்கள் கொண்டிருக்கின்றார்கள். எனவே தான் பிரபாகரன் இறந்து விட்டார் என்பதை வைத்துக்கொண்டு முன்னாள் போராளிகளும் மாறி மாறி அவர்களது கருத்துக்களை கூறிக்கொண்டிருக்க இல்லை அவர் கூறுவது சரி இவர் கூறுவது சரி என்று கூறிக்கொண்டிருப்பதால் எந்தவித பயனும் இல்லை. ஏனென்றால் இந்த நாட்டினுடைய பொருளாதாரம் அதாளபாதாளத்திற்குள் இருக்கின்றது. இந்த பொருளாதாரத்தை நிமிர்த்த வேண்டுமாயின் இப்படி பிரபாகரன் இருக்கின்றார் மீண்டுமொரு போர் உருவாகும் எனவே நாங்கள் படைத்தரப்பை மீளவும் கட்டியெழுப்ப வேண்டும் இராணுவத்திற்கு அதிகூடிய பணத்தை கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைத் தான் அடுத்த கட்டம் இந்த அரசாங்கம் எடுக்கப்போகின்றது. எனவே கோட்டபாய ராஜபக்சவினுடைய அப்பொழுதிருந்த அரசு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை தாம் கொலை செய்துவிட்டதாக கூறுகின்றது. கொலை செய்தமைக்கு அரச தரப்பே வெவ்வேறு காரணங்களை குறிப்பிடுகின்றது. குறிப்பாக அவரை சுட்டு நாங்கள் கடலில் எறிந்துவிட்டோம். அரச தரப்பாக பிரபாகரனின் உடலை பார்க்கவந்த தயா மாஸ்டர் கருணா அம்மான் போன்றோர்கள் அவர் தன்னுடைய அறிவுக்கு எட்டிய வகையிலே டொக்காரா பிஸ்டலால் அவர் தன்னைத் தானே சுட்டு கொலை செய்யப்பட்டதாக கூறுப்படுகின்றது. இன்னொருபுறம் அவர் இராணுவத்தினுடைய கையில் அல்லது ICRC யிடம் சரணடைய வந்த பொழுது ICRC உடையை அணிந்து கொண்டு இலங்கை அரசினுடைய புலனாய்வாளர்கள் வந்து தான் அவரை கொன்று சென்றனர் என்கின்றனர். அதில் 108 தளபதிகளும் சென்றிருக்கின்றார்கள் என்றும் விடுதலைப்புலிகளிலே 8 பேர் சென்றிருக்கின்றார்கள் அதிலே தேசியத் தலைவர் பிரபாகரனும் ஒன்று என கூறப்படுகின்றது.

இவ்வாறெல்லாம் ஒவ்வொரு கதைகளும் வருகின்ற பொழுது ஒருவரும் தேசியத் தலைவர் பிரபாகரனின் உடலை முன்னாள் போராளிகள் மற்றும் பொதுமக்கள் எவரும் காணவில்லை என்னும் பொழுதும் அதுவொரு கேள்விக்குறியாகத்தான் இருக்கின்றது. அதுமட்டுமன்றி பிரபாகரனின் உடலை கொத்தி பிளவுபடுத்திக் காட்டுவதைப்போன்ற ஒரு உடலைக் காட்டினார்கள். அந்த உடலின் காணொலியை யூடிப்பில் இருந்தும் எடுத்துவிட்டார்கள் அது தற்பொழுது இல்லை. இவ்வாறிருக்க இந்தியாவில் இருக்கும் தமிழ் அரசியல் தலைமைகள் பிரபாகரனினுடைய இறப்பு உறுதிப்படுத்தப்படவில்லை என்பதை வைத்துக்கொண்டுஅவர்கள் தொடர்ந்தும்இந்த அரசியலை செய்து கொண்டிருக்கின்றார்கள். அண்ணன் சீமானை எடுத்துக்கொண்டாலும் அவர் அதைத்தான் கூறுகின்றார். வைக்கோவை எடுத்துக்கொண்டாலும் அதைத்தான் கூறுகின்றார். பழ. நெடுமாறன் அவர்களும் அதைத்தான் கூறுகின்றார் இப்படி ஒவ்வொருவரும் இன்று பிரபாகரனுடைய பெயரை வைத்து தான் தமது அரசியலை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை நேரடியாக காணக்கூடியதாக இருக்கின்றது.

எனவே இந்த நிலைமை எப்பொழுது மாற்றப்படும் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வு திட்டம் கணிந்து வருகின்ற காலகட்டத்தில் ஒரு குழப்ப சூழ்நிலையை உருவாக்கி அந்த குழப்பத்திலே தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டத்தை வழங்க கூடாது என்பதிலே இந்த அரசாங்கம் உறுதியாக செயற்படுகின்றது. தற்பொழுது இருக்கும் போராளிகள் தமக்கிடையே ஒரு குழப்பத்தை ஏற்படுத்துகின்றார்கள். இன்று தயாமோகன் அவர்கள் முன்னாள் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளராக இருந்தவர் ஒரு கருத்தை கூறியிருக்கின்றார். போலியாக பிரபாகரன் ஒருவரை உருவாக்கியிருக்கின்றார்கள் அதுபோன்று மதிவதணி மற்றும் துவாரகா போன்றோரையும் உருவாக்கி அவர்களைப் போன்றுபேச வைப்பதற்குதற்பொழுது டிஜிட்டல் தொழினுட்பத்தை பயன்படுத்தி எல்லாம் செய்ய இருக்கின்றார்கள். எனவே அவதானமாக இருங்கள் என கருத்து கூறியிருக்கின்றார். அவர் கூறிய கருத்திற்கு அம்பாறையில் இருந்து சசி என்ற போராளி இவர் யார். அங்கிருந்து என்ன செய்கின்றார். இவர் எப்படி தப்பிச் சென்றார் என்ற விடங்களை எல்லாம் கூறியிருக்கின்றார். மற்றுமொரு போராளி கூறினார் பிரபாகரன் உயிருடன் இருந்தால் தான் உங்களுக்கு என்ன உயிருடன் இல்லை என்றால் தான் என்ன நீங்கள் ஏன் அதனை அலட்டிக்கொள்ளுகின்றீர்கள் இலங்கை அரசு தான் கூறிவிட்டதே பிரபாகரன் இறந்துவிட்டார் என்று அண்ணியை எப்படி காப்பாற்ற வேண்டும் என்பது எங்களுக்கு தெரியும் அப்படியிருந்தால் நாங்கள் அவரோடு வெடித்து சிதறியிருப்போம் நாங்கள் இன்றும் உயிரோட்டமாக வெளிநாடுகளிலே இருக்கின்றோம். ஏற்ற நேரத்தில் நாங்கள் வருவோம் என்ற தொனிப்பொருளிலே அவர்களும் பேசியிருக்கின்றார்கள். எனவே இதில் யார் கூறுவதை நம்புவது யார் கூறுவதை நம்பாமல் இருப்பது என்ற கேள்விகள் எல்லாம் எழுப்பப்பட்டுள்ள நிலையிலே இலங்கை அரசாங்கம் பாராளுமன்றத்திலேயே கூட இதனை ஒரு கருத்தில் எடுக்கலாம்.

அதாவது பிரபாகரன் அல்லது பொட்டு அம்மான் இருவரும் இறந்து விட்டார்கள் என்ற ஒரு விடயத்தை அவர்கள் பாராளுமன்றத்திலே கூறிவிட்டால் அடுத்தகட்ட நகர்வுகள் என்ன என்பது பற்றி தமிழ் தரப்பு சிந்தித்து செயற்படலாம். இந்திய அரசாங்கத்தினுடைய அரசியல் தலைவர்களை கேட்டால் கூட டீ.என்.ஏ பரிசோதனை இன்னமும் நடத்தப்படவில்லை அதனை நடத்துவதற்கான வசதிகள் இலங்கையில் அப்பொழுது இல்லை தற்பொழுது அந்த பரிசோதனை செய்வதாக இருந்தால் 4 நாட்கள் தேவைப்படும் என்ற ஒரு நிலைப்பாடு இருக்கின்றது என்றெல்லாம் கூறியிருக்கின்றார்.

எனவே தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்பதை வைத்து அரசியல் செய்பவர்கள் தயவு செய்து அரசியல் செய்ய வேண்டாம் அவரது தியாகத்தை போராட்டத்தை கொச்சைப்படுத்தாது உங்களது நிலைப்பாட்டை நீங்கள் நிலைநிறுத்துவதற்காக தேசியத் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்று கூற வேண்டாம். அவ்வாறு தமிழ் மக்கள் தமிழினத்திற்காக மீண்டும் ஒரு போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றாலும் அவர் வருகின்ற ஒரு சூழல் உருவாகும் அல்லது அவர் இறந்து விட்டார் என்ற செய்தியும் கூட காலப்போக்கில் வரலாம். இடியமீன், கடாபி, சுபாஸ்சந்திரபோஸ், நேத்தாஜி, பிடல் கஸ்ரோ போன்று தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தனக்கான ஒரு இடத்தை மக்கள் மத்தியில் எடுத்து வைத்திருக்கின்றார்.

எனவே இவரது போராட்டத்தை தியாகத்தை கொச்சைப்படுத்தாது ஒரு நேர்த்தியான அரசியலை இந்த அரசாங்கம் செய்ய வேண்டும் இன்று இலங்கையில் உள்ள புலனாய்வாளர்கள்பிரபாகரன்இருக்கின்றாரா? இல்லையா? என்ற செய்தியை பரப்புபவர்கள் யார் அதனை எவ்வாறு செய்கின்றார்கள் அவர் உண்மையில் கொலை செய்யப்பட்டுவிட்டார் என்றால் இந்த அரசாங்கம் கதிகலங்க தேவையில்லை. ஒரு சுமூகமான தீர்வை மக்களுக்கு கொடுப்பதற்கு பதிலாக ஒரு பதட்டமான சூழலை இந்த அரசாங்கம் இந்தியாவுடன் இணைந்து உருவாக்குகின்றது என்று தான் கூறவேண்டும். இதற்கு எம்தமிழ் மக்கள் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை தொடர்ந்தும் கெடுபிடிகள் வருகின்ற ஒரு சூழல் உருவாக்கப்பட்டாலும் எமது தமிழினத்திற்கான விடுதலை, அரசியல் தீர்வு என்பது மிக விரைவில் எட்டப்பட வேண்டும். வடகிழக்கிணைந்த ஒரு தமிழர் தாயகம் உருவாக்கப்பட்டு அதில் தமிழ் மக்களுக்கான தீர்வு வழங்கப்பட வேண்டும்.

–துரியோதரன்–


# உலக வலம்

## கியூபாவில் பற்றி எரியும் காட்டுத் தீ

கரீபிய நாடான கியூபாவில் ஒரு வார காலமாக கட்டுக்கடங்காமல் பற்றி எரிந்து வரும் காட்டுத் தீயை அணைக்க முடியாமல் தீயணைப்பு வீரர்கள் திணறி வருகின்றனர். ஹோல்குயின் மாகாணத்திலுள்ள வனப்பகுதியில் கடந்த சனிக்கிழமை பரவிய காட்டுத் தீ சுமார் 2 ஆயிரத்து 200 ஏக்கர் பரப்பளவில், பற்றி எரிந்து வருகிறது. கியூபா பாதுகாப்புப் படையின் தீயணைப்பு வீரர்கள் விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் மூலம் தீயைக் கட்டுப்படுத்த போராடி வருகின்றனர்.

காட்டுத் தீயால் அப்பகுதி முழுவதும் புகைமூட்டமாகவும், வானம் செந்நிறமாகவும் காட்சியளித்தது. வனத் தோட்டங்கள் மற்றும் கோப்பி பயிர்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, வனவிலங்குகள் மற்றும் தாவரங்களுக்கும் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது என கியூபாவின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் நிபுணர் ரெய்னியர் ராமிரெஸ் தெரிவித்துள்ளார்.

கியூபாவில் ஏற்கனவே ஜனவரி மாதத்தில் 80 காட்டுத் தீ ஏற்பட்டுள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேற்கு மண்டலத்தில் உள்ள பினார் டெல் ரியோ மற்றும் ஆர்டெமிசா மற்றும் நாட்டின் மத்திய-கிழக்கு பகுதியில் உள்ள காமகுய் மற்றும் ஹோல்குயின் ஆகியவை காட்டு தீயினால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளாகும்.



## பிரபல ஹாலிவுட் தயாரிப்பாளர் ஹார்வி வெய்ன்ஸ்டீனுக்கு மேலும் 16 ஆண்டு சிறை

ஆஸ்கார் விருது பெற்ற பிரபல ஹாலிவுட் தயாரிப்பாளர் ஹார்வி வெய்ன்ஸ்டீன் (வயது 68) தன்னிடம் பட வாய்ப்பு கேட்கும் நடிகைகளை படுக்கைக்கு அழைத்து பாலியல் வன்கொடுமை செய்ததாக "மீடூ"வில் புகார் கூறப்பட்டது.

ஹாலிவுட் நடிகைகள் ஏஞ்சலினா ஜோலி, ராஸ் மெக்கோவன், அன்னபெல்லா, ஜேன் டோ உள்ளிட்ட 70 க்கும் மேற்பட்ட பெண்கள் பாலியல் புகார் கூறினார்கள். இந்த புகார்கள் குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்தனர்.

2006 இல் தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக திரைப்பட தயாரிப்பு பெண் நிர்வாகி மிமி ஹலேயியும், 2013 இல் தன்னை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியதாக நடிகை ஒருவரும் தொடர்ந்த வழக்குகளில் ஹார்வி வெய்ன்ஸ்டீனுக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து கடந்த 2020 ஆம் ஆண்டு அமெரிக்க கோர்ட்டு தீர்ப்பளித்தது. தொடர்ந்து அவர் சிறையில் அடைக்கப்பட்டார். சூழலில் 2013 ஆம் ஆண்டு ஹார்வி வெய்ன்ஸ்டீன் தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக இத்தாலி நாட்டை சேர்ந்த நடிகை தொடர்ந்த வழக்கை லாஸ் ஏஞ்சல்ஸ் நகர கோர்ட்டு விசாரித்து வந்தது. இதில் ஹார்வி வெய்ன்ஸ்டீன் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதை தொடர்ந்து அவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார்.

இந்த நிலையில் இந்த வழக்கில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகர கோர்ட்டு அன்று(23)தீர்ப்பு வழங்கியது. அதன்படி நடிகையை பாலியல் வன்கொடுமை செய்ததாக குற்றத்துக்காக ஹார்வி வெய்ன்ஸ்டீனுக்கு 16 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.



## புதிய நாணயத்தாளை வெளியிட்ட உக்ரைன்

உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா நடத்தி வரும் போர் ஓர் ஆண்டை நிறைவு செய்ய உள்ளது.

போரினால் பாதிப்பு அடைந்துள்ள உக்ரைனுக்கு அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் நிதியுதவி வழங்கி வருகின்றன.

ரஷ்யா, உக்ரைன் இடையே பனிப்போர் நிலவியதன் தொடர்ச்சியாக 2022 பெப்ரவரி-24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது.

இந்நிலையில், போர் தொடங்கி ஓராண்டு நிறைவடைவதையொட்டி உக்ரைன் மத்திய வங்கி அன்று(23)புதிய நாணயத்தாள் அச்சடித்து வெளியிட்டுள்ளது.



## ஐரோப்பிய ஒன்றியத்தின் பணியாளர்கள் TikTok பாவிப்பதற்கு தடை

ஐரோப்பிய ஒன்றியத்தின் பணியாளர்களுக்கு சீன செயலியான டிக் டொக் பாவிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன்படி, எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதிக்குள், ஐரோப்பிய ஒன்றிய பணியாளர்கள் தங்கள் தனிப்பட்ட தொலைபேசிகள் மற்றும் கணினிகளில் உள்ள டிக் டொக் செயலியை நீக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

டிக்டொக் செயலி மூலம் சினா தனிப்பட்ட நபர்களின் தரவுகளை திருடுவதாக நீண்ட காலமாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில்,ஐரோப்பிய ஒன்றியத்தினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# விளையாட்டு

## அகில இலங்கை திறந்த மட்ட கராத்தே போட்டியில் வீர, வீராங்கனைகள் சாதனை





கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில், 2023.02.16 அன்று நிப்போன் கராத்தே சங்கம் இலங்கையின் ஒழுங்கமைப்பில், அகில இலங்கை திறந்த மட்ட கராத்தே போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது.

இதில் வவுனியா Shotokan Karate do Self Defence Academy இன் பயிற்றுவிப்பாளர்கள் சிகான் T.P.Theneskumar, Sensei G.Gnanakeethan அவர்களின் தலைமையில், மாணவர்கள் பங்குபற்றி சாதனை படைத்து, வவுனியா மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

**KUMITE EVENT**

Gold medal
1. G.Gnanakeethan
2. T.Kosiya

Bronze medal
1. B.Sheronya

**KATA EVENT**

Silver medal
1. A.M.Pawla Regina
2. B.Sheronya

Bronze medal
1. G.Gnanakeethan

பயிற்சிகளை வழங்கி நெறிப்படுத்திய, சிகான் T.P Theneskumar அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## வரலாற்றில் முதல் முறையாக றக்பி உலக சம்பியன் வெற்றிக்கிண்ணம் இலங்கையில்!

றக்பி உலகக் கிண்ணத் தொடர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் பிரான்ஸில் ஆரம்பமாகவுள்ளது. இந்தப் போட்டித் தொடரில் வெற்றியீட்டி உலக சாம்பியனாகும் அணிக்கு பரிசளிக்கப்படும் வெற்றிக்கிண்ணம் இந்நாட்களில் காட்சிப்படுத்தப்படுகின்றது.

அந்த வகையில் முதல் தடவையாக றக்பி உலக சம்பியன் வெற்றிக்கிண்ணம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதுடன் அன்று (22) கண்டி நித்தவெல றக்பி மைதானத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டு றக்பி உலக சம்பியன் பட்டத்தை வென்ற தென்னாபிரிக்க அணியில் இடம்பெற்ற வீரரான பிறையன் ஹபானா தலைமையிலான குழு வெற்றிக்கிண்ணத்தை ஏந்திவந்ததும் குறிப்பிடத்தக்கது.





# இன்றும் வாழ்கின்றான் ஒரு தலைவன்

ஒரு இனத்தின் விடிவிற்காய்
ஓடாய் தேய்ந்து போர்களத்தில்
போராடியவன் – இன்றும் வாழ்கின்றான்

முப்பது வருட இனவாத யுத்தத்தில்
எதிரிக்கு மட்டுமல்ல – இந்த உலகிற்கே
சிம்ம சொப்பனமாக திகழ்பவன்
இன்றும் வாழ்கின்றான்

எம் தலைவன் மரணத்தில் இத்தனை மர்மங்களா
கடலில் வீசியதாக கூறுகின்றான்
சரணடைந்ததாக கூறுகின்றான்
தற்கொலை செய்து கொண்டதாக கூறுகின்றான் – ஆனால்
மரண சான்றிதழ் மட்டும் தரமுடியாது என்கின்றார்கள்
இது என்ன கொடுமை இறைவா!

சும்மா பேரை கேட்டாலே அதிருதில்ல
அது நம்ம தலைவனின் தில்லடா
இனவெறி காடையர்களே
காட்டிக்கொடுக்கும் எட்டப்பன் வாழ்ந்த தேசத்தில்
உத்தமனாய் வாழ்ந்தவன் எம் தலைவன்

துரோகத்தனத்தால் எம் போராட்டத்தை
நசுக்க முயற்சித்தவர்களின்
நாசகார சதி வலைகளை இறுதிவரை
எதிர்த்து நின்றவன் அவன்

இவன் பெயர் கேட்டால் எமகர்மனுக்கே
வியர்வை வரும்
இன்றும் வாழ்கின்றான் உலகெங்கும் வாழும்
தமிழ் உணர்வாளர் உள்ளத்தில்
தமிழ் இனத்திற்கே ஒரு வரலாறு
எழுதிய தவப்புதல்வன் – எம் தலைவன்

உயர்வான எண்ணமும் விரிவான சிந்தனையும்
நேர்மையான செயல்ப்பாடும் கொண்ட எம் தலைமகனை
எவராலும் விழக்க முடியாது என்பது தான் யதார்த்தம்

அமைதியாய் இருக்கின்றான் என்பதற்காக
அடங்கி இருக்கின்றான் என்று அர்த்தப்படாது
ஆளுமையுடன் மீண்டும் – எம் இனத்தின்
விடுதலையோடு வீறு கொண்ட புலியாய் எழுந்து வருவான்
அப்போது புரியாதவனுக்கும் புரியும்

காட்டிக் கொடுக்கும் தமிழ் இன துரோகிகளே
வருவான் – எம் தலைவன் உங்கள்
கதையை முடித்து எழுத

அழு குரல் கேட்கும் தாயக பூமி எங்கும்
எம் தலைவன் வருகையால்
செழித்து ஓங்கும் எம் ஈழதேசம் – அதுவரை தான்
அமைதியாக வாழ்கின்றான் எம்தலைமகன்

– தொல்காப்பியன்–





















இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 26.02.2023 அன்று வெளியிடப்பட்டது.